இனிய
January : 2017 Volume : 14 Issue : 6 Rs.20/-

# நந்தவனம்

மக்கள் மேம்பாட்டு மாத இதழ்
www.iniyanandavanam.com
ஜனவரி : 2017 கொடி : 14 மலர் : 6 விலை : ரூ.20/-



புத்தர் சிலைகள் வைக்கப்படுவது தமிழர்களை அச்சுறுத்துகின்றன

ஈழத்து பத்திரிகையாளர் பாரதி

## சமூகம் என்பது ஒரு வகுப்பறை

கவிஞர் தங்கம் மூர்த்தி

20வது ஆண்டு விழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LIMRABAGS®

FOR EVERYONE OF THE WORLD!

M SADIK BASHA
PROPRIETOR

LIMRABAGS, INDIA
MOBILE: +91 9751316053
E MAIL: limrasadik1@gmail.com
visit us: facebook.com/limrabags

Quality Management System Certified ISO 9001:2008 LIMRA BAGS

COSMO®
The universal brand!



## LIMRA BAGS

**MANUFACTURER**
NO.14 PENSIONER STREET, TRICHY, INDIA

**TRADER**
FENGXIAN DISTRICT, SHANGHAI CHINA

**WHOLESALER**
NO.7/60 VIKHROLI (E), MUMBAI INDIA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிய நந்தவனம்" 20 வது ஆண்டு மலருக்கு ஆதரவு வழங்கிய கனடிய வர்த்தக அன்பர்கள் சிலர்.


Century 21
Innovative Realty Inc
For all your Real Estate Needs
**Sameem Mohamed**
**416 298 8383**



STAY BLESSED..
Re/Max Hall of Fame Award Recipient
**KEN KIRUPA**
REAL ESTATE SALES REPRESENTATIVE
Selling Lifestyles, Not Just Homes!



வீடு வாங்க விற்க
அழையுங்கள்

RE/MAX HALL OF FAME
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
416.830.8191
416homes.com | kenkirupa@gmail.com
203-1265 Morningside Ave, Toronto, ON. M1B 3V9 | P 416.287.2222 | F 416.282.4488

**Baskaran Sinnadurai**
Broker
வீடு.வியாபாரம்.மற்றும் வர்த்தக-நிலையம் ஆகியன வாங்க-அல்லது விற்கவோ என்னை அழைக்கவும்.
Commercial-Industrial-Home
Office -Retail-Special Purpose
416 880 8585



HomeLife/GTA Realty Inc
1711 Mccowan Rd
Suite # 206
Toronto , ON
M1S 2Y3, Canada

**NKS** Drapery & Blinds
Decorated more then 100,000 windows with more than 1,000,000 yards of fabric.
Call Us For Free Consultation



Ketha Nadarajah
Tel: 416 321-6420
210 Silver Star Blvd, Unit # 825
Scarborough, ON. M1V 5J9

Home Life Today Realty Ltd. Brokerage.
For all Your Real Estate Needs...



Vallikkannan Maruthappan
Sales Representative
Tel:416 880 6051
Office: 416 298 3200
www.mvkhome.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jagadguru

**SRI SHANKARA COLONY**

Launches its new Project



# SRI RANGA COLONY

Pulivalam, Near Srirangam, Trichy, Tamilnadu

**Mega Gated Community**
**With D.T.C.P. Norms**

**PRICE**
**₹350/-**
**Per Sqft.**

**Site Dimension 30x50 sqft.**
**(1500 sqft.)**

**SPECIAL**
**LAUNCH OFFER PRICE**
**₹299/-**
**Per Sqft.**




**Plus ₹100/- per Sqft. towards 10 years maintenance (Refundable Security Deposit)**



**Promoted by**
**Sri T.V. Varadarajan** - Founder & CEO
**98450 12158**

**Please Visit**
www.shankaracolony.com
95355 88711 / 88700 01704
shankaracolony@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய
# நந்தவனம்
மக்கள் மேம்பாட்டு மாத இதழ்

ஜனவரி : 2017 கொடி : 14 மலர் : 6

ஆசிரியர் / வெளியீட்டாளர்
**த.சந்திரசேகரன்**
பேச : 94432 84823

இணையாசிரியர்கள்
**முனைவர் கீரைத் தமிழன்**
**முனைவர் க.திலகவதி**
எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி., (தமிழ்) எம்.எஸ்ஸி (யோகா)

ஆசிரியர் குழு
**முகமது அபூபக்கர் சித்திக்**
**கவிஞர் ஆ. உமாபதி சிங்கப்பூர்**
**கவிஞர் கீதா ராணி**

ஆலோசகர்கள்
**புலவர் தியாகசாந்தன்**
மருத்துவக் கலாநிதி **வே.த.யோகநாதன்**

நிழற்படக் கலைஞர்
**டார்லிங் பிரபு**

சட்ட ஆலோசகர்
**வி.ரங்கராஜன்** M.Com., B.L.,

ஆலோசனைக்குழு
ஆர்.என். லோகேந்திர லிங்கம், கனடா
தமிழ் நெஞ்சம், பிரான்ஸ்
அந்தனி ஜீவா, இலங்கை
பாடும் மீன் அ.ஸ்ரீகந்தராசா, ஆஸ்திரேலியா
ஆ.செல்வபாரதி, மலேசியா
வேலணையூர் பென்னண்ணா, டென்மார்க்
தம்பி புவனேந்திரன், ஜெர்மெனி
வவுனியூர் உதயணன், இலண்டன்
கல்லாறு சதீஸ், சுவிஸ்
என்.எஸ்.பிரபு, நார்வே
வலங்கைமான் நூர்தீன், துபாய்.
வதிலை பிரதாபன், மும்பை
எஸ்.பி. இந்திரன், மியான்மர்

தொடர்புக்கு
த.சந்திரசேகரன்
**இனிய நந்தவனம்**
தபால் பெட்டி எண் : 214, நம்பர் 17,
பாய்க்காரத் தெரு உறையூர், திருச்சி – 620 003.
தமிழ்நாடு. **பேச : 94432 84823**
மின்னஞ்சல் : nandavanam10@gmail.com

இதழ் வடிவமைப்பு Mob. : 96 77 93 77 94
kannan's... Kanish graphic



# நுழைவாயில்...

இனிய
## நந்தவனம்
## 20ம் ஆண்டு தொடக்கம்

இனிய நந்தவனத்திற்கு இருபது வயதாகிறது. நந்தவனத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்களாலேயே இது சாத்தியமாகி இருக்கிறது என்றே நம்புகிறோம். இன்றைய பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் இருபது ஆண்டைக் கடந்து வந்திருக்கிறோம் என்பது தொடர் முயற்சிக்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்கிறோம்.

இன்றளவில் நந்தவனத்தின் மீது கொண்ட அன்பாலும், அக்கறையாலும் பல்வேறு வகையில் உதவி வரும் அத்துணைப் பேருக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். வாசகர்கள், எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள் இந்த மூன்று தரப்பினரின் முழுமையான ஒத்துழைப்புந்தான் நாங்கள் இந்த உயரத்தைத் தொட பெரிதும் உதவியிருக்கிறது.

''சர்வதேச அளவில் பல எழுத்தாளர்களை ஒருங்கிணைத்து வெளிவரும் ஒரே இதழ் இனிய நந்தவனம் மட்டுமே!'' என்று இயக்குநர் தங்கர் பச்சான் பாராட்டியது இனிய நந்தவனத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய

"This Little journal is published with Financial assistance from the Central Institute of Indian Languages (Ministry of Human Resource Development at Higher Educational, Govt.of India), Man'sasagangotri, 'Mysore - 570006 sanctioned vide letter F.53-10(1)/2012-13/TAM/LM/GRNT date Oct.6th 2015. under the scheme of Grant-in-Aid



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகாரமாகவே எண்ணிப் பெருமைப் படுகிறோம்.

ஊடகத்தளம் : நவீனமாகிப்போன இன்றையச் சூழலில் அச்சு ஊடகத்திற்கு இன்னும் வரவேற்பு இருக்கிறது என்பதற்கு எங்களின் வெற்றியே உதாரணம் என்று சொல்லலாம். இந்த இருபதாண்டுப் பயணத்தில் எத்தனையோ காயங்கள் ஏற்பட்டிருந்தாலும், வெற்றி விழா கொண்டாட்டத்தில் எல்லாம் மறந்து விடுகிறது.

கடந்த ஆண்டு 2016 தமிழகத்திற்கு சோக ஆண்டாகவே கடந்து போயிருக்கிறது. தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களின் மறைவு தமிழக மக்களுக்கு ஆற்ற முடியாத சோகத்தை தந்துவிட்டுப் போயிருக்கிறது. ஜெயலலிதாவின் மறைவிற்கு பின்னால் அரசியல் சூழலில் மிகப்பெரிய வெற்றிடம் உருவாகியுள்ளது போன்ற ஒரு தோற்றத்தையும் நாம் பார்க்க முடிகிறது. அவர் இல்லாத அ.தி.மு.க தடுமாற்றமும், ஏமாற்றமும் நிறைந்த ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்ற சூழலும் எழுந்துள்ளது.

இராணுவ கட்டுப்பாடு போல இருந்த ஜெயலலிதா தலைமையிலான அரசு சலசலத்துப் போயுள்ளது என்பது மட்டுமல்லாமல் தலைமைச் செயலாளர் ராம் மோகனராவ் மீதான குற்றச்சாட்டால் நம்பிக்கையற்றத் தன்மையும் உருவாகியுள்ளது என்கிற பரவலான கருத்தையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இன்றும் சாதாரண பொதுமக்கள் இரண்டாயிரம் ரூபாய்க்காக வரிசையில் நின்று கொண்டே இருக்கும் போது ஒரு சிலரிடம் மட்டும் எப்படி கட்டுக்கட்டாக பணம் குவிந்து கிடக்கிறது என்ற கேள்வியும் பலமாக எழுந்துள்ளது. நல்லத் தீர்வுகள் வர வேண்டும் என்பதே நம் எல்லோருடைய எதிர்பார்ப்பும்.

இந்தப் புதிய ஆண்டில் மாற்றங்கள் வரும், நல்லது நடக்கும் என்று நம்புவோம்.

**கருவியும் காலமும் செய்கையும் செய்யும்**
**அருவினையும் மாண்டது அமைச்சு** குறள் 631

செயலுக்கேற்ற கருவி, காலம், செய்யும் முறை, செயலின் அருமை ஆகியவற்றை நன்கு சிந்தித்து அறிபவனே நல்ல அமைச்சன்

– ஆசிரியர் குழு

# இனிய நந்தவனம் சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| இரண்டாண்டுக் கட்டணம் | : | ரூ. 500/- |
| நான்காண்டு கட்டணம் | : | ரூ. 1,000/- |
| புரவலர் நன்கொடை | : | ரூ. 5,000/- |

**வெளிநாடுகளுக்கு**

| | | |
|---|---|---|
| இரண்டாண்டுக் கட்டணம் | : | $. 40/- |
| நான்காண்டு கட்டணம் | : | $. 80/- |
| புரவலர் நன்கொடை | : | $. 200/- |

**சந்தா மற்றும் நன்கொடைகளை கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தவும்.**

| | | |
|---|---|---|
| Name | : | INIYA NANDAVANAM |
| A/C No. | : | 6359906274 |
| Bank | : | Indian Bank |
| Branch | : | Thillai Nagar Branch, Trichy - 17. |
| IFSC Code | : | IDIB000T017 |
| Swift Code | : | IDIBINBBTSY |

| | | |
|---|---|---|
| Name | : | T.Chandrasekaran |
| A/C No. | : | 20015091889 |
| Bank | : | State Bank of India |
| IFSC Code | : | SBIN0003778 |
| Branch | : | Woraiyur Trichy TamilNadu |

**மேலதிக விபரங்களுக்கு :**

Editor : INIYANANDAVADAM
Post Box No. : 214,
No.17, Paikkara Street,
Woraiyur, Trichy - 620 003
Tamil Nadu.
Cell : +91-94432 84823
E-Mail : nandavanam10@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இனிய நந்தவனம் 20"



## இனிய நந்தவனம் இருபதாம் ஆண்டு விழா
## திருச்சியில் கோலாகல கொண்டாட்டம்

நாள் : 07.01.2017 சனி மாலை 5மணி

இடம் : திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கம்





**சிறப்பு விருந்தினர்கள்**

எழுத்தாளர், இயக்குநர்
**தங்கர்பச்சான்**

**கவிஞர் தங்கம் மூர்த்தி**



**ஆர்.என். லோகேந்திர லிங்கம்**
பிரதம ஆசிரியர், கனடா உதயன் வாரஇதழ், கனடா

இவ்விழாவை முன்னிட்டு 20ஆம் ஆண்டு மலர் ஒன்றும் வெளியிட இருக்கிறோம்.
மலர் சிறக்க படைப்புகள், வாழ்த்துச் செய்திகள், விளம்பரங்கள்
வரவேற்கிறோம்

தபால் பெட்டி எண் : 214, நம்பர் 17, பாய்க்காரத் தெரு உறையூர், திருச்சி – 620 003.
தமிழ்நாடு. **பேச : 94432 84823**

மின்னஞ்சல் : nandavanam10@gmail.com இணையதளம் : www.iniyanandavanam.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜிப்ரான்



"எதன் பொருட்டும் உங்களது கனவுகளை நசுக்கி விடாதீர்கள். உயிர்ப்போடு இருக்கும் இலட்சியக் கனவுகளே, உங்களின் எதிர்காலத்தை உயரத்திற்கு கொண்டு செல்லும்" என்கிறார் தென்னாப்பிரிக்காவில் வெற்றிப் பெண்மணியாய் வலம் வரும் ஹீபோங்கீலி சம்போ.

அப்படி என்ன இவர் சாதித்து விட்டார்? என்ற கேள்வி இப்போது உங்களிடம் இருந்து வருவது எனக்குப் புரிகிறது. இவரது வெற்றிக்குக் காரணம் நேர்மறையான சிந்தனை என்பதை நீங்கள் நம்ப வேண்டும். இந்தப் பெண்மணியின் வெற்றிக் கதையை தெரிந்து கொள்வதற்கு முன்னாள் நேர்மறைச் சிந்தனையால் ஏற்படும் நன்மைகள் பற்றி ஹார்வார்டு பல்கலைக் கழகம் செய்துள்ள ஒரு ஆய்வு பற்றிப் பார்ப்போம்.

வாழ்க்கையை நேர்மறையாக அணுகும் பெண்களுக்குக் கொடிய நோய்கள் வருவதற்கான ஆபத்து குறைவாக இருப்பது அண்மையில் இப்பல்கலைக் கழகம் செய்த ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வில் 70,000 பெண்கள் கலந்து கொண்டிருக்கின்றனர். இதில் நேர்மறைச் சிந்தனையுடைய பெண்களுக்கு வயதான காலத்தில் நோய்கள் வருவதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது. அதிலும் புற்றுநோய், இருதய நோய், நுரையீரல் பிரச்சனைகள், பக்கவாதம் போன்ற ஐந்து முக்கியமான நோய்களால் இவர்கள் பாதிக்கப்படுவது குறைவாக இருக்கிறது.

இதனால் எதிர்மறைச் சிந்தனையுடைய பெண்களை விட இந்தப் பெண்களின் வாழ்நாட்களில் எட்டு ஆண்டுகள் அதிகமாக இருப்பதாக இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆரோக்கியமான வாழ்க்கை, முறையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உணவுப் பழக்கம், உடற்பயிற்சி போன்ற அம்சங்களுக்கும், நீண்ட வாழ்நாளுக்கு இருக்கும் தொடர்பை நிபுணர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆனால், அவை எல்லாவற்றையும்விட நேர்மறை சிந்தனைக்கே வாழ்நாட்களை நீட்டிக்கும் ஆற்றல் அதிகமாக இருப்பதை அவர்கள் உறுதி செய்கின்றனர்.

இந்த ஆய்வை மேற்கொண்டவர்களில் ஒருவரான டாக்டர் எரிக் சிம், "நேர்மறையான சிந்தனை நம் உயிரியல் அமைப்புகளின் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது" என்று சொல்கிறார். ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் டி.எச்.ஷன் ஸ்கூல் ஆஃப் பப்ளிக் ஹெல்த் மூலம் இந்த ஆய்வு நடத்தப் பட்டிருக்கிறது.

58 வயதிலிருந்து 83 வயது வரையுள்ள பெண்களின் உடல்நலம் எட்டு ஆண்டுகளுக்கு ஆய்வாளர்களால் கண்காணிக்கப் பட்டிருக்கிறது. நோய் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை தனியாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த எட்டு ஆண்டுகளில் 4,566 பேர் இறந்திருக்கின்றனர்.

நேர்மறை சிந்தனைகளுடன் இருந்தவர்களுக்கு நோய் காரணமாக இறக்கும் ஆபத்து குறைவாக இருந்திருக்கிறது. திருமணமான பெண்கள் பொருளாதாரப் பின்னணி, நீரிழிவுப்

# நாளெல்லாம் நமக்கு வெற்றி

பிரச்சனை, உயர் இரத்த அழுத்தம், அதிகக் கொழுப்பு, மன அழுத்தம் போன்ற காரணிகளைத் தாண்டி, இது நிரூபணமாகியிருக்கிறது.

இந்த ஆய்வுக்கும் அந்த ஆப்பிரிக்கப் பெண்ணுக்கும் என்ன சம்மந்தம்? என்று நீங்கள் கேட்கலாம். கேள்விகள் கேட்பதே கூட ஒரு நேர்மறையான சிந்தனைதான். இந்த ஆய்வில் சொல்வது போல நேர்மறை சிந்தனையுடன் வெற்றிபெற்ற பெண்மணிதான் ஷிபோக்கீலி சம்போ.

தென்னாப்பிரிக்காவில் சராசரி குடும்பத்தின் குழந்தையாக பிறந்த இவர் விமானப் பணிப் பெண்ணாக வேண்டும் என்று விரும்பியவர். ஆனால், உயரம் போதாது என்று ஒதுக்கப் பட்டுள்ளார். அந்த நிராகரிப்பை அவர் தோல்வியாக கருதவில்லை. நேர்மறை சிந்தனையோடு மகத்தான மற்றொரு வாய்ப்பு தனக்காக காத்திருப்பதாகவே அவர் நம்பினார்.

"எதன் பொருட்டும் உங்களது கனவுகளை நசுக்கி விடாதீர்கள். உயிர்ப்போடு இருக்கும் இலட்சியக் கனவுகளே, உங்களின் எதிர்காலத்தை உயரத்திற்கு கொண்டு செல்லும்"

அந்த நம்பிக்கையும் அதற்கான முயற்சிகளும் அவரைத் தொடர்ந்து வழி நடத்தின. விமானப் பணிப்பெண்ணாகத் தேர்வாகாதவர் சில ஆண்டுகளிலேயே "விமான சேவை ஆரம்பித்த முதல் ஆப்பிரிக்க பெண்" என்ற சாதனையைப் படைத்துள்ளார். சின்னக் குழந்தையாகத் தெருவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடும் போது தலைக்கு மேலே பறக்கும் விமானத்தைப் பார்த்துக் குதூகலிப்பாராம் சம்போ. மெதுவாக அவர் மனதில் விமானப் பணிப்பெண்ணாக வேண்டும் என்ற கனவு உருவாகிறது. அந்தக் கனவு நனவாகும் நாளுக்காகக் காத்திருக்கிறார்.

அந்த நாளும் வந்தது. விமான சேவை நிறுவனம் நடத்திய அனைத்துத் தேர்வுகளிலும் சம்போ எளிதாகத் தேறினார். ஆனால், உடற்தகுதியின் போது உயரம் போதாது என்று நிராகரிக்கப் படுகிறார். குழந்தைப் பருவத்திலிருந்தே அவரோடு பயணித்தக் கனவு கை நழுவிப் போகிறது. அதிலிருந்து அவரால் மீண்டு வர முடியவில்லை. படிப்பே மருந்து என்று முடிவு செய்தவர் மேற்படிப்புப் படிக்க ஆரம்பித்தார். புடம் போட்ட தங்கமாக மாறினார்.

ஏமாற்றத்திலிருந்து மீண்ட போதும் உயரப் பறக்க வேண்டும் என்று தனது கனவு உயிர்ப்புடன் இருப்பதாக உணர்ந்தார். ''விமானத்தில் பறக்க விமானப் பணிப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமா?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டார். அதற்கு விடைதேடும் முயற்சியாய் புதிய விமான சேவை ஒன்றை ஆரம்பிக்க முடிவு செய்தார்.

அவரைச் சுற்றியிருந்தவர்கள் வாயடைத்துப் போனார்கள். ''விமானப் பணிப்பெண் வேலை கிடைக்காத ஏக்கத்தில் இந்தப் பெண்ணுக்கு ஏதோ ஆகிவிட்டது'' என்றார்கள். எதையும் கண்டு கொள்ளாமல் எடுத்த காரியத்தில் படிப்படியாக முன்னேறினார். சொத்துக்களை விற்றார். மிகப்பெரும் விமான சேவை நிறுவனமான எம்.சி.சி ஏவியேசன் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு எஸ்.ஆர்.எஸ் ஏவியேசன் நிறுவனத்தை உருவாக்குகிறார்.

இன்று ஆப்பிரிக்க நாடுகளில் பிரத்யேகமான விமானங்கள், ஹெலிகாப்டர்கள் மூலம் சுற்றுலா, வி.ஐ.பி பயணங்கள், வர்த்தகப் பயன்பாடுகள் என்று சம்பே உருவாக்கிய விமான சேவை நிறுவனம் விரிந்து வளர்ந்திருக்கிறது. ஆண்கள் அதிகம் புழங்கும் துறையாக இருந்த விமான சேவையில் மாற்றத்தைக் கொண்டு வர முடிவு செய்து, பெண் விமானிகளுக்கு முன்னுரிமை அளித்து வருகிறார். ஆப்பிரிக்கப் பெண்களுக்கு தனிப்பட்ட பயிற்சி அளித்து பணியில் சேர்த்துக் கொள்கிறார்.

அடுத்த கட்டமாக உலகளாவிய சேவைகளில் தனது நிறுவனத்தை உயர்த்தும் முயற்சியில் இறங்கி இருக்கிறார். "விமானப் பணிப்பெண்ணாக நான் நிராகரிக்கப் பட்டதற்கு நன்றி சொல்கிறேன். இல்லா விட்டால் விமான சேவையை நடத்தும் அளவுக்கு வந்திருக்க மாட்டேன்'' என்று பெருமிதப் படுகிறார். தோல்வியை நேர்மறை சிந்தனையுடன் பார்த்ததாலேயே சம்போவால் இந்த உயரத்தைத் தொட முடிந்திருக்கிறது. ஆக எண்ணத்தில்தான் நமது எல்லா வெற்றியும் குவிந்துள்ளது.

''அவநம்பிக்கையே பலவீனத்திற்கு வழி வகுக்கிறது. நம்பிக்கையே ஆற்றலுக்கு வழி வகுக்கிறது'' என்பார் அமெரிக்கத் தத்துவஞானி வில்லியம் ஜேம்ஸ். சம்போவின் ''என்னால் முடியும்'' என்ற நம்பிக்கையே வெற்றியைத் தந்துள்ளது. எனவே எண்ணத்தை நேர்மறையான பாதையில் மாற்றுவோம். சரியான துறையைத் தேர்ந்தெடுத்து நம்பிக்கையோடு முயற்சி செய்வோம். நாளெல்லாம் நமக்கு வெற்றிதான் என்று நம்புவோம். முயற்சி செய்யுங்கள்!! நீங்களும் இன்னொரு சம்போவாகலாம்.


## இனிய நந்தவனம் இனிது வாழ்க!

பத்திரிகைப் பணியில் 20 ஆண்டுகள். இன்னும் கொஞ்ச தூரத்தில் கால் நூற்றாண்டு வரவேற்கிறது. இதழ் பணிகளுக்கிடையில் நூல் பணி. நூல் பணிக்கிடையில் உள்நாட்டு, வெளிநாட்டு இலக்கியப் பணி. உலக அளவில் படைப்பாளர்களை ஈர்த்து இதழியல் பணியைச் செம்மையாய் செய்து வரும் என் இனிய நண்பரும், இனிய நந்தவனம் ஆசிரியருமான திரு.சந்திரசேகரன் அவர்களுக்கு வாழ்த்துக்களும், பாராட்டுக்களும்

- பாரதிவாணர் சிவா
ஆசிரியர்,
புதுவை பாரதி மாதஇதழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆதித்திய குழுமத்தின் பொது விஞ்ஞானக்கூடம்

மும்பையின் பிரபலமான கண் மருத்துவனையான ஆதித்திய குழுமத்தின் ஆதித்திய ஜ்யோத் ரிசெர்ச் இன் விஷன் இன் ஆப்தோல்மோலாஜி அதனுடைய முதன்மை நிர்வாக அதிகாரியான டாக்டர் ராதிகா கிருஷ்ணன் அவர்களது முன்னேற்பாட்டில் மும்பையின் தானே மாவட்டத்தில் வைத்து நிறுவப்பட்டது. மும்பையின் நவீன உட்கட்டமைப்புடன் கூடிய பொது விஞ்ஞானக் கூடமும் நிறுவப்பட்டது. ஜப்பானின் பேராசிரியர் டகேஷி ஐவாட்டா அவர்களின் மேற்பார்வையில் இந்தியாவிலேயே வைத்து இதற்கான ஆராய்ச்சி வரவிருக்கின்ற காலங்களில் நடைபெறவிருக்கின்றது.

எங்களது சி.இ.ஓவான டாக்டர் ராதிகா கிருஷ்ணன் அவர்கள் இதற்கு முன்பாகவே இதுபோன்ற பல ஆராய்ச்சி திட்டங்களை முன்னின்று நடத்தியிருக்கின்றார்கள். மும்பையின் குடிசைப்பகுதிகளில் குறிப்பாக ஆசியாவிலேயே மிகப்பெரிய குடிசைப் பகுதியான தாராவிப் பகுதியில் உள்ள வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருக்கின்ற மக்கள் மத்தியில் விழிகளில் பார்வை சம்பந்தமான "எபிடெமியாலாஜிக்கல் ஸ்டடிஸின்" முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்ற கல்வியை பரப்பியுள்ளார்கள்.

அதுமட்டுமல்லாது தற்போது ஆப்தோல்மோலாஜியில் அடிப்படை அறிவியல் ஆராய்ச்சியையும் தொடங்கியிருக்கின்றார்கள். இத்தகு சிறப்பு நிறைந்த பணியின் முதன்மை நிர்வாக அதிகாரியாக டாக்டர் ராதிகா கிருஷ்ணன் அவர்களும், பேராசிரியர் ராஜவர்தன் ஆசாத் டீனாகவும், பேராசிரியர் குமாரமாணிக்கவேல் ஆராய்ச்சி இயக்குனராகவும், டாக்டர் ரூபேஷ் அகர்வால் விசிட்டிங் கிளினிக்கல் ரிசெர்ச் டைரக்டராகவும் மற்றும் சிங்கப்பூர் டாக்டர் சித்திட்டா நாரே போன்ற மருத்துவ விஞ்ஞானிகளும் கலந்துகொண்டு மக்கள் பணியாற்றவுள்ளனர்.

இத்தகு சிறப்பான ஒரு நிகழ்வை முன்னின்று நடத்தவிருக்கின்ற எங்களது சி.இ.ஓ டாக்டர் ராதிகா கிருஷ்ணன் அவர்களை மனமார பாராட்டுகின்றேன் என்று ஆதித்திய அறக்கட்டளையின் நிறுவன இயக்குனரும் பத்மஸ்ரீ விருத்தாளருமான டாக்டர் எஸ்.நடராஜன் அவர்கள் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேர்காணல்

# புத்தர் சிலைகள் வைக்கப்படுவது தமிழர்களை அச்சுறுத்துகின்றன

ஊடகங்களால் ஆட்சியாளர்களை விமர்சிக்க முடிகின்றது. கடத்தப்படுவோம், கொல்லப்படுவோம், கண்காணிக்கப் படுவோம் என்று அச்சமின்றிப் பணியாற்றக் கூடிய நிலை உருவாகியிருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்று அண்மைக்கால இலங்கையின் பத்திரிகை சூழல் குறித்து, ஈழத்து மூத்தப் பத்திரிகையாளரும், தினக்குரல் ஞாயிறு பதிப்பு ஆசிரியருமான பாரதி அவர்கள் நந்தவனத்துக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்.

**தாங்கள் ஊடகதுறையில் நுழைந்தது பற்றி சொல்லுங்கள்**

யாழ்ப்பாணத்தில் ஒரு மாணவனாக இருந்த காலப்பகுதியில்தான் 1985 இல் ஊடகத்துறையில் இணைந்துகொண்டேன். ஆயுதப்போராட்டம் உச்சமடைந்திருந்த அந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகிய ஈழமுரசு பத்திரிகையில் ஒரு பத்திரிகையாளராக இணைந்து கொண்டேன். ஊடகத்துறையில் இருந்த ஆர்வமும், குடாநாட்டில் அப்போது காணப்பட்ட நிலையும் ஊடகத்துறையில் பிரவேசிப்பதற்கு என்னை ஊக்குவித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை இராணுவத்தின் கட்டுப்பாடுகள் படிப்படியாக குறைந்து போராளி அமைப்புக்களின் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் அப்போது வந்திருந்த நேரம். யுத்த களத்தில் ஒரு பத்திரிகையாளராக ஆபத்துக்கள் நிறைந்த நிலையில் பணியாற்றியது மறக்க முடியாத பல அனுபவங்களைத் தந்திருந்தது. குண்டுத் தாக்குதல்களுக்குள்ளும், துப்பாக்கிச் சூடுகளுக்குள்ளும் பணியாற்றியது மறக்க முடியாத அனுபவம்.

**இன்று ஈழத்தில் ஊடக சுதந்திரம் எப்படி உள்ளது?**

ஆட்சி மாற்றத்தின் பின்னர் பெருமளவு முன்னேற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக முன்னைய ஆட்சிக் காலத்தில் இருந்த பல தடைகள் இப்போது நீக்கப்பட்டுள்ளன. மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி வந்தவுடனே தடை செய்யப்பட்டிருந்த பல இணையத் தளங்கள் மீதான தடை நீக்கப்பட்டது. ஊடகங்களால் ஆட்சியாளர்களை விமர்சிக்க முடிகின்றது. கடத்தப்படுவோம், கொல்லப் படுவோம், கண்காணிக்கப்படுவோம் என்ற அச்சமின்றிப் பணியாற்றக்கூடிய நிலை உருவாகியிருப்பது உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

இருந்தபோதிலும் சில குறைபாடுகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த வருட காலத்தில் சுமார் 40 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் இலங்கை முழுவதிலும் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் அல்லது காணாமற் போயிருக்கின்றார்கள். இதில் 3 பேரைத் தவிர்ந்த ஏனைய அனைவருமே தமிழர்கள். இவ்வாறு கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் விசாரணைகள் எதுவும் முன்னைய ஆட்சியில் நடத்தப்பட்டு, குற்றவாளிகள் நீதியின் முன்பாக நிறுத்தப் படவில்லை. அவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்ற நம்பிக்கையும் அப்போது இருக்கவுமில்லை.

கடந்த சனவரியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போது, ஊடகவியலாளர்கள் கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்தது. ஆனால், இரண்டு சிங்கள ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பான விசாரணைகளை மட்டும்தான் புதிய அரசாங்கம் மீள் விசாரணைக்கு எடுத்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் எந்தவிதமான விசாரணையும் இல்லை என்ற நிலைதான் தொடர்கின்றது. இது தொடர்பில் தமிழ் ஊடகத்துறை சார்ந்தவர்கள் அரசாங்கத்திடம் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.



கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், குற்றவாளிகள் சட்டத்தின் முன்பாக நிறுத்தப் பட்டு, பலியான ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதைத்தான் வலியுறுத்தியிருந்தோம். ஆனால், இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப் படவில்லை. தமிழ் ஊடகவியலாளர்களுக்கு ஒரு நீதி சிங்கள ஊடகவியலாளர்களுக்கு இன்னொரு நீதி என்ற நிலை தமிழ் ஊடகவியலாளர்களின் கொலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர்பில் விசாரணை நடத்தினால், புலனாய்வாளர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டிவரும், இது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்பை ஏற்படுத்தும் என அரசாங்கம் அஞ்சுவதாகவே நான் கருதுகிறேன்.

**ஈழத்தில் தற்போது தமிழர்களுக்கான பாதுகாப்பும் புனரமைப்பும் தங்கள் பார்வையில் எப்படி உள்ளது?**

முன்னைய நிலையுடன் ஒப்பிடும் போது பாதுகாப்பு நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பது உண்மைதான். இருந்தாலும் சிங்கள தீவிரவாதிகளுக்கு அஞ்சும் நிலையில்தான் அரசாங்கத்தின் செயற்பாடுகள் உள்ளன. முக்கியமாக முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ஷே இனவாதத்தை சிங்கள மக்கள் மத்தியில் தூண்டி விடலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்குள்ளது. அரசியலில் துணிந்து செயற்பட முடியாத நிலையில் இந்த அரசினால் எதனையும் சாதிக்க முடியாது என்பதே எனது கருத்து.

மீள்குடியேற்றம், புணர்வாழ்வைப் பொறுத்தவரையில் சுமார் 50 வீதம் பூர்த்தியாகியிருக்கின்றது. போர் முடிவுக்கு வந்து ஏழரை வருடங்கள் சென்றுள்ள போதும் பல விடயங்கள் நடைபெறவில்லை. யாழ்ப்பாணத்தின் வலிகாமம் வடக்கு மற்றும் முல்லைத்தீவின் சில பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் பொதுமக்களின் காணிகள் தொடர்ந்தும் இருக்கின்றது. இதனால், இன்னும் முகாம்களில் மக்கள் பலர் அகதிகளாக உள்ளனர். இராணுவக் குறைப்புக்கு அசாங்கம் தயாராக வில்லை. இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்ட பூமியாகவே யாழ்ப்பாணத்தின் சில பகுதிகள் உள்ளன.

வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் தமிழ்க் கிராமங்களில் படையினரின் ஆதரவுடன் புத்தர் சிலைகள் வைக்கப்படுவது தமிழர்களை அச்சுறுத்துகின்றது. புத்தர் சிலைகள் அச்சுறுத்தலல்ல. புத்தர் சிலைகள் வைக்கப்பட்டால் அதன் தொடர்ச்சியாக அந்த இடத்தில் பௌத்த கோவில் ஒன்று அமைக்கப்படுவதும், அதற்குப் பாதுகாப்புக்காக இராணுவம் கொண்டுவரப் படுவதும், சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப் படுவதும் வழமை.

அதனால்தான் புத்தர் சிலைகள் சிங்கள ஆக்கிரமிப்பின் சின்னமாக தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றது. இதனைவிட போரின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதான பலர் இன்னும் சிறைகளில்தான் உள்ளார்கள். அவர்கள் மீது வழக்குகள் இல்லை. ஆனால், தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை அவசியம்.

**இந்திய அரசின் உதவிகள் நம் தமிழர்களுக்கு சரியாக சென்றடையவில்லை என்ற குற்ற சாட்டு உண்மையா?**

ஆம்! அவ்வாறான குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்படுகின்றது. குறிப்பாக வீடமைப்பு விடயத்தில் இந்தியாவின் உதவிகள் உரிய முறையில் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை நாம் கேட்டுள்ளோம். இதற்கு உதவிகள் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்படாமையும், நிர்வாகப் பிரச்சினையும்தான் காரணம். பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக இதற்கான திட்டமிடலை மேற்கொண்டால், இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் எதிர்காலத்தில் வருவதைத் தவிர்க்கலாம்.

**இலங்கை அரச துறையில் தமிழர்களுக்கான பங்களிப்பு எப்படி உள்ளது?**

முன்னர் ஒரு காலத்தில் அரச துறையில் தமிழர்களின் பங்களிப்பு அதிகமாக இருந்தது. அவர்களுடைய திறமையும், அர்ப்பணிப்பான சேவையும் அதற்குக் காரணம். பல துறைகளில் தமிழர்கள் உயர் பதவிகளை வகித்தார்கள். 1956 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் இதற்கு முதலில் சாவு மணி அடித்தது. பின்னர் இனவாத நோக்கத்துடன் தமிழர்களுக்கு கதவடைப்புச் செய்யப்பட்டது. 1980 களுக்குப் பின்னர் சந்தேகம் காரணமாக தமிழர்கள் உள்வாங்கப்படவில்லை. இப்போதும் மிகவும் குறைந்தளவானவர்களே அரச துறைகளில் உள்ளார்கள்.

**தமிழக மீனவர்கள் கடல் எல்லையை தாண்டுவதாக சொல்லப்படும் குற்ற சாட்டை ஒரு பத்திரிகையாளராய் எப்படி பார்க்கிறீர்கள்?**

இந்தப் பிரச்சினை நிச்சயமாக பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்க்கப்பட வேண்டும். வடபகுதியிலுள்ள தமிழ் மீனவர்கள் நீண்டகாலப் போரினால் தமது சொத்துக்களை இழந்தவர்கள். நீண்டகாலம் தொழில் செய்ய முடியாமல் வறுமையில் வாடியவர்கள். இப்போதுதான் கடற்றொழில் செய்து தமது வாழ்வாதாரத்தைத் தேடிக்கொள்ள முற்படுகின்றார்கள்.

அரச உதவியும் இல்லாமல் தமது சிறிய படகுகளில் கடற்றொழிலுக்குச் செல்லும் போது இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அவர்களை மீண்டும் நெருக்கடியான வாழ்க்கைக்குக் கொண்டு செல்கின்றது. இந்திய மீனவர்கள் ரோலர்களில் வருகின்றார்கள். இலங்கைத் தமிழ் மீனவர்கள் சிறிய ரகப் படகுகளில் வருவதால் அவர்களை எதிர்கொள்ள முடியாத நிலை உள்ளது. இதனால், இந்த மீனவர்களின் குடும்பங்கள் மீண்டும் பட்டினி கிடக்க வேண்டிய நிலை.

ஒரு புறம் சிங்கள மீனவர்களின் அத்துமீறல். இதற்கு கடற்படையும் உதவுகின்றது. மறுபுறம் இந்திய மீனவர்களின் எல்லை மீறிய ஆக்கிரமிப்பு. அடிபட்டவனின் கால்களிலேயே மீண்டும் மீண்டும் அடி விழுகின்றது. இந்திய மீனவர்கள் இந்தப் பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். தொப்புள் கொடி உறவைப் பகைக்கவும் முடியாமல், தொடர்ந்தும் பாதிக்கப்படும் நிலையில் உள்ள இலங்கைத் தமிழ் மீனவர்களின் நிலை மிகவும் பரிதாபமானது.

**இறுதியாக ஒரு வினா எங்கள் நந்தவனம் பற்றி உங்கள் கருத்தை சொல்லுங்கள்**

நந்தவனம் சஞ்சிகையை நான் தொடர்ந்து வாசித்து வருகின்றேன். மற்றைய சஞ்சிகைளிலிருந்து பெருமளவுக்கு வித்தியாசமானதாக இதனை சந்திரசேகரன் தயாரிக்கின்றார். அதனால் பத்துடன் பதினொன்றாக இதனைப் புறக்கணித்துவிட முடியாது. இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் தமிழர்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்கான சிறப்பிதழ்களை நந்தவனம் வெளியிட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயம். இதன் மூலம் வெளிநாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இந்தப் பணியை நந்தவனம் தொடர்ந்து சிறப்பாக செய்ய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சந்திப்பு : நந்தவனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை அம்மனும் பச்ச மாமாவும்



முனைவர் கீரைத்தமிழன்
பேச : 97877 56551

மாயன்களின் மிக முக்கிய ஐந்து கடவுள்களில் ஏக்சுவா, குகூல்கண், இட்சமணா நீங்கலாக சாக் *(Chaac)* மற்றும் இக்செல் *(Ixchell)* கடவுளர்களும் முக்கியமானவர்கள். சாக் *(Chaac)* கடவுள் என்பது இங்கே மழைக் கடவுளாகும். இதன் தோற்றம் யானைத் தந்தத்தைப் போன்றதாகும். இக்கடவுள் தமிழக மரபில் மழைக் கடவுளான இந்திரனுக்கு ஒப்பிடப்படுகிறது. இந்திரனின் வாகனம் வெள்ளை யானை, எனவே யானையின் துதிக்கை இதன் உருவகமாய்ப் போற்றப் படுகிறது.

இவர்களின் மற்றொரு கடவுள் இக்செல் *(Ixchell)* ஆகும். செல் என்பது செல்வி என்பதன் சுருக்கம். எக்ஸ் என்பது பெண் ஆகும். தமிழக பண்பாட்டில் திருமணம் ஆகாதவரை செல்வி என்கிறோம். அதுவே மருவி செல்லி ஆயிற்று. பின் அதுவே செல்லியம்மன் ஆகிறது. அம்மன் வழிபாட்டில் பெண் முக்கிய இடத்தைப் பெறுகிறாள்.

அம்மனை நாம் பல்வேறு பெயர்களில் வழிபடுகிறோம். மாரியம்மன், காளியம்மன், செல்லியம்மன், பச்சையம்மன், துர்க்கை அம்மன் என்றெல்லாம் வழிபடுகிறோம். ஒவ்வொரு அம்மனும் வெவ்வேறு காப்புக் கடவுளராகப் போற்றப்படுகிறார். மாரியம்மன் மழைக் கடவுள் போல, பச்சையம்மன் பூமிக் கடவுள். அஃதாவது பசுமையின் கடவுள் இந்த இக்செல் *(Ixchell)* கடவுளும் நம் மாரியம்மன் கடவுளும் ஒரே தோற்றத்தைக் கொண்டவர்கள்.



மாரியம்மனின் தலையில் ஐந்து தலை நாகத்தைப் பார்க்கலாம். அதே போல் இக்செல் அம்மன் தலையிலும் பாம்பைப் பார்க்கலாம். மாரியம்மன் மழைக் கடவுள், இக்செல்லும் மழைக் கடவுள். இதைக் குறிக்கும் வகையில் இக்செல் *(Ixchell)* அம்மன் தண்ணீர் குடத்தை கவிழ்த்து நீரைக் கொட்டுவது போல் அமைந்திருக்கும்.

அஃதாவது அம்மன் தம் குடத்தைக் கவிழ்த்து நீரைக் கொட்டுவதே நமக்கு மழையாகப் பொழிகிறது என்பதே இதன் அடையாளம். மழையே மண்ணை பசுமையாக்குகிறது என்பதால்தான், அம்மனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையம்மன் என்றும் அழைக்கிறோம். பச்சையம்மன் பசுமையின் கடவுள்.

என்ன வியப்பு தெரியுமா? இன்றைக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இந்த பச்சையம்மன் வழிபாடு வழக்கத்தில் இருக்கிறது. பச்சையம்மன் என்பது மருவி பச்சமாமா ஆகியுள்ளது. யுடியூப் *(Youtube)* காணொளி காட்சியொன்றில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெள்ளையர்களும் பச்ச மாமா என்று இசைக் கருவிகள் வைத்துக் இசையோடு பாடுவது நமக்கு வியப்பைத் தருகிறது. அதுவும் பூமிக் கடவுளாகவும், பசுமையின் கடவுளாகவும் வழிபடுவது வியப்பிலும் வியப்பாகும்.

பெலிஸ் நாட்டில் மாமா *(MAMA)* என்ற நகரம் உள்ளது. பச்சையம்மன் என்பதே பச்சமாமா ஆகியபின் மாமா *(MAMA)* என்று ஆகியிருக்க வேண்டும். இவர்களின் மற்றொரு கடவுள் *Itzamana* அமணர் என்பதே சமணர் ஆகி சாம்னா *Zamna* என்றாகியுள்ளது. சமணர் என்பது ஆசிவகத் துறவிகளைக் குறித்த சொல்லாகும். துறவிகள் ஆசனத்தில் அமர்ந்திருப்பது போன்ற அதன் தோற்றம் குறிப்பிடத்தக்கதாகும்.

மாயன் நாகரீகத்திற்கும், தமிழகத்திற்கும் இன்னும் எத்தனையோ தொடர்புகள் இருப்பதை அறிய முடிகிறது. இன்றளவும்கூட இதன் தொடர்ச்சியும், நீட்சியும் இருப்பதை அவர்களின் உணவுமுறை, பழக்க வழக்கம் போன்ற கூறுகளில் இருந்து அறிய முடிகிறது. நாம் விரிவான ஆய்வை மேற்கொண்டால் இன்னும் நாம் ஏராளமான செய்திகளை வெளிக் கொண்டு வரலாம்.

தமிழக அரசாங்கம் இதற்கு உதவினால் உலகெல்லாம் பரவிக் கிடக்கும். தமிழர்களின் அடையாளங்களை வெளிக் கொணரலாம். ஆப்பிரிக்க மக்களின் கலாச்சாரத்தில் தமிழர்களின் அடையாளங்களை அடுத்த தொடரில் பார்ப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய இல்லமாய் ஒரு அழகிய தேசம்

பெட்ரோலில் இயங்கும் புல் வெட்டும் இயந்திரத்தின் கைப்பிடியை இறுக்கமாக பற்றிக்கொண்டிருந்தார் அரியம் அண்ணை. சில நாட்களாக ஓய்வெடுத்த அந்த இயந்திரத்தை "ஸ்டார்ட்" செய்து,முன்னும் பின்னும் நகர்த்தியபடி அவர் நடந்து மெதுவாக அசைகையில், அவர் வீட்டு புற்தரை பச்சைக் கம்பளம் விரித்தது போன்று புதிய வடிவம் பெற்றது.

இந்த நாட்டில் வீடுகளுக்கு முன்னாலும் பின்னாலும் . உள்ள புற்தரைகளை வெட்டுவது அழகுக்காக மட்டுமல்ல. உள்ளூர் அதிகார சபையின் நிபந்தனையுந்தான். அரியம் அண்ணை மட்டுமல்ல இங்கு வாழும் அனைவருமே தவறாமல் கவனிக்கும் விடயம் இந்த புல் வெட்டுதல்.

இயந்திரம் கொஞ்சம் "விக்கல்" எடுத்து இடையில் நின்று விடலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது அரியம் அண்ணருக்கு.

கராஜ் உள்ளே போய் பெட்ரோல் எடுத்து வந்து மூடியைத்திறந்து குறிப்பிட்ட அளவிற்கு நிரப்பினார். மீண்டும் இயந்திரம் விக்கல் எடுக்காமல் நிம்மதியாக இயங்கியது. சரியான முறையில் புல் வெட்டப்படாத சில இடங்களின் மீது மீண்டும் இயந்திரம் கத்தரித்தது. "இன்னும் ஒரு பத்துநாளுக்கு இதற்கு வேலை இருக்காது" என்று எண்ணியபடி வெட்டப்பட்ட புற்கள் ஆங்காங்கே பறந்து சிதறும் அழகை அனுபவித்தார் அரியம் அண்ணை

"குட் மோர்னிங் மிஸ்டர் அரியம்" என்று காலை வணக்கம் சொல்லிக்கொண்டே அவர் அருகில் வருகின்றார் பாகிஸ்தான் நாட்டிலிருந்து வந்து குடியேறிய பக்கத்து வீட்டுக்காரர். தனது புதிய தேசத்தில் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர்.

இந்த வீட்டை வாங்கிக்கொண்டு அரியம் அண்ணை குடும்பம் எட்டு வருடங்களுக்கு முன்னர் வந்தபோதே பாகிஸ்தான் காரர் அங்கு வாழ்ந்து வருகின்றார். ஆனால் இந்த எட்டு வருடத்தில் அவருடைய வீட்டுக்குள் அரியம் அண்ணரோ அன்றி அரியம் அண்ணையின் வீட்டுக்குள் இவரோ சென்றதில்லை. இருவருமே ஒருவரையொருவர் அழைப்பதும் இல்லை, தாமரை இலையில் தண்ணீரை விட்டால் என்ன நடக்குமோ, அதைப் போன்ற ஒட்டாத நட்பு இருவருக்குமிடையில். வீட்டுக்கு முன்பாக உள்ள முற்றத்தில் சந்திக்கும் போது மட்டும் பேசிக்கொள்வார்கள்.

என்றோ ஒரு நாள் பக்கத்து வீட்டுக்காரர் தன்னிடம் வெளியே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர். என். லோகேந்திரலிங்கம்,

கனடா



சிறுகதை

நின்று உரையாடும் போது, சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தனது சொந்த நாட்டில் வாழ முடியாத நெருக்கடி நிறைந்த இனவாதப் போக்கினால் விமானமேறி, இந்த நாட்டுக்கு வந்து சேர்ந்து, ஒரு நல்ல வேலை ஒன்றில் அமர்வது எவ்வளவு கஸ்டமாக இருந்தது என்பதை கவலையுடன் பகிர்ந்து கொண்டார் அரியம் அண்ணை.

"சுமார் நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நான் இங்கு குடியேறிய போது எல்லாத்துறைகளிலும் இலகுவாக வேலை எடுத்து விடலாம். பாகிஸ்தானில் நான் ஒரு இராசயனவியல் பேராசிரியராக இருந்தபடியால் கல்லூரி ஒன்றில் இரசாயன ஆசிரியராக வேலை கிடைத்து விட்டது"

"அப்படியா" என்று ஆச்சரியத்தோடு அவரது முகத்தை நோக்கிய அரியம் அண்ணை அவரைப் பார்த்து மிகுந்த சலிப்புடன் சொன்னார்,

எனக்கு அப்பவே ஒரு தொழில்



தேவைப்பட்டது. ெ பெயருக்கும் போக விருப்பம் இருக்கல்லை. ூனால் கனடியன் எக்ஸ்பீரியன்ஸ், கனடியன் எக்ஸ்பீரியன்ஸ் என்று சொல்லி வாழ்க்கையில் வெறுப்பை ஏத்திப் போட்டங்கள். சில நேரங்களில நாட்டுக்கு திரும்பிப் போய், அங்க சிங்களவன் கையால அடி வாங்கினாலும் பரவாயில்லை என்று கூட நினைச்சன்

நான் நினைக்கிறன், நீங்கள் இந்த நாட்டுக்கு வந்தது, எண்பத்து எட்டு அல்லது தொண்ணூறு ஆக இருக்கலாம். அப்ப இந்த நாட்டில பொருளாதார மந்தநிலை இருந்து வேலை இல்லாப் பிரச்சனையும் இருந்ததெண்டு நினைக்கின்றன்

அரியம் அண்ணையின் சலிப்பான வார்த்தைகளுக்கு ஆறுதல் தருவது போன்ற பதிலை பாகிஸ்தான் காரர் பகிர்ந்து கொண்டார். "நேற்று உங்கள் வீட்டுக்கு பலர் கார்களில் வந்தார்களே ஆண்களும் பெண்களுமாக, என்ன விசேடம்? என்று கேட்டார் பாகிஸ்தான் காரர்.

ஓ அதுவா? எனது இரண்டாவது மகளுக்கு நாங்கள் பேசி ஒழுங்கு செய்துள்ள மாப்பிள்ளையின் பெற்றோர், உறவினர் என்று ஒரு பத்து பதினைந்து பேர் மதிய உணவிற்கு வந்தார்கள். நேற்றைய பொழுது சமையலும் சாப்பாடும் சந்திப்புமாக போய்விட்டது என்றார் அரியம் அண்ணை.

"இனியென்ன இன்னும் ஒரு மாதத்தில் குளிர் வந்திடும். நானும் நீங்களும் வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்க வேண்டியதுதான். நீங்கள் ஒன்றைக் கவனியுங்கள் மிஸ்ட் அரியம்!. நீங்கள் புல் வெட்டும் போது செருப்பு போடாதீங்கள். அது சில வேளை உங்களை தடுக்கி விழவும் செய்யும். அப்படி ஏற்பட்டால் மிசினுக்கு மேலே விழுந்து மண்டை உடையும் சந்தர்ப்பம் இருக்கு. நம்புறீங்களோ இல்லையோ, ஸ்காபுறோவில சில இடங்களில் இப்படி நடந்தும் இருக்கு.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் ஒருவனுக்கு பாடம் கற்பித்த ஆசிரியர் போன்று பாவனை செய்த வண்ணம் நின்றார் பாகிஸ்த்தான் காரர்.

தொடர்ந்து சில நிமிடங்கள் அவர்கள் இருவரும் பல விடயங்கள் பற்றி பேசிக்கொண்டார்கள். பின்னர் தனது வீட்டின் உள்ளே சென்று விட்டார் பாகிஸ்தான் காரர்.

அரியம் அண்ணர் சற்று ஓய்வெடுப்பவர் போல சத்தம் ஓய்ந்து விட்ட இயந்திரத்தை ஒரு பக்கத்தில் நிறுத்திவிட்டு, அழகியதும் பார்ப்பதற்கு விசாலமானதாகவும் காட்சியளிக்கும் தனது வீட்டை, புதிதாகப் பார்ப்பது போன்று அதன் மீது பார்வையைச் செலுத்தினார். இறுமாப்பு அறவே இல்லாத பெருமிதத்தால் மனது நிறைந்தது போன்று இருந்தது அவருக்கு.

இந்த நாட்டில எனக்கு நல்லதொரு வேலை கிடைக்காமல் போயிருந்தால் இங்கு வாழுறதை வெறுத்து ஊருக்கே போயிருப்பன். அங்க போய் புகையிரத திணைக்களத்தில மீண்டும் உத்தியோகம் கேட்டுப் போனால் "வெளிநாட்டுக்கு போன புலி திரும்பவும் வந்துட்டுது" என்று என்னை வார்த்தைகளாலேயே கொன்றிருப்பார்கள் எனது சிங்கள மொழி பேசும் சக உத்தியோகத்தர்கள்.

அரியம் அண்ணையின் சிந்தனையை மீறி ஒரு பெருமூச்சு வெளிப்பட்டு அவரை இயல்பு நிலைக்கு கொண்டுவந்தது. பழைய நினைவுகள் மீண்டும் வந்து, அவரோடு இணைந்து கொள்ளும்போது, கவலை மகிழ்ச்சி ஆகிய இரண்டு வகையான உணர்வுகளுமே அவரை ஆட்கொண்டு விடுவதுதான் வழக்கம்.

இந்த நாட்டிலேயும் அவருக்கு அரசாங்க புகையிரத ஆணையத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்ததனால், அவரது இருப்பு இங்கு உறுதி செய்யப்பட்டது. தனது கடமையை அவர் நேர்த்தியாகச செய்ததனால் அவருக்கு பதவி உயர்வுகள் அடுக்கடுக்காய் கிட்ட போக்குவரத்து மேற்பார்வையாளர் என்ற உயர் பதவியை மணியம் அண்ணை அலங்கரித்து பின்னர் பணியிலிருந்து ஓய்வெடுத்துக் கொண்டார்.

அன்று பாகிஸ்தான் காரர் ஏற்கெனவே அவரிடம் கூறியதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது. அரியம் அண்ணை இந்த நாட்டுக்குள் கால் பதித்தபோது பொருளாதார மந்த நிலை ஏற்பட்டு வேலையில்லாத் திண்டாட்டமும் தலை விரித்தாடியது. சாதாரண கீழ் மட்ட வேலைகளில் சேர்ந்து கொள்வதே முயற்கொம்பாக இருந்தது.

அவர் பதவி வகித்த இலங்கை புகையிரத திணைக்களத்தில் சிங்கள உத்தியோகத்தர்களும் சாதாரண தொழிலாளர்களும் தான் அதிகம். இதயத்தோடு இனவாதத்தையும் நிரந்தரமாகக் காவித்திரியும் உத்தியோகத்தர்கள் அங்கு ஏதாவது இன முரண்பாடுகள் தோன்றும்போது காடையர்களாக விளங்கும் தொழிலாளர்களை ஏவி விட்டு தமிழ் உத்தியோகத்தர்களுக்கு அநியாயங்களைச் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

சில வேளைகளில் தமிழ் பேசும் உத்தியோகத்தர்கள் கொடுக்கும் பணிகளை சிங்களத் தொழிலாளர்கள் உடனடியாகச் செய்யாமல் உதாசீனம் செய்த சந்தர்ப்பங்களில் தனது மரியாதை போய்விடக்கூடாது என்ற காரணத்தால் மௌனத்தை கடைபிடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் அரியம் அண்ணர். கெட்ட வார்த்தைகளால் அவர்கள் மொழியில் திட்டும் போது கூட அந்த வார்த்தைகளுக்கு அர்த்தங்கள் புரிந்தாலும் புரியாதவன் போல அந்த இடத்தை விட்டு மௌனத்துடன் விடைபெறுவது. இவையெல்லாம் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களின் பின்வாங்கும் இயல்பு.

இந்த நாட்டிற்கு வந்து சேர்ந்து பல வேலைகளுக்கு விண்ணப்பித்தும் ஒன்றுமே சாதகமாக அமையவில்லை. ஒரு நாள் அரியம் அண்ணைக்கு ஒரு தொலை பேசி வந்தது. "நீங்கள் எங்கள் அரசாங்க புகையிரத ஆணையத்தில் சமர்ப்பித்த வேலை விண்ணம் தொடர்பாக பேசுகின்றோம். தங்களுக்கு ஒரு வேலை வழங்குவது சார்பாக தீர்மானிப்பதற்கு ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தாங்கள் சமூகமளிக்க வேண்டும்" என்று ஒரு பெண்மணி அழகிய ஆங்கிலத்தில் இந்தத் தகவலை அவரிடம் தெரிவித்தார்.

இலங்கையில் புகையிரத திணைக்களத்தில் பல அலுவல்களை ஆங்கிலத்தில் செய்த அனுபவம், கல்லூரிக் காலங்களில் ஆங்கிலத்தை மிகுந்த ஆர்வத்தோடு கற்றதன் பலன், ஆகியவை ஆங்கிலத்தையும் பிரன்ச் மொழியையும் அரசகர்ம மொழியாக கொண்டிருந்த இந்த நாட்டில் இலகுவாக ஆங்கிலம் பேசுகின்றவர்களின் உரையாடல்களை விளங்கிக்கொள்வதும் அவர்களுக்கு விளங்கக் கூடிய முறையில் பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பதும், அரியம் அண்ணருக்கு ஒரு சிரமங்கள் உள்ள விடயமாகத் தோன்ற வில்லை.

கனடா புகையிரத ஆணையத்தின் தலைமை அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. பல மொழிகள் பேசுகின்றவர். பல்வேறு நாடுகளைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என நூற்றுக் கணக்கானவர்கள் அங்கே காத்திருந்தார்கள். ஒவ்வொருவராய் உள்ளே போவதும் வருவதுமாக இருந்தார்கள் வேலைக்கு விண்ணப்பித்தவர்கள்.

உயரமானவரும் மெல்லியதான உடல் அமைப்பைக் கொண்டவருமானதுமான ஒரு வெள்ளைக்காரர் கையில் கடதாசி ஒன்றைப் பார்த்த வண்ணம் " அரிய.. ரத்தின" என்று அரியம் அண்ணையின் பெயரை மிகவும் சிரமத்துடன் உச்சரித்த பின்னர் "கம் இன்" என்று வரவேற்ற வண்ணம் தனது அறைக்குள் அழைத்து சென்றார்.

மை நேம் இஸ் ஜோன். ஐ ஏம் த மனேஜர் போர் திஸ் ரெக்னிக்கல் டிவிசன்...... வென் டிட் யு கம் ரூ திஸ் கன்றி? என்று தன்னை அறிமுகம் செய்தும் முதல் கேள்வியை கேட்டும் நேர்முகப் பரீட்சையை ஆரம்பித்தார் அந்த வெள்ளைக்காரர். அப்போது அவரது கண்கள், அரியம் அண்ணர் சில மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைத்த அவரது தொழில் கேட்கும் விண்ணப்பத்தை மேலோட்டமாக பார்வையிட்ட வண்ணம் இருந்தன..

"ஒரு வருடம் ஆகிறது" என்று அமைதியாக பதிலளிக்கின்றார் அரியம் அண்ணை.

நீங்கள் இலங்கையில் புகையிரத திணைக்களத்தில் முப்பது வருடங்கள் பணியாற்றி இருக்கின்றீர்கள். நல்லது தான். ஆனால் நாங்கள் இந்த நாட்டில் வேலை செய்த அனுபவம் இருந்தால்தானே எங்கள் நிறுவனத்தில் தாங்கள் திறமையாக வேலை செய்ய முடியும்?

அரியம் அண்ணருக்கு இந்தக் கேள்வி புதிதாக இருக்கவில்லை. ஏற்கெனவே பல இடங்களில் இதே கேள்விதான் முதன்மையானதாகவும் தன்னை நிலை குலையச் செய்ததுமாக இருந்தது என்பதை அவர் நன்கு உணர்ந்துள்ளார். எனவே இந்த நேர்முகப் பரீட்சைக்காக தான் அழைக்கப்பட்ட பின்னர் கிடைத்த சில நாள் அவகாசத்தில், தகுந்த


## புத்தகம் வெளியிட வேண்டுமா?

பத்திரிகைப் பணியில் பத்தொன்பது ஆண்டுகளாக பல சாதனைகளை நிகழ்த்தி வரும் நந்தவனத்தின் அடுத்த முயற்சியாக இனிய நந்தவனம் பதிப்பகம் மூலம் பல நல்ல நூல்களையும் பதிப்பிக்க இருக்கிறோம்.

எங்களின் இந்த புதிய முயற்சிக்கு நந்தவனம் வாசகர்களின் ஒத்துழைப்பையும், ஆதரவையும் வரவேற்கிறோம். தங்களின் கதை, கவிதை, கட்டுரை, சிறுகதைகளை உலகத்தரத்தில் ISBN எண்களோடு புத்தகமாக உருவாக்கித் தருகிறோம்.

புத்தக வெளியீட்டு விழா மற்றும் அனைத்து பரிசுப் போட்டிகளில் கலந்த கொள்வதற்கான வழிகாட்டுதலையும் செய்து தருகிறோம். எழுத்துப் பிரம்மாக்களே! தொடர்பு கொள்ளுங்கள்



**இனிய நந்தவனப் பதிப்பகம்**

தபால் பெட்டி எண் : 214, நம்பர் 17, பாய்க்காரத் தெரு உறையூர்,
திருச்சி – 620 003. தமிழ்நாடு பேச : 94432 84823
மின்னஞ்சல் : nandavanam10@gmail.com
இணையதளம் : www.iniyanandavanam.com
Nandavanam Chandrasekaran




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்களை அளிப்பதற்கு கொஞ்சம் "தயார் நிலையில்" இருக்க அவர் தவறவில்லை..

இந்த நாட்டு அனுபவத்தை ஒரு அவசியமான ஒன்றாகக் காட்டி அதை ஒரு தகுதியின்மைக்கு ஒரு ஆதாரமாகக் கொண்டு வெளிநாட்டிலிருந்து புதிதாகக் குடியேறி, இங்கு தொழில் தேடுகின்றவர்களை நிராகரிக்கும் ஒரு "தந்திரம்" மறைமுகமாக பிரயோகிக்கப்படுவதை அரியம் அண்ணை போன்ற எத்தனையோ இலங்கைத் தமிழர்கள் இந்த நாட்டில் அனுபவித்துள்ளார்கள். அவ்வாறான ஒரு சிரமமான கேள்வியை மீண்டும் அவர் எதிர்கொண்டாலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அந்த அதிகாரியைப் பார்த்தார்.

மிஸ்டர் மெனேஜர்! நீங்கள் கேட்பது இந்த நாட்டு அனுபவம். அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் நான் ஏற்கெனவே வெளிநாட்டு தொழில் அனுபவங்களை எமது நாட்டிலேயே பெற்றுவிட்டேன் என்றுதான் நான் கருதுகின்றேன். இதற்கு காரணங்கள் பல என்னிடத்தில் உள்ளன. நான் எனது நாட்டில் பணியாற்றிய புகையிரதத் திணைக்களம் பிரிட்டி' நாட்டவர்கள் அங்கு ஆட்சி நடத்திக் கொண்டிருந்த போதுதான் ஆரம்பிக்கப்பட்டது. அதன் இயக்கம், மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் அனைத்தையுமே நாம் கற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் எமக்கு கிட்டியது.

மேலும் எமது திணைக்களத்தில் பயன் படுத்தப்பட்ட அனைத்து புகையிரதங்களுக்கும் என்ஜின்களை வழங்கியது உங்கள் நாடுதான். அப்போது, உங்கள் நாட்டிலிருந்து வந்த பொறியியலாளர்கள் தான் எமக்கு பயிற்சிகளை அளித்தார்கள். அந்த இயந்திரங்களை எவ்வாறு இயக்குவது. எவ்வாறு அவசர திருத்த வேலைகளைச் செய்வது என்றெல்லாம் எங்களுக்கு பயிற்சியளித்தார்கள். எனவே நான் எமது நாட்டிலேயே இந்த நாட்டு அனுபவத்தை பெற்றுக்கொண்டேன் என்றுதான் கருதுகின்றேன்" மிகவும் அவதானமாகவும், நேர்த்தியாகவும் அழகிய ஆங்கிலத்தில் கூறி முடித்தார் அரியம் அண்ணர்.

அரியம் அண்ணையை நேர்முகப் பரீட்சைக்காக அழைத்த அந்த வெள்ளைக்காரரர் சில செக்கன்கள் பேசவேயில்லை. அரியம் அண்ணர் அளித்த பதிலை சற்றும் எதிர்பாராதவர் போல அவரை நோக்கி தனது பார்வையை வியப்போடு பரவவிட்டார். சற்று யோசனை செய்தவது போன்று பாவனை செய்தார். பின்னர் ஏற்கெனவே பார்த்த அரியம் அண்ணரின் விண்ணப்பத்தை மிகவும் அக்கறையோடு படித்தார்.

எனக்கு ஒரு பத்து நிமிடங்கள் தாருங்கள் மிஸ்டர் அரிய.. ரத்ன, மீண்டும் அதே உச்சரிப்பு. அடுத்த அறைக்கு சென்று நுழைகின்றார் வெள்ளைக்காரர். சில நிமிடங்களுக்குப் பின்னர் தனது இருக்கைக்கு வந்து அமர்ந்த வண்ணம் முன்னதை விட, தெளிவு பெற்றவர்போல மீண்டும் அரியம் அண்ணையரை பார்த்து புன்னகை புரிந்த வண்ணம் அவரது கண்களை நோக்கினார், ஒரு புன்சிரிப்போடு..

"மிஸ்டர் அரிய.. ரத்ன.. உங்கள் பதில் எனக்கு நல்ல விளக்கங்களை தந்துள்ளது. நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை நான் ஏற்றுக் கொள்கின்றேன். எனது உயர் அதிகாரியிடமும் ஒப்புதலும் பெற்றுக்கொண்டேன். உங்களிடம் உள்ள இலங்கை தொழில் அனுபவங்களை கருத்தில் கொண்டு எமது ஆணையத்தில் மின்சார இரயிலைச் செலுத்தும் உதவிச் சாரதியாக உங்களுக்கு நியமனம் வழங்குகின்றேன். சில நாட்களில் உங்களுக்குரிய நியமனக் கடிதம் உங்கள் வீட்டு விலாசத்திற்கு வரும்."

அரியம் அண்ணைக்கு உலகமே தன் கைகளுக்குள் வந்தது போன்று இருந்தது. இந்த நாட்டின் புகையிரத சேவை ஆணையத்தில் இவ்வளவு இலகுவாக தனக்கு நியமனம் கிடைத்ததை ஒரு பெருமையாகக் கருதினார்.

நாட்கள் வாரங்களாக, வாரங்கள் மாதங்களாக, மாதங்கள் வருடங்களாக நகர்ந்து சென்றன. இடையில் பிள்ளைகளின் கல்வி மற்றும் அவர்கள் திருமணம் என எல்லாமே எதிர்பார்த்து போல அரியம் அண்ணருக்கு வந்து கிட்டியது. அரசாங்க வேலை என்ற படியால் நல்ல சம்பளம். நல்ல பென்சன் தொகையுடன் பதவியிலிருந்து ஓய்வு. வீட்டில் பேரப்பிள்ளைகளின் மழலைச் சந்தோசம் என அரியம் இந்த நாட்டில் வாழ்ந்து களித்து களிப்போடு இருக்கின்றார்

மீண்டும் எஞ்சியுள்ள புற்கள் வளர்ந்துள்ள பகுதியை நோக்கி இயந்திரத்தை நகர்த்தினார் அரியம் அண்ணை. இன்று இந்த அழகிய வீடும் அழகிய தேசமும் மகிழ்ச்சியோடு எனது வாழ்வை தொடருதவற்கு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. அன்று தன்னை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்த வெள்ளைக்காரர் தன்னை நிராகரித்திருந்தால் இன்று சொந்த நாட்டிலேயே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதப் பேய்களின் கொடூரப் பற்கள் என்னை குதறி எடுத்திருக்கும் என்ற நினைப்போடு, ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுவதை அவரால் தடுக்க முடியவில்லை.

வீட்டுக்கு முன்பாக உள்ள வாகனங்கள் தரிக்கும் இடத்தில் ஒரு கருப்பு நிற பி எம் டப்ளியூ கார் வந்து நின்றது. இளைய மகன் செந்தூரன் மகிழ்ச்சியோடு காரிலிருந்து இறங்கி வந்தான். அப்பா! என்று அழைத்த வண்ணம் தனது சட்டைப் பையினுள் இருந்து ஒரு உறையை எடுத்து அதனுள் இருந்த ஒரு கடிதத்தை எடுத்து சிரித்த முகத்தோடு தனது தந்தையிடம் எடுத்துக்கொடுத்தான். அரியம் அண்ணர் திகைப்போடு அதை வாசிக்கத் தொடங்கினார்.

"திரு அரியரத்தினம் அவர்களுக்கு, தாங்கள் எமது போக்குவரத்து ஆணையத்தில் பல வருடங்கள் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்றதாலும், இங்கு தங்கள் பணிக்காலத்தில் அதிகூடிய அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்டு சேவையாற்றியதாலும், எமது ஆணையத்திலிருந்து ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பதவி வெற்றிடங்களில் முன்னுரிமை வழங்கும் வழக்கத்திற்கு அமைய, தங்கள் புதல்வர் திரு செந்தூரனுக்கு அவரது தகைமைகளின் அடிப்படையில் பதவியொன்று வழங்கப் படுகின்றது. எனவே தங்கள் புதல்வரை உடனயாக எமது ஆணையத்தின் தலைமையகத்திற்கு நேரடியாக வருகை நந்து பதவி நியமனக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தங்களை வேண்டுகின்றோம்....

கடிதத்தை வாசித்து முடித்த அரியம் அண்ணையின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடி சட்டையை நனைத்தது. புதல்வன் செந்தூரனை கட்டி அணைத்த வண்ணம் ஒரு திசையை நோக்கி கைகளை கூப்பி வணங்கினார். "

அப்பனே முருகா! வரசித்தி விநாயகனே!. நான் இந்த நாட்டுக்கு என்ன கைமாறு செய்வேன். எங்கேயோ இருந்து அகதியாய் வந்தவனுக்கு நிறத்தையோ அல்லது இனத்தையோ கவனிக்காது, இவ்வளவு சலுகைகளைச் செய்கின்றதே இந்த புண்ணிய பூமி". தனது பிடிக்குள் இருந்த புதல்வன் செந்தூரனின் தலையை கைகளால் வருடிவிட்டார் அரியம் அண்ணர்.

மணம்பரப்பும் இதழ்களாலே விரியும் பூக்கள்
தேன்கொடுக்க, நாடிவரும் வண்டி னங்கள்
மனதோடு உறவாடும் செடிகள் கூட்டம்
கொடிபடர்ந்து காய்க்கின்ற பசுமைத் தோட்டம்
உணவாகும் கனிகளுடன் மரங்கள் ஊடே
ஊடுருவும் பறவைகளோ இசைகள் பாடும்,
துணையாகும் சோலைகளாய் இயற்கைச் செல்வம்
தூதுவிடும் காட்சிதரும் நந்தவ னந்தான்!

தமிழ் மண்ணில் பிறந்திட்டு வளர்ந்து எங்கும்
தமிழர்தம் பண்பாடு கலைகள் காக்க
அமிழ்தாகும் விருந்தளிக்கும் படைப்புக் கள்தான்
அழைக்கின்ற நந்தவனம் ஒன்றும் உண்டு!
நமக்காகப் பலஇதழ்கள் வலம் வந்தாலும்,
நாடு தாண்டிச் சுற்றிவரும் மாதந்தோறும்
நமது மனத்தோட்டத்தில் இருபதாண்டாய்
வளர்கின்ற நந்தவனம் இதழே! வாழ்க!!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பா.தென்றல்

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்" என்று கூறிய பாரதி தொடர்ந்து, "பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம் பேதைமை யகற்றிடுங் காணீர்" என்றான். இன்று இது நடக்கிறது, நன்றாகவே நடக்கிறது. இன்றையப் பெண்கள் கல்வியறிவோடு தன்னம்பிக்கை, சுய மதிப்பு, சுயகௌரவம், விடா முயற்சி, துணிச்சல் என எண்ணிறந்த கைகளைக் கொண்டு நவீன துர்க்கையாய்ப் பூமியில் வலம் வருகிறார்கள்.

சமீபத்திய வார்தாப் புயலின் ஊழித் தாண்டவம் நம் சிங்காரச் சென்னையின் பசு மரங்களையெல்லாம் சுழற்றிச் சாய்த்துச் சென்றது நாம் அனைவரும் அறிந்ததே. மீட்பு நடவடிக்கையாய் அந்த மரங்களகற்றும் பணியிலும் ஒரு பெண் புயல், (தீயணைப்புத் துறை இயக்குநர்) பிரியா ரவிச்சந்திரனின் துரித நடவடிக்கைகள் பாராட்டத்தகுந்தவை. தரையில் மட்டுமல்ல, வான்வெளியிலும் பெண்கள் சூறாவளியாய்ச் சுற்றி சுழன்று பணிபுரிவோம் என்று மெய்ப்பித்து வருகிறார் சபியா ஃபெரோசி என்ற ஆஃப்கானிஸ்தான் நாட்டு விமானப்படை விமானி. எந்த ஒரு தொழிலையும், கலையையும் பெண்களாலும் கற்றுக்கொள்ள முடியும் என்பதற்கு இருவருமே அண்மைச் சாட்சிகள்.

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி பத்தாண்டுகளுக்கும் மேலாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் மணிப்பூரின் ஐரோம் ஷர்மிளா; இராணுவ எதேச்சாதிகாரத்தை எதிர்த்து ஜனநாயகம் மலரப் பதினைந்து ஆண்டுகளாகச் சிறையிலடை பட்டுப் போராடி வெற்றி பெற்ற மியான்மாவின் இரும்புப் பெண்மணி ஆங் சாங் சூகி; தலிபான்களால் சுடப்பட்டு, உயிர்பிழைத்து பெண் கல்வி உரிமைக்காகப் போராடி வரும் பாகிஸ்தான் சிறுமி மலாலா போன்ற பெண் தங்கங்களெல்லாம் சிங்கங்களாகக் கர்ஜித்து வருகின்றனர் இன்று.

அலைச்சறுக்கல் முதல் 2டி அனிமேஷன் வரை, போட்டோகிராபி முதல் போர்விமானி வரை, டீ மாஸ்டர் தொடங்கி டேட்டா பேஸ் வரை, ஆட்டோ ஓட்டுநர் தொடங்கி விண்வெளி ஓடம் வரை எனப் பெண்கள் கால் பதிக்காத துறையே இன்று இல்லை. உலக அளவில் மகளிரின் வாழ்வில் நல்ல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த மாற்றங்களுக்கு இடையிடையே பல நிலைகளில் பெண்கள் தடுமாறித் தளர் நடையிட்டு, புதிய புதிய

# நீசமாக எண்ணாதே நீச்சல் அடிக்கக் கற்றுக்கொடு

புதிய தொடர் – 1



மலாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவும் ஊக்கமும் பெற்று முன்னேறி வர வேண்டியதிருக்கிறது.

தலைவாரிப் பூச்சூட்டிப் பெண்ணைப் பாடசாலைக்குப் போ என்று அன்னை அனுப்பும் கலாசாரம் மாறுகிறது. வெட்டிவிடப்பட்ட கூந்தலும், வளையலணியாத கைகளும், கொலுசு வருடாத கால்களுமாய்ப் பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்றனர். ஆனாலும் மலை வாழையாம் கல்வியைப் பெறுவதில் எந்த விட்டுக்கொடுத்தலும் இல்லை, கூடவே எத்தனையெத்தனை எதிர்ப்புகள், தடைக்கற்கள், ஆபத்துகள்! நாகரிக ஓநாய்களும் சதைத்தின்னிக் கழுகுகளுமாய்ச் சில மனித மிருகங்கள் சந்தர்ப்ப மேற்படுத்திக் குழந்தைகளின் பெண்மையைச் சூறையாடத் தயாராக இருக்கின்றன.

அதனால்தான் யுனிசெஃப் சிறுவர் நிதியத்தின் புதிய சர்வதேச நல்லெண்ணத் தூதுவராக சமீபத்தில் நியமிக்கப்பட்ட நடிகை பிரியங்கா சோப்ரா, "வன்முறைகளால் பாதுகாப்பற்று இருக்கும் சூழல், உலகம் முழுவதும் இருந்து வருகிறது. ஒடுக்கப்பட்ட குழந்தைகளுக்காக எல்லோரும் குரல் கொடுக்க வேண்டும்" என்று குரல் கொடுக்கிறார்.

உலகம் படிப்படியே இத்தகு கொள்ளை நோயுடனே முன்னேறி வருகிறது. டாக்டர் மு.வரதராசனார் கூறியதுபோல், அதன் முன்னேற்றத்தை உணராத காரணத்தால் சிலர் முற்போக்கை எதிர்க்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கல்வி, வீரம், புகழ் என அனைத்திற்கும் கடவுளாய் வணங்கப்படும் பெண்கள், சரஸ்வதியாய், லெட்சுமியாய், காளியாய்ப் பூஜையறையில் படங்களாக மட்டுமே தொங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

நாயக்க மன்னர்கள் காலத்து தேவதாசிகளாகவும், சோழர் காலத்துத் தேவரடியார், பதியிலார்களாகவும் இந்தக் கால மகளிரும் இருக்க வேண்டும். குடும்பப் பொருளாதாரம் உயரப் பாடுபட வேண்டும்; குழந்தை வளர்ப்பில் தொலை நோக்குப் பார்வையும், சமூகப் பார்வையில் துணிவும் கொண்ட மகளிராக இருக்க வேண்டும். ஆனால் பல கணவன்மார்களைப் பொறுத்தவரை மனைவிகள் தாமாக விரும்பி ஏற்றுக் கொண்ட அடிமைத் தனத்துடன் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புதான் மேலோங்கி இருக்கிறது.

"இந்த உலகிற்கு நான் புதிதாக எதையும் கற்பிக்கவில்லை; உண்மையும் வன்முறையின்மையும் மலைகளைப் போல் பழமையானவை" என்கிறார் காந்தியடிகள். இன்றைய பெண்களுக்கு ஆணாதிக்க ஆண்களிடமிருந்து தேவைப் படுவதும் இவையே. இடியுண்ட மயில் போல துயருண்ட மாதவிகளாகத்தான் பெண்களின் குடும்ப வாழ்க்கை வெளிச்சத்திற்குள் மறைந்து கிடக்கும் இருட்டாய்த் தொடர்கிறது.


பிரியா ரவிச்சந்திரன் | ஐரோம் ஷர்மிளா | பிரியங்கா சோப்ரா

இள வயதுப் பெண்ணொருத்தி, இலங்கையிலிருந்து ஆகாய மார்க்கமாகத் தனியாகச் சிங்கப்பூருக்கு வருகிறாள். அங்கே இணையதளத் தேடல் மூலம் இடம் கிடைக்க தனக்குப் பிடித்த கல்லூரி ஒன்றில் சேர்கிறாள். ஒரு வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கிப் படித்து வருகின்றாள்.

இதைக் கவனித்த அண்டை வீட்டுத் தமிழ் அண்ணாச்சி ஒருவர், எல்லாவற்றையும் எப்படிச் சமாளிக்கிறாய்? உனக்குப் பயமாக இல்லையா? வேறு தொந்தரவுகள் ஏதும் இல்லையா? என்று கேட்கிறார். சற்றும் தாமதிக்காமல் வில்லினின்று சீறிப் புறப்பட்ட அம்பாகப் பதில் வருகிறது, என் ஆடையும் பேச்சும் சரியாக இருக்கும் வரை எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று. கிட்டத்தட்ட ஆறாண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமை இது.

பெண்கள் எந்தவித எதிர்மறைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டலையும் சட்டை செய்யாதவரை, சமூகத் தீவினைகளுக்குத் துலங்கல்கள் இல்லாமல் போனது. ஆனால் இன்றோ நிலைமை தலைகீழாகி விட்டது. தொடர்ந்து வரும் தொல்லையைத் திரும்பியே பார்க்கா விட்டாலும், இரத்தம் பீறிட சர்ச்சில் வெட்டிச் சாய்க்கப்படுகிறாள்; கதறக்கதற தொடர் வண்டிச் சந்திப்பில் வெட்டி வீழ்த்தப் படுகிறாள்; சதை கொப்பளிக்க முகத்தில் தீயாய் அமிலம் கொட்டப் படுகிறது.

பாதிக்கப்பட்ட பெண்கள் இப்படிப் பட்ட பாதகங்களையும் ஆபத்துகளையும் சந்தித்து மாண்டு போனாரே தவிர, போரிட்டு எதிர்த்து வெற்றிபெற முடியவில்லையே. ஆறறிவிலும் குறைந்த உயிரினங்கள் கூட ஆபத்துக் காலத்தில் தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்கின்றனவே. ஆனால், பெண்கள்? இன்னும் இதே புதைமணல் பாதையில் தானே பயணித்துக் கொண்டு இருக்கிறார்கள்? எப்போது நாம் எதிர் நீச்சல் போடக் கற்றுக் கொள்ளப் போகிறோம்?

பெண்கள் படும் வெந்துயர் கண்டு மனம் நொந்து, கொல்லன் ஊதுலை போல் விட்டுவிட்டுப் பெருமூச் செறிகின்றேன் நான். பெண்ணை எப்படி யெல்லாம் பாராட்டுகிறது இந்த உலகம் தெரியுமா? அன்று ராஜாஜி ஹாலில் அவமானப் படுத்தப் பட்டவர், இன்று அதே இடத்தில் தேசியக்கொடி போர்த்தப் பட்டு, முழு அரசு மரியாதையுடன் இறுதி ஊர்வலம் போகிறார்.



“ அன்று ராஜாஜி ஹாலில் அவமானப் படுத்தப்பட்டவர், இன்று அதே இடத்தில் தேசியக்கொடி போர்த்தப்பட்டு, முழு அரசு மரியாதையுடன் இறுதி ஊர்வலம் போகிறார். ”



இது உண்மைச் செய்தியே தவிர, இது எந்த வகையில் சமீபத்தில் மறைந்த முதல்வருக்கான பாராட்டாக இருக்க முடியும்? வாழுகின்ற காலத்தில் அல்லவா அங்கீகாரம் கேட்கின்றோம்? இறந்த பிறகு நறுமணப் பூக்களாலும் நல்ல தமிழ்ப் பாக்களாலும் அர்ச்சனை செய்தாலும், நடுவீட்டில் கண்ணாடிக்குள் அடைத்துப் பூசையே செய்தாலும் பலன் என்ன? வாழு! வாழ விடு! என்றுதான் மன்றாடு கின்றோம்.

அன்று பாரதி சொன்னான், “கற்பெனப்படுவதைப் பொதுவில் வைப்போம்” என்று. இன்றுவரை இது கனவுதானே. எழுத்துச் சித்தர் பாலகுமாரனும் ஒரு நாவலில் சொல்வார், தன் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணின் முன்பும் வேட்டி நெகிழவே வெட்கப் படுகின்றவன் தான் உண்மையான ஆண்மகன் என்று. இதுவும் அவருடைய ஏட்டளவில் மட்டுமே. ஒரு பக்கம் குடும்ப பாரமும் மறு பக்கம் வேலைச் சுமையும் என்று மத்தளத்தின் இரு பக்கமும் அடி வாங்கும் பெண்கள் இன்று ஏராளம்.

மீடியாவுக்கு வரும் செய்திகளிலோ, வலுவிழந்த பெண்களின் வாழ்க்கை மீண்டும் மீண்டும் துரியோதனத் துகிலுரிதலுக்கு ஆட் படுகின்றன. மீட்கத்தான் எந்தக் கண்ணனும் அவதாரம் எடுத்து வருவதில்லை: நோகடிக்காமலாவது இருக்கலாமே. இன்று பரிதவிக்கும் பெண்களின் பாவங்களை அப்பட்டமாக எழுதுவதில்தான் பலருடைய எழுது கோல்களில் மை செலவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது போதாதென்று தொ(ல்)லைக் காட்சி நாட்டாமைகள் வேறு! நடு வீட்டிற்குள் நுழைந்து சொகுசான சோபாக்களில் உட்கார்ந்து, அறைக்குள் நடந்த அந்தரங்கத்தை எல்லாம் அரங்கில் பேசி, நார்நாராய்க் கிழித்துத் தூக்கில் தொங்க விடுகிறார்கள். கசாப்புக் கடைகளிலா ஆடுகளுக்கு நியாயம் கிடைக்கும்? பாப்பரஸிகளின் துரத்தலால் எழிலரசி டயானா பட்டபாடு அறிந்தும் எதையும் உணரவில்லை இந்த அப்பாவிப் பெண்கள்.

பெண் முன்னேற்றம் பற்றிக் கனவு கண்ட பெருமக்கள் பாரதியாரும், பெரியாரும். கொளுந்து விட்டெரியும் நெருப்பில் தள்ளிக் கொல்லப்படும் கொடிய 'சதி'யிலிருந்து கைம்பெண்களைக் காப்பாற்றிய பெருமகனார் ராஜாராம் மோகன்ராய். பெண்கள் சிந்தனையில், கல்வியறிவில், தொழில் நுட்பத்தில் வளர வேண்டுமெனில், காற்றில் கரைந்து விடக்கூடாது, கனவாய் மெய்ப்பட வேண்டும்; புத்தக அறிவு மேம்பட வேண்டும் என்று இன்று கூறுகிறார் எஸ் ஆர் நாதன்.

இவர்களின் பெரு முயற்சிகளையும் கனவுகளையும் நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். பெண் முன்னேற்றம், சமஉரிமை, சொத்தில் பங்கு, முப்பத்துமூன்று சதவீத ஒதுக்கீடு என்றெல்லாம் மேடைபோட்டு, மைக்பிடித்துக் குரல் கொடுத்துக்கொண்டு, ஆர்ப்பாட்டத்திற்கும் ஊர்வலத்திற்கும் மட்டுமே பெண்களை அழைக்காதீர்கள். கியூபக் கவிஞன் ஒருவன் சொல்கிறான், "செய்தல் என்பதுதான் சிறந்த சொல்" என்று. எனவே, பெண்களுக்கு 100 % கல்வியறிவு கொடுங்கள்.

வருங்காலத்தில் 33 என்பது 50 ஆக மாறினாலும் கைதட்டி வரவேற்புக் கொடுங்கள். ஆண்களே சற்று வழிவிடுங்கள்: சந்தோஷமாகத் தயாராகுங்கள். அறிவியலும் தொழில் நுட்பமும் வளர்கிறது ஒருபக்கம்: விரக்தியும் அவநம்பிக்கையும் ஆக்கிரமிக்கிறது மறுபக்கம். இயற்கை நியதிகளுக்குட்பட்டு வாழ்வோருக்கு இயற்கை ஓர் அன்னையாய், கடவுளாய்க் கூடவே வருவாள்: வாழ்க்கைக்கு அழகூட்டும். அதுபோல, பெண்ணின் இயல்பான குணங்களை அறிந்து அவளோடு கை கோர்த்தால், சொர்க்கமும் அமிழ்தமும் நமக்குக் கைகூடும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போன காவிரிக்கொலுசொலி

சிதைக்கப்பட்ட காவிரியின்
கணுக்கால் கொலுசென
நீண்டு சலசலத்துக் கிடக்கிறது
கொள்ளிடம்..
யாரும் அதன் வேலைப்பாடுகளை
சிலாகிக்க வேண்டம்..
அதன் சப்தங்களை
செவிமடுக்க வேண்டாம்..
காற்றும் அவ்வப்போது ஓடும்
மிகை நீரும் செதுக்கிய கலைச் சிற்பம்
அதன் படுகையுடல்.
நீங்கள் வேலைபாடுகளை
அள்ளிச் செல்கிறீர்கள்..
அதன் கொலுசு சப்தங்களையும் தான்..
அதன் வெள்ளிப் பிசிறுகளில்
மழித்த உங்கள் மசிறுகள் சிக்கியுள்ளன..
நீங்கள் விட்டுச் சென்ற
கொஞ்சம் ஊற்று நீர்தான்
வேலைப்பாட்டிடைகளில்
தேங்கிக் கிடக்கிறது - அதில் தான்
எங்கள் குருவிகளும் காக்கைகளும்
கொலுசணிந்து பரிவயக்கின்றன..
கொலுசுக் குமிழ்களாய்
ஆங்காங்கே தொங்கிக் கொண்டிருக்கும்
அதன் ஓசை உயிர்ப்பிடங்களில்தான்
நீங்கள் உங்கள் பிணக்கொட்டகைகளை
அமைத்திருக்கிறீர்கள்..
கொள்ளிட கொலுசொலியுடன்
தாரை தப்பட்டை ஒலி சேர்த்து
பயம் காட்டுகிறீர்கள்..
ஏற்கனவே சப்தங்கள்
தொலைந்து கொண்டிருக்கும்
ஒரு கொலுசைத்தான்
நீங்கள் காவிரி எங்கிறீர்கள்..
இன்னொன்றையும்
தொலைத்து விடாதீர்கள்..

**ராகவபிரியன்,** திருச்சி.

# பெண்ணாகிய நான்

நகர்வலம் செல்ல ஆசை..நாடுசுற்றி
நாலும் தெரிய ஆசை...
சிறு பெண் என்றீர்..
பதின்ம வயதில் நூல் பல கற்று,
ஊரகம் சுற்ற அவா..
தேடி வரும்
எறும்பு சீனியைத்தேடி.. என்றீர்..
நான் தேனென்று சொல்ல நினைத்து
அது வீணாகவே போயின..
இருபதில் என்னை நான் தேட
வேலை தேடென்றீர்..
என்னைப் பற்றி அறியுமுன்னே..
எனக்கான வேலை எதுவென்று
தெரியுமுன்னே எதிலோ சேர்ந்தேன்..
எவரென்றே தெரியவில்லை...
இணைத்து வைத்தீர்..
எது பிடிக்குமென்றான்..
கவிதை, பாட்டு என கதை நான் அளக்க
கவிதைக்கென்று சேனல் இல்லை..
பாட்டுக்கு பல இருக்கு என்றான்..
சிலநேரம் சந்தோஷத்திலும்,
சிலநேரம் சோகத்திலும் அவர்கள் பாட..
மாற்றிக்கொண்டிருந்தேன்..
சேனலோடு என்னையும்...
இடையிடையே எதுவோ என்னிடம்
எட்டிப் பார்க்க என் குட்டிப்பையன்
எனைத் தட்டிப் பார்க்க மூழ்கிவிட்டேன்
அவனுள்...
அவன் வீட்டுப்பாடத்தை நான் முடிக்க
நேரமே அதனுள் மூடிப்போக..
வாலிபத்தின் இறுதியில்...
என்னைத் தேட ஆரம்பிக்க..
பையன் பத்தாவதென்று உலகம்
படாமல் பட்டு சொன்னது...
இவ்வாறே இவ்வுலகம் எனைமுடிக்க ...
அறுவதின் இறுதியில் பேத்தி கேட்டாள்..
பாட்டி உனக்கென்ன பிடிக்கும்...????!!!

**சு.இந்துமதி,** தென்னம்புலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குனிந்த தலை நிமிராத தேவதைகள்



தேவதைகள் எப்போதும்
சன்னலோர இருக்கையில்தான்
பேருந்தில் அமர்கின்றன

கூந்தலில்
மல்லிகையும்
மஞ்சள் ரோஜாவும்தான்
சூடுகின்றன

அதிகாலையில் நீராடிவிட்டு
மார்கழி பனியில்
மலர் கோலம் போடுகின்றன

சிவப்பு மஞ்சள்
நிறங்களில்தான்
தாவணிகள் உடுத்துகின்றன...

சூப்பர் சிங்கரையும்
சரவணன் மீனாட்சியையும்தான்
தொலைக்காட்சியில் பார்க்கின்றன..
எஸ்.பி.பியையும்
ஏ.ஆர்.ரஹ்மானையும்தான்
தனிமையில் கேட்கின்றன...

புத்தகத்தை நெஞ்சோடு அனைத்து
குனிந்த தலை நிமிராமல்
சாலையில் நடகின்றன...

குடையின்றி மழையில் நனையவும்
பௌர்ணமி இரவில்
கடற்கரைக்குச் செல்லவும்
பிடிக்கின்றன...
கவிதையை வாசித்துவிட்டு
தன் மீதுள்ள
காதலை அறியாத தேவதைகள்
காதலனிடம்
யாரை நினைத்து
எழுதினாயென கேட்கின்றன..

**- தரணி வேந்தன்,**
சென்னை.

# பல்வேறு

பாட பேதங்களை
புரிந்துகொள்ள இயலுகிறது
வெவ்வேறு விளக்கங்களை
விளங்கிக் கொள்ள முடிகிறது
பலபல சிந்தனைப் பள்ளிகளை
உள்வாங்கிக் கொள்ள சாத்தியமாகிறது
பன்முகத் தன்மைகளை
உணர்ந்து கொள்ள முடிகிறது
பல்வேறு ஆளுமைகளை
புரிந்து கொள்ள இயலுகிறது
வேறுவேறு அனுபவங்களை
எதிர்கொள்ள முடிகிறது
அநேக உணர்வு வெளிப்பாடுகளை
பொறுத்துக் கொள்ள சாத்தியப்படுகிறது
வித்தியாசமான வாழ்நிலைகளை
அறிந்து கொள்ள முடிகிறது
எல்லாமே
ஈஸ்வரல்லைபோல....

***- விக்ரமாதித்யன் நம்பி***

# பொங்கலே வா!

வான வீட்டில் விளையாடி
மேக மகளாம் மழைக் குழந்தை
வானம் விட்ட கன்று வந்து
மண்தாய் மடியில் விளையாட
ஊன மின்றி உயிர் வாழ
உழவர் வேர்வையைப் போற்றிடவே
மானம் பொங்க தமிழர்கள்
மகிழ்ந்து பொங்க பொங்கலே வா!

கிழக்கில பழுத்தப் பழந்தானே
கீழ்வான் வெளுக்கும் செங்கதிரோன்
உழவில் பழுத்தப் பழந்தானே
உணவு ஈயும் மண்ணுழுவன்
உழவைப் பழுக்க வைக்க நித்தம்
உழவர்க் குதவும் எருது மாடு
பழமை மாறா இம் மூன்றைப்
பணிந்து போற்றும் தமிழர்நாள்!

நிலத்தை நிமிர்த்த நெற் கதிர்கள்
தலையைக் குனிதல் போல், நாளும்
நிலமு முதேதான் நிலைக்குலைந்து
நிலமு முதிடும் நிலமுழவர்
நலம்பெற நெஞ்சில் மகிழ்வு பொங்க,
நாநிலம் செழிக்கப் பாடுபடும்
நிலமு முவோர்தம் உழைப்பாலே
நிலமகள் மகிழ பொங்கலே வா!

நெருப்பாலை பாவலர்
**இராம இளங்கோவன்**, பெங்களூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சத்தில் இருப்பதை விட ஆபத்தை சந்திப்பதே மேல்

இது எப்படி சாத்தியமானது என்று எனக்குள்ளாகவே வியப்போடு எண்ணிப் பார்க்கிறேன். இனிய நந்தவனத்திற்கு இருபது வயது தொடங்கியிருக்கிறது. திரும்பிப் பார்க்கையில் எத்தனை மேடு பள்ளங்களைக் கடந்து வந்திருக்கிறேன். எல்லாவற்றையும் சவாலாக எடுத்துக் கொண்டு இந்த இலக்கைத் தொட்டிருக்கிறேன் என்பதை நினைக்கும் போது பெருமையாக இருக்கிறது.

இனிய நந்தவனம் இருபது ஆண்டுகளாக வெற்றிநடை போட ஆதரவுக்கரம் நீட்டிய அத்துணை நல்ல உள்ளங்களுக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 1998ல் ஜனவரி மாதத்தில் நான்கு பக்கங்களில் கருப்பு வெள்ளையாக முதல் இதழ் வெளியானது.

அந்தக் காலகட்டத்தில் சிற்றிதழ்களுக்கு நல்ல வரவேற்பும் இருந்தது. இப்போது இல்லையா? என்று கேட்டு விடாதீர்கள்! இப்போதும் இருக்கிறது. ஆனால் அன்றைய சூழலில் இருந்த தீவிரமான இலக்கிய ஈடுபாடு தற்போது குறைவாகத்தான் இருக்கிறது.

அன்றைய கால கட்டத்தில் புதிய படைப்பாளிகளுக்கு எழுத்துக் களமாக இருந்தது சிற்றிதழ்கள்தான். இன்று முகநூல், வாட்ஸ்அப், டுவிட்டர், இணைய பக்கங்கள் என்று தளங்கள் நிறைய வந்து விட்டதால் சிற்றிதழ்களின் மீதான ஆர்வம் குறைந்துள்ளது என்ற உண்மையை நாம் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

நந்தவனத்தை நான் தொடங்கும் போதே, இது உலகத்தமிழர்களுக்கான பத்திரிகையாக வேண்டும், நான் உலகத் தமிழர்களுக்கான பத்திரிகையாளனாக வேண்டும் என்ற குறிக்கோளை முன்வைத்தே தொடங்கினேன். அதில் இன்னும் முழுமையடையா விட்டாலும் ஓரளவுக்கு இலக்கை எட்டியிருக்கிறேன் என்பதை சொல்லிக் கொள்வதில் தோள்தட்டி பெருமை கொள்கிறேன்.

இனிய நந்தவனம் முழுமையான இலக்கிய இதழாகவும் இல்லை, வணிக இதழாகவும் இல்லை! என்ற விமர்சனம் தொடர்ந்து வைக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. ஆனால் எனது புதிய முயற்சிகளை வாசகர்கள் ஏற்றுக் கொண்டதாலேயே வெற்றிகரமாக இருபது ஆண்டுகளைத் தொட முடிந்தது என்ற உண்மையையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இது மக்கள் மேம்பாட்டு இதழ் மக்கள் நலம் பேணும் கருத்துக்களை முன் வைத்தே ஒவ்வொரு இதழும் வெளிவர வேண்டும் என்று சிரத்தை எடுத்துக் கொள்கிறேன், மெனக்கெடுகிறேன். இதனாலேயே ஒரு சாரார் மட்டுமல்லாமல் எல்லாத் தரப்பினரையும் விரும்பிப் படிக்க வைக்க முடிகிறது.

"எனக்கு எத்தனையோ இதழ்கள் வருகின்றது, இதில் நந்தவனத்தை மட்டும் முதலில் முழுவதுமாக வாசித்து விடுவேன்" என்று பலர் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். இதை எனது புதிய முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றியாகவே பார்க்கிறேன்.

"முன்னேற்றத்தை நோக்கி அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை! அடி எடுத்து வையுங்கள்" என்பார் சிந்தனையாளர் வின்சன்ட் பூல். ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைவரிசைக்குள் அகப்பட்டவை 39

இருபது ஆண்டை தொட்டிருக்கிறேன் என்பது சாதனை என்று சொல்ல முடியாவிட்டாலும் சிற்றிதழ்களுக்கு ஆயுள் குறைவு என்ற எதிர்மறைச் சொல்லை உடைத்தெறிந்து இன்று தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகளவில் நந்தவனத்தின் எல்லை விரிந்திருப்பது "முயற்சி செய்தால் முடியும்" என்பதற்கு உதாரணம் என்பதே எனக்குப் பெருமைதானே!.

"ஊக்கம் இல்லாமல் எந்தப் பெரிய காரியமும் சாதிக்கப்பட்டது கிடையாது". என்ற எமர்சனின் சொல்லே எனக்குத் தாரக மந்திரம். ஒரு காரியத்தை செய்ய முடியுமா? என்று சிந்திப்பதை விட எப்படி செய்து



## நந்தவனம் சந்திரசேகரன்

முடிப்பது என்று யோசிப்பதுதானே புத்திசாலித்தனம். அதைத்தான் நானும் எடுத்துக்கொண்டேன்.

"இருபது ஆண்டுகளாக இதையே கட்டிக் கொண்டு அழுகிறாய், வேறு ஏதாவது தொழில் செய்திருந்தால் வாழ்க்கையில் பல முன்னேற்றத்தைக் கண்டிருக்கலாமே!" என்று இன்னும் என்மேல் அன்பு கொண்ட சில நல்லவர்கள் கூறுவதுண்டு. ஆனால் பணம் மட்டுமே வாழ்க்கையல்ல! என்பதை நான் நன்றாக உணர்ந்தவன். அதைத்தாண்டி மனசுக்குப் பிடித்தத் துறையில் ஈடுபட வேண்டும், அதில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்திலேயே என் முயற்சிகளைத் தொடர்கிறேன்.

"எப்போதும் அச்சத்தில் இருப்பதைவிட ஆபத்தை ஒருமுறை சந்திப்பதே மேல்" என்று பிரிட்டிஷ் பழமொழி ஒன்று இருக்கிறது. எனக்குப் பிடித்த எழுத்துத்துறையில் முயற்சிகள் செய்ய நான் ஒருபோதும் தயங்கியது கிடையாது. எழுத்தை நம்பி வாழ முடியாது என்ற அவநம்பிக்கையை தொலைத்து விட்டு முழுக்க முழுக்க எழுத்தை நம்பியே வாழ்ந்து வருகிறேன்.

எல்லோராலும் இப்படியான துணிச்சலான முடிவை எடுத்துவிட முடியாது. ஆனால், 'என்னால் முடியும்' என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கைதான் தற்போது இருபதாம் ஆண்டை கொண்டாட வைத்திருக்கிறது. இலக்கின் எல்லை இதுவல்ல நான் பயணிக்க வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது. இந்த சீரிய பயணத்தில் எப்போதும் போல நல்லவர்களின் ஆதரவு எனக்கு இருக்கும் என்றே நம்புகிறேன். "இருபதாம் ஆண்டு" இது தொடக்கந்தான், இன்னும் நிறைய கொண்டாட்டங்கள் இருக்கின்றன. எப்போதும் தயாராக இருப்போம் அதுவரையில் இருபதாம் ஆண்டுக் கொண்டாடத்தில் இணைந்து குதூகளிப்போம்!.

கடந்த நவம்பர் (2016) மாதம் இனிய நந்தவனம் பெங்களூரு சிறப்பிதழ் தயாரிப்பதற்காக பெங்களூர் சென்றபோது நான் சந்திக்க வேண்டும் என்று விரும்பிய முக்கியமான நபர் புலவர் மகிபை பாவிசைக்கோ. இவரது தமிழ்பற்றையும், தமிழர்களின் மீதான அக்கறையையும் கண்டு வியந்தபடியால் நேரில் சந்தித்து உரையாட விரும்பினேன்.

ஆனால், நான் பெங்களூரு சென்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலவர் மகிபை பாவிசைக்கோ அவர்களுக்கு இதயக்கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நண்பர்கள் ராஜசேகர், விஜயராகவன் இருவரும் அவரது சீடர்கள். அய்யாவை நான் பார்க்க வேண்டும் என்று கேட்டவுடன் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கே மூச்சு சுவாசக் குழாய் பொருத்தப்பட்டு படுக்கையில் இருந்த அய்யாவிடம் மெதுவாகப் பேசி ராஜசேகர் என்னை அறிமுகப்படுத்தினார். நந்தவனத்தை பல வருடங்களாக அவர் படித்து வருவதால் என்னைப் பற்றி சொன்னவுடன் உடனே புரிந்து கொண்டு வணக்கம் தெரிவித்தார்.

எனக்கு குணமானவுடன் நாம் சந்தித்துப் பேசுவோம் என மெதுவாக சைகையிலேயே உணர்த்தினார். சிரமப்பட்டு எங்களோடு சில வினாடிகள் சைகையில் பேசியதைப் பார்த்த போது வருத்தமாகவே இருந்தது. பத்து நிமிடத்திற்கு மேல் அங்கே எங்களுக்கு நிற்க அனுமதியின்மையால் வெளியே வந்து விட்டோம்.

இன்னும் இரண்டொரு நாளில் அய்யா குணமாகி விடுவார். அதன் பிறகு நேர்காணல் ஒன்று செய்வோம் என்று விஜயராகவன் நம்பிக்கையோடு என்னிடம் கூறி என்ன மாதிரியான கேள்விகள் கேட்கலாம்? என்றும் விவாதித்தார். மூன்று நாட்கள் பெங்களூர் சுற்றுப்பயணம் முடித்துவிட்டு நானும் திருச்சிக்கு வந்து விட்டேன். அவ்வப்போது ராஜசேகரிடம் அய்யாவின் உடல்நலம் பற்றி விசாரித்துக் கொண்டே இருந்தேன். ஆனால் டிசம்பர் 13அன்று அய்யா காலமாகி விட்டார் என்று வாட்ஸ்அப் மூலம் எனக்குத் தகவல் வந்தது. உறுதிப்படுத்துவதற்காக ராஜசேகருக்கு தொலைபேசியில் பேச முயற்சித்த போதே அவரே அழைத்து தகவலைக் கூறினார்.

அந்தத் தகவல் என்னுள் அதிர்ச்சி கலந்த வருத்தத்தைத் தந்தது. மிகச்சிறந்த தமிழ்ப் பற்றாளரோடு உரையாட வாய்ப்பில்லாமல் போய் விட்டதே என்ற வருத்தத்திலிருந்து என்னால் மீளமுடியவில்லை. அய்யா பாவிசைக்கோ அவர்கள் 50 ஆண்டுகளாக கர்நாடகத் தமிழர்களின் நலனுக்காக பல்வேறு போராட்டங்களை முன்னின்று நடத்தியவர். கவிதை, சிறுகதை, திரைக்கதை, நாவல், நாடகம், கட்டுரை, திறனாய்வு என பல்வேறு கலைத் துறைகளில் சிறந்து விளங்கியவர்.

பாவலர் பெருஞ்சித்தனாரின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு அவரது தென்மொழி இதழில் பத்திரிகையாளராகப் பணியாற்றியுள்ளார். ஈழத் தமிழர்களின் மீதான அளவற்றப் பற்றின் காரணமாக ஈழப்போரின் துயரம் பற்றி நாடகம் நடத்தி நிதி சேகரித்தும் இயக்கத்திற்கு தந்துள்ளார் தேசியத் தலைவர் பிரபாகரன், தமிழ்ச் செல்வன் ஆகியோருடன் மிக நெருக்கமாக பழகி வந்துள்ளார்.

மிகச்சிறந்த ஒரு நல்லக் கலைஞனை இழந்து விட்டோம் என்பது தமிழினத்திற்கே பேரிழப்புதான். அய்யாவின் இடத்தை இனி யாராலும் நிரப்ப முடியாது என்ற சோகம் நம்மை கவ்வியுள்ள நிலையில் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்தஇரங்கலைத் தெரிவித்து துயரத்தில் பங்கெடுத்துக் கொள்வோம்.

தூயநீரில் மூழ்கியெழுவதால் மனம் தூய்மை பெறுவதில்லை. ஆக்கத்திற்கும், அழிவிற்கும் மனமே மூலம் என்ற அரியக் கருத்தினை முன் வைத்து திருமூலரின் திருமந்திர வழித்தடத்தில் ஆன்மீகப் பணியாற்றி வருகிறார் பெங்களூரைச் சேர்ந்த அகமுக சொக்கநாதர்.

நான் பெங்களூரு சிறப்பிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரிப்புக்காக செய்திகள் சேகரிக்கச் சென்ற போது நண்பர் விஜயராகவன் மூலமாக அறிமுகம் செய்யப்பட்டவர் அகமுக சொக்கநாதன். சின்னதாய் இவரைப் பற்றி குறிப்பு எழுதலாம் என்று பேசியபோது நான் கேள்விகள் எதுவும் கேட்காமலே, மூன்று மணிநேரம் சொற்பொழிவு போல் கருத்துக்களை முன் வைத்தார்.

ஒவ்வொரு சொல்லிலும் மனித வாழ்வியலுக்கான, விடுதலைக்கான, மேம்பாட்டுக் கருத்துக்களை, ஆழமான சிந்தனையுடன் முன்வைக்கிறார். மனிதனின் அகம் தூய்மையடைய இவர் முன்வைக்கும் கருத்துக்களை நாம் ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியது.

பெரும்பாலும் நான் ஆன்மீக வாதிகளை நம்புவதில்லை. ஆனால், இவர்காட்டும் ஆன்மீகப் பாதை இருண்மை சூழ்ந்த மனித சமுதாயத்திற்கு வெளிச்சத்தைக் காட்டும் பாதையாகவே இருந்தது. எதையும் திணித்துச் சொல்லாமல் "இதைச் செய்தால் இது கிடைக்கும்" என்ற தத்துவார்த்த ரீதியிலான



இவரது கருத்துக்கள் இன்றைய பரபரப்பான வாழ்க்கை சூழலுக்கு சற்று இளைப்பாற பெரிதும் உதவும் என்பதை திட்டவட்டமாக சொல்லலாம்

பல சித்தர்களின் வழித்தடத்தில் பல்வேறு சிந்தனைகளை விளக்கத்துடன் சொல்லும் நூல்களையும் எழுதியுள்ளார். சித்தர்களின் மருந்தில்லா மருத்துவம், மகத்துவம் என்ற மருத்துவ விழிப்புணர்வு நூலையும் எழுதியுள்ளார். உங்களுக்குள் எழும் சந்தேகங்களை நேரடியாகவும் கேட்கலாம். தொடர்புக்கு 97400 22618


# ஒரு கோடி உறவுகளுடன்...

**நந்தவனம்...**
**பதிப்புத் துறையில்**
**ஓர் தனித்துவம்**

**தமிழினத்திற்கு**
**விளக்கேற்றிய ஒரு கை**
**முகிலினிடை பிரகாசிக்கும்**
**முழுநிலா**

**பன்னாடுகளில்**
**பல உறவுகளின் உள்ளத்தில்**
**பார் முழுவதும்**
**ஓர் நடமாடும் நூலகம்**

**கன்னித் தமிழ் தவழும்**
**இனிய நந்தவனம்**
**அன்பொளி வீசும்**
**ஒளிக்கீற்றல்**



**கடமையில்**
**இனம் காத்தல், மொழி காத்தல்**
**கடந்த சுவடுகள்**
**இரு தசாப்தங்கள்**

**ஆசிரியரின் தமிழ்ப்பற்று**
**கவிப் பொக்கிசம்**
**தனது சிறகை விரித்து**
**உயரப் பறக்கவும்**
**பலநூற்றாண்டு மனம் வீசவும்**
**இதயம் நெகிழ்ந்து**
**வாழ்த்துவோர்**

***திரு. ஆ. கனகரத்தினம், கலாபூசணம்***
***திருமதி. க.சரோஜினி தேவி,*** அதிபர்
சூழிபுரம், இலங்கை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நோக்கி இலக்கியப் பயணம்



மு. மணிமேகலை 96775 20336

முல்லைத்தீவு என்ற பெயர் அழகானது. அழகான முரண். ஆம்! சோகம் நிறைந்த இடம். முல்லைத் தீவில் புதுமாத்தலன் என்ற இடத்தில் வண்டியை நிறுத்தினோம். அங்கு மீனவக் குடியிருப்பிலுள்ள மக்களைச் சந்திக்கலாம் என்று நினைத்து ஒரு வீட்டின் முன் சென்று ஒரு பெண்ணிடம் எங்களைப் பற்றிக் கூறினோம். சோகம் கப்பியிருந்த அவர் முகத்தில் மகிழ்ச்சியின் ரேகை. கடந்த ஏப்ரல் மாத இதழில்கூட ஆசிரியர் இச்சந்திப்பைக் குறிப்பிட்டிருந்தார். எங்களை வீட்டிற்கு அருகேயுள்ள புளியமரத்தில் நாற்காலிகள் போட்டு அமரச் சொன்னார் அந்தப் பெண்மணி.

தன் மகளை வதனி என்று அறிமுகப்படுத்தினார். சோகத்துடன் அந்தப் பெண்ணும் எங்களுடன் வந்தமர்ந்தார். இரண்டுப் பெண் பிள்ளைகள். அந்தப் பெண்ணைக் கட்டிக் கொண்டு நின்றனர். போர்க்காலக் கொடுமைகளை அந்த அம்மா விவரித்துக் கொண்டிருக்கையில் இராணுவ வண்டி அவ்வீட்டைக் கடந்து சென்றது. இப்படித்தான் எங்களை உளவு பார்க்கின்றனர் என்றார். பின் அந்த வண்டி போன திசையில் திரும்பிப் பார்த்து, 'எல்லாத்தையும் இழந்துட்டு நாங்கள் இருக்கோம். என்னத்தப் பாக்குறாக' என்று ஆதங்கத்துடன் புலம்பினார்.

"உங்க கணவருக்கு என்னமா ஆச்சு?" என்று கேட்டவுடன் பொரிந்து தள்ளிவிட்டார். ''என் மனுசனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கிறீர்களா? இதோ இந்தப் புளிய மரத்தடியில்தான் மத்தியானம் உண்டுவிட்டு, சாய்ந்து உட்கார்ந்துகிட்டு இருந்தாரு. நாங்க உள்ள வேலையா இருந்தோம். அதே அந்தப் பகுதியில் இருந்து ஒரு ரவை (தோட்டா) குறிபார்த்து அடிச்சாங்க. நேரா அவர் நெத்தியில பாய்ஞ்சு, அதோட ரத்தம் வழிஞ்சமானிக்கே மனுசன் செத்துட்டாரும்மா.." என்று அந்தம்மா கூறியதும் சலனமற்றுப் புளியமரத்தடியைத் திரும்பிப் பார்த்தோம். கற்பனை கூடப் பண்ணிப் பார்க்க முடியவில்லை. உயிர் என்ன மதிப்பில்லாததா? அந்த அம்மா காட்டிய திசைப் பார்த்தோம். கடல் தண்ணீர்.

எங்கிருந்து எப்படி குறிபார்த்துச் சுட்டார்கள். அந்தம்மா தன் மகள் வதனியைக் காட்டி "இதோ இவ மனுசனும் தப்பிச்சு ஓடும்போது கொத்துக் குண்டு விழுந்து செத்துட்டாரு" என்றதும் அதிர்ந்தோம். முப்பத்தி மூன்று வயது வதனியின் முகத்தில் நிரந்தர சோகம். அவளுக்கு ஆறு குழந்தைகள் என்றதும் அதிர்ச்சி அடைந்தோம். அத்தனை குழந்தைகளுக்கும் அழகுத் தமிழ்ப் பெயர்கள். ஆண்களே இல்லாத அக்குடும்பத்தில் என்ன வேலை செய்து குழந்தைகளை எப்படி காப்பாற்ற முடியும்? அந்தப் பெண் கண் கலங்கி அழுகையை அடக்கிக் கொண்டு தன் அம்மா கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''அப்போ நாங்கள் என்ன செய்வதென்றே தெரியாமல் இறந்தவங்களையும் பார்க்க முடியாம பங்கருக் குள்ள (பதுங்கு குழி) குழந்தைகளையும் நுழைச்சு நாங்களும் பதுங்கிட்டோம்" "தண்ணியிலேயே ஓரமாய்ப் போயிடுங்க. இல்லன்னா குண்டடி பட்டுச் சாவீங்கன்னு எச்சரிச்சாங்க. இந்தப் பிள்ளைகளை கையிலேயும், இடுப்பிலேயும் தூக்கிக்கிட்டு தண்ணியிலேய ஓரமா ஓடி அங்க முகாமுக்குப் போயிட்டோம்மா" என்று அந்தம்மா கூறியதும் அனைவரின் கண்களும் கலங்கி விட்டன. என்ன செய்யப் போகிறோம் என்று மனம் துடித்தது. எனக்குக் கண்ணீரைக் கட்டுப் படுத்தவே முடியவில்லை. இந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்தன?

"சில தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஒரு வேளை உணவு சாப்பிடுகிறோம்" என்று முதன் முறையாக வாய் திறந்து கூறினார் வதனி. தற்போதைய அரசாங்கம் ஒரு குழந்தைக்கு மூவாயிரம் ரூபாய் கொடுப்பதாகவும் கூறினாள். இயக்கம் எல்லா மக்களுக்கும் வேலை கொடுத்தது. இப்போது வேலையும் கிடையாது. எங்கு போவதென்றே தெரியவில்லை என்று கலங்கினாள். மேலும், அந்த அம்மா "தலைவர் இருந்த போது ஒரு கஷ்டம்னு சொன்னா அடுத்த நிமிடமே எங்களுக்கு உதவி வந்து விடும். இப்ப நாதியில்லாம நிக்கிறோம்'' என்று வேதனையுடன் கூறினார்.

அப்போது உளவுத்துறை அந்தப் பக்கம் வந்ததைப் பார்த்த அந்த அம்மா "இதே சி.ஐ.டி வந்துட்டான். இருக்க வாரேன்" என்று கூறி அவசரமாக வாசல் பக்கம் சென்று 'இவர்கள் எங்கள் உறவினர்கள், கொழும்புவிலிருந்து வந்திருக்கிறார்கள்' என்று சிங்களத்தில் பேசி அவரை அனுப்பிவிட்டு வந்தமர்ந்தார்கள். எங்கள் அனைவருக்கும் சிறிது பயம் வந்து விட்டது. ஆபத்து எந்த நேரத்தில் எப்படி வருமோ?

கனத்த இதயத்துடன் கிளம்பும் போது அவர் எங்களிடம் "உங்களால் முடிந்ததைத் தாருங்கள்'' என்று கைகுட்டையை ஏந்தினார். அனைவரும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுக்கு ஆயிரம் இலங்கைப் பணத்தைக் கொடுத்தோம். இன்னும் எவ்வளவோ கொடுக்கலாம். வந்த இடத்தில் என்ன செய்வது? எங்களால் முடிந்ததைக் கொடுத்தோம். அத்தொகையை கருமலைத் தமிழாழன் அய்யா மூலம் வதனியிடம் கொடுத்த போது அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

"என்று தணியும் எங்களின் சோகம்?" என்று எழுதினார் ஆசிரியர். அதுதான் உண்மை. எப்படித்தணியும்? எப்படி மறப்போம்? மனம் பாரமாக இருந்தது. அவர்களுக்குத் தைரியம் கூறிவிட்டு கனத்த மனத்துடனும், கலங்கிய கண்களுடனும் வண்டியில் ஏறி அமர்ந்தோம். சாலையின் ஓரத்தில் உளவுத்துறை எங்களைக் கவனித்துக் கொண்டிருப்பதைக் கண்டோம். இந்தத் தாக்கத்தில் மனதை ஆறுதல் படுத்த எங்காவது கோவிலுக்குச் செல்லலாம் என்றேன். "ஆமாம்! அடுத்து திரிகோணமலை சிவன் கோயில் போகிறோம்" என்றார் ஆசிரியர்.

முல்லைத் தீவின் தாக்கமே என் மனதில். எதைப் பற்றியும் பேசாமல் அனைவரும் அமைதியாக வந்தனர். அனைவர் மனதிலும் அத்தாக்கம்தான். பேசமுடியாமல் செய்து விட்டது என்று உணர்ந்தேன். என் நண்பர்கள் குருப்பிற்கு வாட்ஸ்அப்பில் சுருக்கமாக என் மனநிலை பற்றியும் கோவில் செல்வது பற்றியும் செய்தி அனுப்பினேன். ஒரு நண்பர் பகுத்தறிவுவாதி, நாத்திகர் பதில் அனுப்பினார். "உங்களின் கடவுள் நம்பிக்கையை நான் குறை கூறவில்லை. கடவுள் அந்த அப்பாவிகளைக் காப்பாற்றி இருக்கலாம் அல்லவா?" என்று. என்ன பதில் அனுப்பவது? என்று தெரியாமல் 'சுவிட்ச் ஆப்' செய்து விட்டு கண்ணை மூடிக் கொண்டேன்.

"அதற்கு முன் போகும் வழியில் வெந்நீர் ஊற்று பார்த்துவிட்டுப் போகலாம்" என்றார் ரோசன். புல்மோட்டை என்ற இடத்தை வண்டி அடைந்தது. கின்னியா சுடுதண்ணீர் நீர் ஊற்று என்ற பலகை காணப்பட்டது. ஆறு வெந்நீர்க் கிணறுகள் இருந்தன. ஒவ்வொன்றிலும் வெந்நீர் தானாகச் சுரக்கிறது. மிதமான சூடு, அதிக சூடு என்று ஒவ்வொரு கிணற்று நீரும் அருகருகே இருந்தது வியப்பு.

ஆனால் தலையில் கங்காதேவியைத் தாங்கிய சிவபெருமான் சிலை கவனிப்பாரற்றுத் ஒரு மூலையில் வைக்கப் பட்டு இருந்தது. அந்த அறையில் அச்சிலையின் முன்னே திருநீறும், குங்குமமும் அடுக்கிய செங்கல்லின் மேல் பெயருக்கு வைக்கப்பட்டிருந்தது. வெந்நீர் ஊற்றுக்கு வெளியே அழகான இடத்தில் அற்புதமான புத்தர் சிலை தாமரைப் பூக்களைத் தட்டில் ஏந்தியபடி அருகே குழந்தையும்...!

பயணம் தொடரும்....

## பூத்திடும் சிரிப்பால் உலகாளு!

பல்லைக் காட்டி சிரிப்பதனால்
பறந்தே ஓடும் துயரங்கள்
தொல்லை மறந்திடத் தோள் கொடுக்கும்
துரத்துமே பற்பல கவலைகளை!

வள்ளுவர் சொன்னார் நகுஎன்றே
வாய்விட்டுச் சிரி நோய் போகும்
துள்ளிய சிரிப்பில் கலைவாணர்
தொடர்ந்து மகிழ்ந்திட வைத்தாரே!

சுவையினில் நகைச்சுவை மனிதருக்கு
சுதந்திரப் பறவையின் சுகம் காட்டும்
அவையினில் சிரிப்பலை எழுப்பியுமே
அணுகிடும் கவலைக்கு மருந்தளிப்போம்



தவறாமல் நாளும் சிரித்தால்
தாக்கிடும் சஞ்சலம் பறந்தோடும்
புவியினில் நூறாண்டே வாழப்
புன்னகை சிரிப்பே கைகொடுக்கும்

சிரித்துமே பழகிடக் கற்றுக் கொள்
சிதறியே மனஅழுத்தம் ஓடும்
உரத்தக் குரலில் ஒலி எழுப்பி
உனக்கும் சிரிப்பால் கலகலப்பு!

விலங்கும் பறவையும் சிரிப்பறியா
வெற்றிப் புன்னகை மனிதனுக்கே!
புலம்பி அழுவதைப் புறமொதுக்கு
பூத்திடும் சிரிப்பால் உலகாளு..!

**புலவர் ஞானசேகரன், திருலோக்கி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீராம ஜெயம்

# ஸ்ரீஜெயமாருதி விஸ்வரூப ஆஞ்சநேயர்

## திருக்கோவில்



இக்கோவிலில் எழுந்தருள்பாலிக்கும்
ஸ்ரீஜெயமாருதி விஸ்வரூப ஆஞ்சநேயருக்கு
பிரதிமாத அம்மாவாசையில் சிறப்பு
வழிபாடாக வடமாலை சாத்தி, சிகப்புத்
துணியில் மட்டத்தேங்காய் வைத்து மூன்று
மாத அமாவாசை தொடர்ந்து பூஜை செய்து
வந்தால் நினைத்த காரியம் பூர்த்தியாகும்

# ஸ்ரீஜெயமாருதி

## ஜோதிட நிலையம்





உலக ஆன்மீக மக்களின் நம்பிக்கை பெற்ற
ஸ்ரீ அனுமத் உபாசகர், ஜோதிட மாமணி வானசாஸ்திரி

**P.ராமன் பட்டாச்சாரியார்**
**R.மோகன் பட்டாச்சாரியார்**



528, 1/13, மெயின்ரோடு, காமராஜ் நகர், மேலக்காவேரி போஸ்ட், கும்பகோணம்
போன் : 0435-2443351, செல் : 94435 42592, 99522 61634
e-Mail: maruthi_jaya2003@yahoo.co.in, Website: www.jeyamaruthi.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம் கவர்ந்த வனமமாம்

# இனிய நந்தவனத்தின்

இருபதாம் ஆண்டு விழா சிறக்க வாழ்த்துக்கள்




வாழ்த்துக்களுடன்....

**கவிஞர் சக்தி ஜோதி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இனிய நந்தவனம் பெங்களூர் சிறப்பிதழ் அறிமுக விழா

அண்மைக் காலமாக இனிய நந்தவனம் பல்வேறு சிறப்பிதழ்களை வெளியிட்டு வருகிறது. அந்த வரிசையில் கடந்த டிசம்பர் மாத இனிய நந்தவனம் பெங்களூரு சிறப்பிதழாக வெளிவந்தது. இதன் வெளியிட்டுவிழா பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் 18/12/2016 அன்று சிறப்பாக நடைபெற்றது.

பெங்களூர் தமிழ்ச் சங்கத் தலைவர் தி.கோ.தாமோதரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு அம்பேத்கர் சட்டக் கல்லூரி நிறுவனர் சி. இராமமூர்த்தி முன்னிலை வகித்தனர். முனைவர் கீரைத் தமிழன், பெங்களூரு தமிழ் நண்பன் இதழாசிரியர் அந்தோனி சந்தோசு, கவிஞர் இறையடியான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர்.

முன்னாள் அமைச்சர் ந. நல்லுசாமி அவர்கள் சிறப்பு மலரை வெளியிட அம்பேத்கர் சட்டக்கல்லூரி நிறுவனர் பேராசிரியர் சி. இராமமூர்த்தி, தொழிலதிபர் ஆர்.பி. வரதராஜன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். சிறப்பிதழ் குறித்து கவிஞர் பா. தென்றல் வாழ்த்துக் கவிதை வாசித்து அனைவரின் பாராட்டையும் பெற்றார். முன்னதாக இனிய நந்தவனம் ஆசிரியர் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார். பெங்களூர் தமிழ்ச் சங்கத் துணைச்செயலாளர் சுந்தரவேல் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். போர் முரசு கதிரவன் நிகழ்ச்சியை மிக அழகாக தொகுத்து வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய நந்தவனம் 20ஆம்
ஆண்டு சிறப்பிதழ்
வெற்றியடைய வாழ்த்துக்கள்



GS METAL
ENGINEERING PTE. LTD.

METAL FABRICATION
MARINE MECHANICAL SERVICES

Reg. No. : 201533092C



C. Selvaraj
Managing Director
HP : 8149 6835

No.1, Soon Lee Street, #04-56, Pioneer Centre, Singapore 627 605
Ph : 6515 0436, Email : gsmetalengineering@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகம் ரெஸ்டாரண்ட்

# KARPAGAM A/C RESTAURANT






## KARPAGAM RESTAURANT

Eat Fresh Healthy Testy

**No.113, W.B. Road, Opp Devar Hall, Trichy - 8.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய நந்தவனம் பதிப்பகம் வெளியீடுகள்

| | |
|---|---|
| முதல் பரிசு (சிறுகதைகள்) | விலை : ரூ.80/- |
| நாட்குறிப்பற்றவனின் இரகசிய குறிப்புகள் (கவிதை) | விலை : ரூ.50/- |
| காற்றில் அலையும் குரல் (கவிதை) | விலை : ரூ.80/- |
| ஜன்னல் ஓரத்து நிலா (கவிதை) | விலை : ரூ.80/- |
| பிரதிபலிக்கும் பிம்பங்கள் (கவிதை) | விலை : ரூ.80/- |
| நெஞ்சிருக்கும் வரை (கட்டுரை) | விலை : ரூ.120/- |
| மனதைத் தழுவும் காற்று (கவிதை) | விலை : ரூ.80/- |
| வண்ணத்துப் பூச்சிகள் மீது நத்தைக் கூடுகள் (ஹைக்கூ) | விலை : ரூ.50/- |
| விழிகள் சுமந்த கனவுகள் (கவிதை) | விலை : ரூ.50/- |
| பொய் எனும் மெய் (கவிதை) | விலை : ரூ.80/- |
| சிலந்தி பின்னிய பட்டு வலையில் சிக்கிய விண்மீன்கள் (கவிதை) | விலை : ரூ.80/- |
| டோக்கன் நம்பர் 18 (சிறுகதைகள்) | விலை : ரூ.80/- |
| ஆற்று மீன் குரல் (கவிதை) | விலை : ரூ.60/- |
| மௌனத்தின் மொழி பெயர்ப்பாளன் (கவிதை) | விலை : ரூ.60/- |
| காட்டு நெறிஞ்சி (கவிதை) | விலை : ரூ.110/- |
| ஆயுதப் பூ (சிறுகதை) | விலை : ரூ.80/- |
| ஆதலால் முயற்சி செய் (கவிதை) | விலை : ரூ.100/- |
| தோல்விகளைத் தோற்கடிப்போம் (கட்டுரை) | விலை : ரூ.100/- |
| எழுதாத பாடல்கள் (கவிதை) | விலை : ரூ.60/- |
| ஏதோ ஒரு ஞாபகம் (கவிதை) | விலை : ரூ.110/- |
| அவிழ்ந்தே கிடக்கும் கூந்தல் (கவிதை) | விலை : ரூ.100/- |
| நான் கண்ட மியான்மா-பர்மா (பயணக் கட்டுரை) | விலை : ரூ.110/- |

புத்தகம் வேண்டுவோர் தொடர்புக்கு...

## இனிய நந்தவனம் பதிப்பகம்

தபால் பெட்டி எண் : 214, நம்பர் 17, பாய்க்காரத் தெரு உறையூர்,
திருச்சி – 620 003. தமிழ்நாடு பேச : 94432 84823
மின்னஞ்சல் : nandavanam10@gmail.com
இணையதளம் : www.iniyanandavanam.com
Nandavanam Chan















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கி பிங்கி பாங்கி

**கவிஞர் மு.அறவொளி அவர்களின் கவிதைத் தொகுப்பை முன்வைத்து**

**இரா. பூபாலன்**

கவிதைகளின் மீதான அன்பு நம் அனைவரிடமும் நிறைந்து கிடக்கின்றது. அதன் பொருட்டு தான் நாம் நாளிதழ், வார இதழ், முதற்கொண்டு சுண்டல் மடித்துத் தரப்படும் காகிதம் வரைக்கும் கவிதைகளை வாசிக்கத் தேடுகிறோம். கவிதை எழுதுதல் என்பது பெரும் கலையன்று. ஆயினும் கவிதையாக எழுதுதல் உண்மையில் பெரும்கலை தான்.

கவிதைகளை ஒரே ஒரு முறை ஏதோ ஒரு காரணத்துக்காக முயற்சித்துப்பார்க்கும் ஒருவருக்கும் சரி, தொடர்ந்து தனது நாட்களை கவிதையின் வசமே ஒப்படைத்திருக்கும் கவிதைக் காதலர்களுக்கும் சரி உரைநடையில் சொல்ல இயலாத ஏதோ ஒன்றை கவிதை தன்வசம் வைத்திருப்பதாகப்படுகிறது. அல்லது உணர்வை உரைநடையில் சொல்வதில் ஒரு போதாமை தோன்றுகிறது. அந்தப் போதாமை தான் கவிதைகளை நாடச்செய்கிறது.

மின்னிதழ் ஆசிரியராக, பொறியாளராக, ஓய்வுபெற்ற ராணுவ வீரராக, சமூகப்பணிகளுக்குத் தோள் கொடுக்கும் தோழராக என பல அரிய முகங்களுடன் அறியப்பட்ட திரு.மு.அறவொளி அவர்கள் தன்வசம் நிறைய கவிதைகளை வைத்திருந்திருக்கிறார். இத்தனை முகங்களுக்கிடையிலும் தனது கவிதை முகத்தை இழக்காமல் உடன் அழைத்தே வந்து இருக்கிறார்.

குழந்தைகளின் உலகுக்குள் நுழைந்து கவிதைகளைக் கொண்டு வருவது கவிஞர்களுக்கு வெகு இலகுவாக இருக்கிறது. ஆனால், கொண்டு வரும் கவிதைகளின் கவித்துவத்தைக் காப்பாற்றுவது தான் கவிஞர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விழுக்காடுகளில் வித்தியாசப்படும் இடம். குழந்தையையே கவிதையாகக் கண்ணுறும் நாம் குழந்தைமையையும் அவ்வாறே காண்கிறோம் .

யாழினியின் கவிதைகளில், கற்பனைகளில் ஒரு காடு இருக்கிறது. அது உலக வழக்கத்துக்கு எதிராக இருக்கிறது. வளர்ந்த மனிதர்களின் அப்பட்டமான உண்மைகளுக்கு எதிர் திசையில் இருக்கிறது. அவளின் விதிப்படி மான்கள் தான் புலியைத் துரத்துகின்றன, சிட்டுக்குருவி சிங்கத்திடம் விளையாடுகிறது, இப்படி இன்னும் நீள்கிறது கற்பனை,

**<u>யாழினியின் காடே அதிர்ந்தது</u>**

**"மான் கூட்டம் புலியைத் துரத்த**
**சிட்டுக்குருவி சிங்கத்தின் பிடரிக்குள்**
**புகுந்து விளையாட**
**கரடி கழுத்தில் குரங்கொன்று**
**பேன் பார்க்க**
**முதலையின் முதுகில்**
**முயல் குட்டி பயணிக்க**
**சாப்பிட வாடி என்ற அதட்டலில்**
**யாழினியின் காடே அதிர்ந்தது"**

யாழினி வைத்திருக்கும் கற்பனைக் காடு கவிதையின் வழியாக நமது நாடாகிறது. பெருகிக் கிடக்கும் வன்மம் நிஜ வாழ்க்கையாகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைத்தாண்டிய அன்பு நம் கனவாகிறது. இப்படித்தான் ஒரு குழந்தை கவிதை பெரியவர்களுக்குமான கவிதையாகிறது.

குழந்தைகளின் அறிவு வளர்ச்சியும், முதிர்ச்சியும் அபரிமிதமானது. நம்மை ஆச்சர்யத்தில் ஆழ்த்துவது. நிலவை வைத்து இத்தனை காலம் கவிதை எழுதுகிறோம், இத்தனை காலம் ஆராய்கிறோம், இத்தனை செயற்கைக்கோள்கள் நிலவை வட்ட மடிக்கின்றன, இறங்கியும் ஆராய்கின்றன, ஆனால் யாழினியின் மிகப்பெரும் கண்டுபிடிப்பை இந்த நூற்றாண்டில் எந்த விஞ்ஞானமும் நிகழ்த்தியதாகத் தெரியவில்லை.




**வானின் பின் பக்கம்**

**"வானின் பின் பக்க வண்ணம்**

**வெள்ளைதான் அப்பா**

**எப்படிக் கண்டு பிடித்தாய்**

**அதோ அந்த ஓட்டை**

**வழியாகத்தான் என்று**

**நிலவைக் காட்டினாள் யாழினி**

**பெருமிதத்துடன்"**

வானத்தின் பின்பக்க வண்ணத்தைப் பிரதிபலிக்கும் ஓட்டையாக நிலவைக் கற்பனை செய்பவள் எத்தனை அழகானவள், எவ்வளவு கொண்டாடப்பட வேண்டியவள். இதோ நான் கொண்டாடுகிறேன். வாரியணைத்து உச்சி முகர்கிறேன் யாழினியை, இந்தக் கவிதையை, இந்தக் கவிஞனை.

சொற்களின் அரை வேக்காட்டுத் தனம் எப்போதும் ஆபத்தானது. கவிஞர்கள் எழுத்தாளர்களையும் தாண்டி ஒவ்வொரு மனிதனுக்கும் சொற்கள் அவ்வளவு முக்கியமானவை. மனித இனத்தை மேம்பட்ட இனமாக மாற்றிய ஒன்றாக மொழியையும் குறிப்பிடலாம். மொழியின் வெளிப்பாடு சொற்கள். அவற்றை வைத்து நாம் எதுவும் செய்யலாம். கலை, இலக்கியம், அரசியல் என அனைத்திலும் சொற்களை வைத்தே மாற்றப்பட்ட வரலாறு நிறைய உண்டு.

**செரிமானம்**

**"எப்போதும் நன்கு வேகவைத்து**

**பின் பரிமாறுங்கள்**

**இல்லையெனில்**

**செரிமானம் ஆகாமல் அங்கே**

**சிக்கிக் கொள்ளலாம்**

**சில சொற்கள்"**

சொற்கள் நம் தலையெழுத்தையும் மாற்றும் சக்தி கொண்டவையாக இருக்கும். ஆக, ஒரு தத்துவார்த்தமான கவிதையில் சொற்களைப் பிரயோகிப்பதின் முக்கியத்துவத்தை கவிஞர் பதிவு செய்கிறார்.

காலம் காலமாக இருக்கும் நமது நம்பிக்கைகளை, மூட நம்பிக்கைகளை உடைத்து உண்மையை உரக்கச் சொல்லி அறிவூட்டுவது தான் அறிவியல். மாறாக அறிவியலின் உண்மைகளையும், நிதர்சனங்களையும் தாண்டி, அதை அழகியலாகப் பார்ப்பது தான் படைப்பின் கண்.

**வழி மறந்து**

**"வழி மறந்து**

**நிற்கின்றன**

**மலை ஏறிய**

**பாறைகள்"**

மலை மேல் கிடக்கும் பாறைகள், மலையேறி வழி மறந்து போனதால் தான் கிடக்கின்றன என கவிதை பேசுவது அறியாமையை அல்ல, அது அழகியல். கவிதை அறிவியல் உண்மைகளை வளர்ந்த மனிதர்களைப்போன்ற அறிவுக்கண்களால் பார்பது அன்று. அது, அழகியல் நிரம்பிய ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் கண்களால் இந்த பிரம்மாண்ட உலகைப் பார்ப்பதுவும் கூட என்பதைத்தான் இந்தக் கவிதை உணர்த்துகிறது.

எதை விடவும் கவிஞனின் உணர்வுகளை, கவிதையின் பொருளை அசைத்துப் பார்ப்பது ஒரு மரணமாக இருக்கக்கூடும். அதிலும் ஒரு எளிய உயிரின் மரணம் கவிதையின் ஆன்மாவை நிச்சயம் அசைத்துப்பார்க்கும்

**சாமரம் வீசிக்கொண்டிருந்தது**

**"உறங்குகிறதோ என**
**எண்ணிக் கொண்டு**
**சாமரம் வீசிக்கொண்டிருந்தது**
**ஆறாவது வாகனம்**
**அந்தப் பறவையின் மீது**
**ஏறிக் கடந்த பின்னும்**
**அதில் ஒட்டிக் கொண்டிருந்த**
**மிச்சம் மீதி சிறகுகள்"**

பறவையின் மரணத்தைப் பதிவு செய்த கவிதைகள் ஏராளம் . அது ஒரு குறையாகவே தெரியாதவாறு இன்னும் இன்னும் அழகான பதிவுகள் வந்த வண்ணமேயுள்ளன. காரணம், அத்தனை மரணங்கள் நிகழ்கின்றனவே.

இது கவிஞரின் முதல் கவிதைத் தொகுப்பு, முதல் தொகுப்புக்கான அத்தனை வழமைகளையும் கொண்டிருக்கும் தொகுப்பில் அதை மீறியும் துருத்திக் காண்டு சில கவிதைகள் அழகாகத் தெரிகின்றன. அதன் பின்னணியில் கவிஞனின் புலமையும் அனுபவமும் மட்டுமல்லாமல் அவரது மனதும் புலப்படுகிறது.

கவிதையை ஒரு விளையாட்டுப் பொருளைப் போல பாவித்தல் எப்போதும் சரியான விளைவுகளைத் தந்துவிடாது. இன்னும் கொஞ்ச மெனக்கெடல்களும் இருந்திருந்தால் இந்தத் தொகுப்பு இன்னும் உயரத்தைத் தொட்டிருக்கும். இப்போதும் ஒன்றும் குறையில்லை. தோகை விரித்தாடும் மயில் அழகு, விரிக்க முயலும், விரித்து சுருக்கி போக்குக் காட்டும் மயிலும் அழகுதான்.

இங்கி பிங்கி பாங்கி போட்டுத் தேர்வு செய்ய வேண்டியதில்லை எல்லாக் கவிதைகளுமே வெற்றி தான். அவசியம் வாசித்துப்பாருங்கள். வாழ்த்துகள் கவிஞருக்கு ஆசிரியர் : மு.அறவொளி, வெளியீடு : கொலுசு, பொள்ளாச்சி. தொடர்புக்கு : **94861 05615**

**20வது ஆண்டை நிறைவு செய்யும்**
**சஞ்சிகை நந்தவனத்துக்கு...!**
**எமது அன்பான வாழ்த்துக்கள்**



முகில் வந்து கதிரவனை வானமதை
மறைக்கக்கூடும் உழவின்றி விளை நிலங்கள்
அழியக் கூடும் தாரின்றி திருவிழாவும் சிறப்பு
குறையக்கூடும் புகழ்பூத்த எழுத்தாளன்
ஒருத்தன் போதும் தீபட்டு
நீரான நூல் ஒன்றை மீட்டுத்தர..
என்ற வரலாற்றுக்கு நத்தவனம் உதாரணமே..!
வாழிய! வாழிய!! பல்லாண்டு வாழியவே!!!
சூறாவழி காற்றில் சிக்கி படகு
சீதைபட்ட நிலையிலும் நூலறுந்த பட்டமதாய்
துணையிழந்து வதைபட்ட போதிலும்
செந்தமிழின் உயிர்மூச்சாய் நிமிர்ந்தெழுந்த தம்பி
சந்திரசேகரனே நீ வாழ்க நின் பணி வாழ்க!
உன் தமிழ் பணிகூறும் தரணி வாழ்த்தும்
நந்தவனம் வாழ்க! உன் நெஞ்சுறுதி இலட்சியமே
இன்றுயர்ந்த நந்தவனம்.
நீரடித்து நீர் விலகி போனதில்லை நெஞ்சுறுதி
கொண்டவர்க்கு நிலையடித்து தலைவெடித்து
போனதில்லை தமிழுணர் கொண்டவர்க்கு
காரிடித்து சிதைவதில்லை வானமது என்று
என்றும் கையிடித்து சாய்ந்ததுண்டுடோ
இமயமலை என்றும் பாரிடிந்து பிரளையமே
வாழ்க்கையிலே வந்த போதும் தமிழ்பற்றுக்
கொண்டோர்க்கு வந்திடாது நெஞ்சில்லச்சம்.
இருந்திருக்க வேண்டும் அந்த பாரதியும்
இன்னாள் துயர்மூழ்கி வெளிவந்த
நந்தவன இதழை மாலையிட்டு வரவேற்று
வாழ்த்துரைத்து மகிழ்ந்திருப்பான்!
இருந்திருக்க வேண்டுமந்த பாவின் வேந்தன்
தீகுளிதுவந்த நந்தவன இதழ்கண்டு ஊர் கூட்டி
மகிழ்ந்திருப்பான் - வருந்தாதே தம்பி
சந்திரசேகனே துணை பிரிந்தநெஞ்சம்
துயர் தந்த போதினிலும் தேசமெலாம்
போற்றி நிற்கும் உன் இலட்சிய நந்தவனம்
துயர் துடைக்கும் மகிழ்ந்துவிடு..!
வாழிய..! வாழிய!! நீடுழி வாழியவே!!!
நம்பிக்கையோடு

கவிஞர். **வேலணையூர் பொன்னண்ணா** டென்மார்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்கண்ணன் பதிப்பகம்

வழங்கும்

## குறைந்த செலவில் புத்தகம் வெளியிடும் சிறப்புத் திட்டம்

இவ்வுலகில் ஒவ்வொரு படைப்பாளிக்கும் தன் படைப்புகளை அச்சில் பார்க்க வேண்டும் என்கிற ஆசை வாழ்வில் ஒரு இலட்சியமாகவும், கனவாகவும் இருந்து வருகிறது. அதனை நிஜமாக்குவதில் ஏற்படும் நடைமுறை பிரச்சனைகளான; பொருளாதார பற்றாக்குறை, வியாபார வசதி, புத்தக வடிவமாக்கும் வழிமுறைகள் என பல்வேறு விஷயங்களை சமாளிக்க முடியாமல் அந்தக் கனவைத் தள்ளிப்போடுகிறார்கள். சிலர் தன் காலம் முடியும் வரை தன் படைப்புகளை வெளிக்கொணர்வதே இல்லை. படைப்பாளிகளான உங்களுக்கு படிக்கும்போதே அந்தக் கனவு நிஜமாகி அது உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனையாகவோ அல்லது உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு முதல் படியாகவோ, புத்தக உலகில் உங்கள் படைப்புகளை பதிவு செய்து காலத்திற்கும் அழியா படைப்புகளாக அமையவே எமது மலர்க்கண்ணன் பதிப்பகம் இத்திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. படைப்பாளிகள் இத்திட்டத்தை பயன்படுத்தி படைப்பாளிகளாக உருவாக வேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

- சிறுகதை / கவிதை / கட்டுரை புத்தகங்களை மட்டுமே நாம் வெளியிடுகிறோம்.
- புத்தக அளவு டெம்மி சைஸ் (14 X 21செமீ)
- ஒரு புத்தகம் குறைந்தபட்சம் 80 பக்கங்கள் இருக்க வேண்டும்.
- மேலும் சேர்க்க விரும்பும் ஒவ்வொரு பதினாறு பக்கங்களுக்கும் ரூ.1000 ரூபாய் கூடுதலாக கொடுக்கவேண்டும்.
- **80 பக்கங்கள் அடங்கிய 100 பிரதிகள் ஆசிரியருக்கு வழங்கப்படும்.**
- பின்புற அட்டைப்படத்தில் படைப்பாளரின் விருப்பத்திற்கேற்ப அவர்களது புகைப்படம் மற்றும் குறிப்புகள் இடம்பெறும். முகப்பு அட்டைக்கு மூன்று வடிவங்கள் கொடுக்கப்படும். அவற்றில் ஏதேனும் ஒன்றினை தேர்வு செய்ய வேண்டும். உங்கள் விருப்பமுள்ள படங்கள் (அதிக தரமான) தேவையிருப்பின் அந்த படத்தினை குறுந்தகட்டில் முன்னதாகவே தரவேண்டும்.
- **நீங்கள் பதிப்பகத்திற்கு கொடுக்கும் முழுமையான தொகை ரூ.6000 மட்டுமே. முன்பதிவு கட்டணம் ரூ. 500/-. மீதித் தொகை இறுதி வடிவமைப்பு முடிந்தவுடன் நூல் அச்சில் ஏற்றும் முன் செலுத்த வேண்டும்.**
- உங்களுக்காக நாங்கள் செய்யும் பொருளாதாரச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக வெளியீடு மற்றும் விற்பனை உரிமை பதிப்பகத்தாருக்கு என்று அச்சிடப்படும்.
- போட்டிகளுக்கு, நூல் மதிப்புரைகளுக்கு அனுப்புவது, பங்கேற்பது போன்றவைகள் படைப்பாளிகளின் சொந்த விருப்பம். பதிப்பகம் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைப்போம்.
- **எங்கள் பதிப்பகம் நடத்தும் விழாவில் வெளியிட நினைத்தால் ரூ.2,000 தனியாக கொடுக்கவேண்டும். (விழா பற்றிய விபரங்களை தனியாக அறிவிப்போம்)** உங்கள் பகுதியில் அல்லது விரும்பும் இடத்தில் நீங்களாகவே தனியாக விழா ஏற்பாடும் செய்துகொள்ளலாம்.
- ISBN எண் எக்காரணம் கொண்டும் இடம்பெறச் செய்யமுடியாது. இந்த எண் அவசியம் என நினைப்பவர்கள் தயவுசெய்து இத்திட்டத்தில் பங்குபெற வேண்டாம்.
- உங்கள் படைப்புகளை தமிழகம் முழுவதும் நடக்கும் புத்தகச் சந்தைக்குக் கொண்டு செல்கிறோம்.

உங்கள் படைப்புகளை விற்பனைக்கு வைத்து மக்களிடமும், இலக்கிய ரசிகர்களிடமும் எடுத்துச் செல்கிறோம். காலத்தால் அழியா படைப்புகளை உருவாக்கி படைப்பாளராக உருவாகும் உங்களை மீண்டும் வாழ்த்துகிறோம்.

மேலும் விவரங்களுக்கு...

மலர்க்கண்ணன் பதிப்பகம்
9/8-1, 4வது தெரு, லக்ஷ்மி இல்லம்,
ஜெய் நகர், அரும்பாக்கம், சென்னை - 106.
பேச : 9551066112
mamcreations2014@gmail.com

**நூல் விவரம்:**

| | | |
|---|---|---|
| பக்கம் | : | 80 |
| அளவு | : | Demmy (14cm x 21 cm) |
| தாளின் தரம் | : | N.S. Yellow |
| அட்டை | : | 250 gsm Art Board with Glossy/Matt Lamination |
| பைண்டிங் | : | Perfect Binding |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியின் வேர்

தஞ்சை தாமு

ஒரு பலூன் பறப்பது அதனுடைய வண்ணத்தால் அல்ல. உள்ளிருக்கும் காற்றால். அதுபோல் ஒருவன் உயர்வடைவது வெளித்தோற்றத்தால் அல்ல. உள்ளிருக்கும் எண்ணத்தால். அதனால்தான் **Attitude determines altitude** என்கிறார்கள். உள்ளத்தனையது உயர்வு.

உள்ளத்தின் இயல்பை வடிவமைப்பதில் நேர்மறைச் சிந்தனைக்குப் பெரிய பங்கு உண்டு. நேர்மறைச் சிந்தனையே உயர்ந்த பண்புகளின் நாற்றங்கால். அது இருந்தால் சகிப்புத்தன்மை, தன்னம்பிக்கை, சாந்தம் அனைத்தும் தாமே வரும்.

'நடப்பது நன்மையாக இருக்கும்' என்று நினைப்பது மட்டுமே நேர்மறை எண்ணம் அல்ல... எது நடந்தாலும்



நன்மைக்காகத்தான் இருக்கும் என்று ஏற்றுக் கொள்வதும் நேர்மறை எண்ணம்தான்... ***Positive thinking is not only about expecting the best to happen. But it is also about accepting whatever happens for the best.***

புத்த மதத்தை வெளியூரில் பரப்ப சில போதகர்கள் தேவை. தலைமை குரு அதற்கான தேர்வை நடத்துகிறார். ஒரு சீடரைக் கேட்கிறார்.

"நீங்க முண்டாசுப்பட்டியில் புத்தர் கருத்துகளைப் பரப்ப விரும்புறீங்களா?"

"ஆம்..."

"போற இடத்திலே யாருமே உங்க பேச்சைக் கேட்கலைன்னா என்ன செய்வீங்க...?"

"பேச்சைதானே கேட்கலை... யாரும் புறக்கணிக்கலையேனு சந்தோசப்படுவேன்..."

"உங்க பேச்சைப் புறக்கணிச்சா என்ன பண்ணுவீங்க...?"

"புறக்கணிக்கத்தானே செய்றாங்க... யாரும் திட்டலையேன்னு சந்தோசப் படுவேன்"

"யாராவது திட்டுனா என்ன செய்வீங்க?"

"திட்டத்தானே செய்றாங்க... யாரும் அடிக்கலையேனு சந்தோசப்படுவேன்"

"யாராவது அடிச்சா என்ன பண்ணுவீங்க?"

"கைகளாலேதானே அடிக்கிறாங்க... கல்லாலே அடிக்கலையேன்னு சந்தோசப்படுவேன்"

"கல்லாலே அடிச்சா என்ன பண்ணுவீங்க...?"

"கல்லாலேதானே அடிக்கிறாங்க... ஆயுதங்களாலே தாக்கலையேன்னு சந்தோசப்-படுவேன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆயுதங்களாலே தாக்குனா என்ன பண்ணுவீங்க?"

"ஆயுதங்களாலேதானே தாக்குறாங்க... என்னை யாரும் கொல்லலையேனு சந்தோசப்படுவேன்..."

"உங்களைக் கொலை பண்ணிட்டா என்ன செய்வீங்க...?"

"இந்த உலக வாழ்க்கையிலேர்ந்து விடுதலை தந்ததுக்காக சந்தோசப்படுவேன்"

இப்படி 'எது நடந்தாலும் நல்லதுக்காக' என்று ஏற்பதுதான் நேர்மறை எண்ணம்.

இருட்டு என்று ஏதுமில்லை. 'இருட்டு என்பது குறைந்த வெளிச்சம்' என்பார் மகாகவி பாரதி. 'எந்த இருட்டுக்கும் உண்டு ஒரு சூரிய முற்றுப் புள்ளி' என்பார் கவியரசர் வைரமுத்து. இருட்டில் எதையும் பார்க்க முடியாது என்பது தவறு. இருட்டில் கறுப்பு நிறத்தையும் காணமுடியும்.

தோல்வி என்று ஏதுமில்லை. தோல்வி என்பது ஒத்திவைக்கப்பட்ட வெற்றி. 'தோல்வி என்பது மாறுவேடமிட்ட வெற்றி' (கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா). வெற்றி என்பது பெற்றுக் கொள்வதற்கு. தோல்வி என்பது கற்றுக் கொள்வதற்கு. 'ஒவ்வொருமுறை தோற்கும்போதும் என்னிடமிருந்து ஒரு முட்டாள்தனம் வெளியேறுகிறது' என்றார் சார்லி சாப்ளின்.

வெற்றி உன்னைப் பிறருக்கு அறிமுகப்படுத்தும். தோல்வி உன் சக்திகளை ஒருமுகப்படுத்தும். 'வெற்றி என்பது உன் நிழல் போன்றது. அதைத் தேடி நீ போக வேண்டாம். நீ வெளிச்சத்தை நோக்கிச் சென்றால் வெற்றி உன்னுடன் வந்துகொண்டே இருக்கும்' என்பார் மேனாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். வெற்றி என்பது நம் மூளையின் அளவைப் பொறுத்ததல்ல. அது நம் எண்ணங்களின் அளவைப் பொறுத்தது. ***Success never depends on the size of our brain. It always depends on the size of our thought.***

# என் புத்தகம்

புரட்டிக் கொண்டே
இருக்கிறேன்
எனக்கான பக்கங்கள்
நீளுகின்றன...

காய்களும்
வலிகளுமே
பல பக்கங்களை
ஆக்கிரமித்தபடி....

ஒன்றிரண்டு நீரூற்றுகள்
வழிந்தோடுகின்றன...



பெரும்பாலும்
குடிசைகளே
நிறைந்திருக்கின்றன...

ஈக்களை
அழிப்பதற்கு
வழியில்லை...

கொசுக்கள்
கூட்டமாய்
கும்மாளமிடுகின்றன.....

மாவிலை தோரணங்களாய்
மாட்டுக்கறி தோரணங்கள்
அலங்கரிக்கின்றன....

எங்கோ உதித்த தென்றலி;
அங்கும் தனது தடத்தை
பதித்தபடி
அள்ளிச் செல்கிறது
இனம் புரியாத வாசத்தை....!

என் புத்தகம்
கிழக்குப் பக்கமாகவே...
இருந்த போதும்
இருண்டே கிடக்கிறது...



**சோலச்சி**, புதுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியச் செல்வங்களுள் தலை சிறந்தது திருக்குறள். தமிழரே அல்லாமல் அயலவரும் உரிமைப் பாராட்டிப் பயன் எய்துதற்கு மிக்க துணையாவது இந்நூல். தான் தோன்றிய நாள் முதல் தலைமுறை தலைமுறையாக எத்தனையோ நாட்டவரும், மரபினரும், மொழியினரும், சமயத்தினரும் நுகர்ந்து பயன் பெறுமாறு செய்தும் அச்சல் அழியாச் செல்வமாகத் திகழ்வது திருக்குறள் ஒன்றே ஆகும்.

சான்றாண்மை நிறைந்த அரும் பெரும் புலவர் பெருமானார் என உலகில் உள்ள எல்லா மொழிப் புலவர்களாலும் சிறப்பித்துப் பாராட்டப் பெறும்

# திருவள்ளுவரின் விலங்கியல் பார்வைத் திறன்


குறளேந்தி ந. சேகர்

செயலாளர்
கலைமகள் தமிழ்க் கல்வி நிறுவனம்,
தட்போன் மியான்மா


திருவள்ளுவர் என்பவரால் இயற்றப்பட்டது. தமிழ் மக்கள், பண்பாடு பெற்றுயர்வதற்குரிய வழிவகைகளை எல்லாம் பரக்க உணர்த்தியுள்ளது திருக்குறள். ஏன் உலக மக்கள் அனைவருமே பண்பாடு பெற்று பிறப்பின் பயனை அடைவதற்கு உரிய வழிவகைகளை எல்லாம் தெளிய உணர்த்தும் ஒரு பொது நூல்; திருக்குறளாம் என்று நாம் துணிந்துக் கூறலாம்.

திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் அரசியல், பொருளாதாரம், தாவரவியல், நீரியல், அறிவியல், மருத்துவம் போன்று பல துறைக் கருத்துக்களையும் உள்ளடக்கி எழுதியுள்ளார். அவற்றுள் "திருவள்ளுவரின் விலங்கியல் பார்வை" திறன் பற்றி சில குறள்களைக் காண்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்பில் அதனை வெயில்போலக் காயுமே**

**அன்பில் அதனை அறம்.** *(குறள்.77)*

என்ற குறளில் எலும்பு இல்லாத உடலையுடைய புழு வெய்யிலில் காய்ந்து அழிந்து விடுவதுபோல அன்பில்லாத உயிர் அறத்தின் முன் தானாகவே காய்ந்துவிடும் என்று உவமைக்காட்டி கூறுகின்றார். எறும்பு, புழு முதலியவை வெய்யிலின் காச்சல் தாங்காதாம். சகல உயிர்களுக்கும் வெய்யில் இன்றியமையாதது. ஆனால், பூச்சிகள், புழுக்கள் வெய்யிலின் வெப்பத்தை தாங்கவில்லை.

ஏனென்றால் அவைகள் எலும்பு இல்லாதவைகள். எலும்பு இல்லாத காரணத்தால் வெய்யிலின் நன்மையை அடைய முடியவில்லை. அறம் செய்து நன்மையடைவதற்காகத்தான் உடலை மனிதன் பெற்றிருக்கிறான். எவன் நன்மை செய்து அன்பை வளர்த்துக் கொள்ள முடியவில்லையே அவன் தன்நலன் கருதி மறம் செய்து அழிகிறான் என்பதாம்.

மேலும் எலும்பில்லாத புழு தன்னியல்பால் வெய்யிலில் சென்று, வெய்யில் தாங்காது உயிர் விடுதல்போல மனிதன் அன்பில்லாத காரணத்தால் தீமை செய்து நல்லோரால் பழிக்கப்பட்டு அழிகிறான் என்பதை புழு பூச்சிகளை உவமைக்காட்டி நமக்கு அறிய வைக்கிறார்கள். அடுத்து, அடக்கமுடைமை அதிகாரத்தில்,

**ஒருமையுள் ஆமைபோய் ஐந்தடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து** *(குறள்.126)*

என்ற குறளில் ஆமையை எடுத்துக் காட்டுகின்றார்கள். ஆமையானது எப்படித் தன் ஓட்டுக்குள் தனக்குத் தீங்கு வரும் என்பதை அறிந்த உடன், நான்கு கால்களையும், தலையையும் உள்ளடக்கிக் கொள்கிறதோ, அதுபோல், தனக்கு இழிவு வரும் என்று அறிந்தவுடன் ஒருவன் ஐம்புலன்களையும் அடக்கியாளப் பயிலுவானாயின் அவ்வடக்கம் அவனுக்கு ஏழுபிறவியிலும் பாதுகாவலாய் வந்து துணை செய்யும் என்று ஆமையின் வழி இயல்பை எடுத்துக் காட்டுகின்றார்.

ஒருவனுக்கு அடக்கமின்மை, என்பது வெகுளியால் உண்டாகிறது. வெகுளி ஆசை நிறைவேறாத போது உண்டாகும் ஒரு குணம். எவன் ஆசையை வெல்கிறானோ அவனுக்கு கோபம் இல்லை. கோபமில்லாதவன்தானே அடக்கமுடையவனாய் வாழ்வான். ஆகையால் ஐம்புல அடக்கமாகிய அவா இன்மையையே அடக்கமாக திருவள்ளுவர் சிறப்பித்து, அடக்கம் என்பது வஞ்சகமாக பூனைப்போல் அடங்கி இருப்பது அன்று என்பதை விளக்கினார்.

மேலும், எழுமையும் ஏமாப்பு உடைத்து என்றமையால், அடக்கமானது புகழை மாத்திரம் கொடுப்பதன்று உயிர்க்கு பல பிறவிகளிலும் பாதுகாவலாய்த் துணை செய்வது என்பதையும் வற்புறுத்தி மன அடக்கம் வலியுறுத்த ஆமையை உவமைக்கு எடுத்துக் காட்டுகிறார்கள். அறிதல் அதிகாரத்தில்,

**பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்**

**வேந்தர்க்கு வேண்டும் பொழுது**
*(குறள்.481)*



என்ற குறளில் செயலை மேற்கொள்வதற்கு காலமறிய வேண்டும் என்பதற்கு கோட்டானையும் காக்கையையும் நம் முன்னே கொண்டு வருகின்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். கோட்டானைக் காக்கை பகல்காலத்தில் வென்று விடும். ஆகையால் பகைவர்களை வெல்ல எண்ணும் அரசருக்கு தனக்குச் சாதகமான காலத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டுமாம்.

கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது. அதனால் காகம் கோட்டானைப் பகலில் வென்றுவிடும். காகத்திற்கு இரவில் கண் தெரியாது. கோட்டான் காகத்தை இரவில் வென்றுவிடும். காகமும், கோட்டானும் ஒரே இனத்தைச் சேர்ந்த ஒரே வலியுள்ள பறவைகளாக இருந்த போதிலும் காலத்தின் மாறுபாட்டால் ஒன்றை ஒன்று வெல்லுகிறது. அதுபோல பகையை வெல்ல நினைக்கும் அரசரும் தக்க காலத்தைக் காத்திருக்க வேண்டும்.

சமவலிமையுள்ள பகைவரை வெல்ல வேண்டுமாயின், வலி மிகுந்தவரை வெல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டுமாயினும் தனக்குச் சாதகமான காலத்தைப் பார்த்துச் செயல்பட வேண்டும் என்பதற்கு கோட்டானின் இயல்பையும் காக்கையின் இயல்பையும் நன்கறிந்த திருவள்ளுவர் பறவை விலங்குகளை உவமைக்கு எடுத்துக் காட்டியிருப்பது சிந்தித்து சிந்தித்து மகிழ வேண்டியதாகும். மேலும், அந்த அதிகாரத்தின் கீழ்வரும் மற்றொரு குறளில்,

**ஊக்கமுடையான் ஒடுக்கம் பொருதகர்**

**தாக்கற்குப் பேருந் தகைத்து** *(குறள்.486)*

என்ற குறளில் சண்டைக்கடா விலங்கை உவமைக்கு எடுத்துக் காட்டுகிறார் திருவள்ளுவர். மன எழுச்சியுடையவர் பகைமேல் செல்லாது காத்திருப்பது சண்டைக்கடா வேகமாகத் தாக்குவதற்குப் பின்வாங்கிப் பாய்வது போலாகுமாம். காத்திருக்கும் நேரமெல்லாம் எதிரியை முறியடிப்பதற்கான எண்ணங்களில் சிந்தனையைச் செலுத்த வேண்டும். அதிக பலத்தோடு தாக்குவதற்குக் காலம்வரும் வரை வெற்றிமேல் மனம் இருத்திக் காத்திருக்க வேண்டும். முழுபலத்தையும் ஒரே காலத்தில், ஒரே இடத்தில் செலுத்தி வெற்றி பெற வேண்டும் என்பது உவமானம். வலிமையுடையவன் அடங்கி இருப்பது சண்டைக் கடா முட்டப் பின்னடைவது போலாம். அதே அதிகாரத்தில் பிறிதொரு குறளில்,

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**குத்தொக்க சீர்த்த இடத்து** *(குறள்.490)*

என்ற குறளில் கொக்கை எடுத்துக் காட்டுகின்றார் திருவள்ளுவர். ஒரு செயலைச் செய்யாதிருக்கும் போது மீனைப் பிடிக்க எண்ணும் கொக்கு இருப்பது போல் காலம் வரும்வரை அடங்கி இருக்க வேண்டுமாம். நேரம் வாய்த்தவுடன் கொக்கு மீனைக் கவ்விப் பிடிப்பது போலச் செயலை முயன்று செய்து முடிக்க வேண்டுமாம்.

கொக்கு எவ்வாறு அசையாது காத்திருந்து மீன் வந்த அந்த நேரத்தில் சரேலெனப் பாய்ந்து பிடிக்கிறதோ, அதுபோல ஒரு வினையைச் செய்ய ஆரம்பிக்கும் காலம்வரும் வரை காத்திருந்து சந்தர்ப்பம் வந்த அந்தச் சமயத்திலேயே நழுவ விடாமல் முயற்சி குன்றாது வினையைச் செய்து முடிக்க வேண்டும். கொக்கு வினை செய்வானுக்குத் தொழில் உவமை. ஆகையால் கொக்கு மீன் வரும் சமயத்தையும், இடத்தையும் நழுவ விடாது இறுகப் பிடிப்பது போல வினைச் செய்வானும் வெற்றி வரும் சமயத்தையும், இடத்தையும் நழுவவிடாது உள்ளத்தில் அதே கருத்தாக அமைதியாகக் காத்திருக்க வேண்டும் என்பதாகும். அடுத்து, இடனறிதல் அதிகாரத்தில்,

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**

**நீங்கின் அதனைப் பிற.** *(குறள்.495)*

என்ற குறளில் நீர்பாழ் விலங்கான முதலையின் இயல்பை எடுத்துக் காட்டுகிறார் திருவள்ளுவர். ஆழமான நீர் நிலையில் முதலையானது பிற மிருகங்களை வெல்லும். ஆனால் நீர்நிலையை நீக்கி தரைக்கு வந்தால் பிற மிருகங்கள் முதலையைக் கொன்றுவிடும். தரையிலே வாழும் மிருகங்கள் தண்ணீரில் நிலைத்து நின்று முதலையோடு சண்டை போட முடியாது. அதனால் முதலை அந்த மிருகங்களை வென்று விடுகிறது.

தரையிலே முதலை இயங்க முடியாது. அதனால் பிற மிருகங்கள் முதலையை வென்று விடும். இடம்தான் முதலையின் வெற்றிக்கும் தோல்விக் காரணமாக இருக்கிறது. அதுபோல் எதிரியை வெல்வதற்கும் இடம்தான் காரணம் என்பதையும் பகைவன் தோல்விக்குரிய இடம் நோக்கி செயல்பட வேண்டும் என்பதை நீர்வாழ் விலங்கான முதலையை கொண்டு வந்து காட்டுகின்றார்கள். சுற்றம் தழால் என்ற அதிகாரத்தில்,

**காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்**

**அன்னநீ ரார்க்கே உள** *(குறள்.527)*

முன் குறள்களில் விலங்குகளின் இயல்புகளை, நிலைகளை, செயல்படும் தன்மைகளை நமக்கு உவமைக்காக எடுத்துக் காட்டியுள்ளார்கள். இக்குறளில், காகத்தின் செயலை, நல்ல பண்பை அப்படியே பின்பற்றச் செய்கின்றார்கள், கடைபிடிக்கக் கூறுகின்றார்கள் அதாவது, காக்கைகள் தமக்கு இரை கிடைத்தவுடன் அதனை மறைக்காமல் கரைந்து கத்தி தமது இனத்தை அழைத்து அதனோடு உண்ணுமாம். அதுபோல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனும் தனக்குக் கிடைத்த பொருள்களில் மறைக்காமல் மற்றவர்க்கும் பகிர்ந்து கொடுத்து இன்பப்பட வேண்டும்.

விலங்குகளில் நாய்களின் செயல்களை பெரும்பாலும் நாம் கண்டிருக்கலாம். நாய்கள் தனக்குக் கிடைத்த இரையை தான் மட்டும் விரைந்து விரைந்து வஞ்சகமாக உண்ணும். தான் பெற்ற நாயாக இருந்தாலும் கிட்டவரவிடாமல் குரைத்து, கத்தி, கடித்து விரட்டிவிட்டு தான் மட்டும் எல்லாவற்றையும் தின்றுவிடும். பசுமாடு, எருமைப் போன்ற விலங்குகளும் இரைகள் கிடைத்தவுடன் தன் இனத்தை அழைக்காமல் தான் மட்டும் வயிரார உண்ணும். ஆனால், காக்கைப் பறவைக்கு அப்படிப்பட்ட வஞ்சக பழக்கம் இல்லை. ஏதாவது உணவைக் கண்டால் காகா வென்று கரைந்து தன் இனத்தோடு பகிர்ந்து உண்டு இன்பமடைகின்றது.

திருக்குறளில் திருவள்ளுவரின் விலங்கியல் பார்வை பற்றிய சில குறள்களைக் கண்டறிந்தோம். இன்னும் ஏராளமான குறள்களில் விலங்கியல் கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றன. யானையைப் பற்றிப் பேசுகிறார், சிங்கத்தைப் பற்றி கூறிகின்றார், புலியின் தன்மைகளைப் பேசுகின்றார். இன்னும் பல விலங்ககளின் தன்மைகளைப் பற்றியும் நமக்கு அரியச் செய்திகளாக தந்திருக்கிறார்கள் வள்ளுவப் பெருந்தகை.

**இனிய நந்தவனம்**
**வாசர்கள் அனைவருக்கும்**
**தித்திக்கும் இனிய**
**பொங்கல் நல்வாழ்த்துக்கள்**
—ஆசிரியர் குழு

விலங்குகளின் இயல்புகள், தன்மைகள், செயல்கள், பழக்க வழக்கங்கள், ஆகியவைகளை தெய்வப் புலவர் திருவள்ளவர் தமது அறிவுக் கூர்மையாலும் சிந்தனை திறனாலும் (2000) ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்திருப்பதை சிந்திக்கும் போது திருவள்ளுவரின் நுண்மான் நுழை புலத்தை வியந்து வியந்து பாராட்ட வேண்டியுள்ளது. திருக்குறளில் திருவள்ளுவரின் விலங்கியல் செய்திகளை திருக்குறள் அறிஞர்கள், அறிவியல் துறை அறிஞர்கள், விலங்கியல் துறை அறிஞர்கள் நூல் முழுவதும் ஆராய்ந்து விலங்கியல் செய்திகளை நூல் வடிவில் தருவார்களேயானால் நூல் சிறக்கும்.

வாசகர்களின் அறிவுக்கு நல் விருந்தாக இருக்கும். திருவள்ளுவருக்கும் பெருமை சேர்க்கும் என்பதில் சந்தேகமில்லை

# மலேசிய தமிழ் எழுத்தாளருக்குப் பாராட்டு

மலேசியாவின் முத்தமிழ் படிப்பகத் தலைவரும், எழுத்தாளருமான பெ.இராமனுக்கு திருச்சியில் அண்மையில் பாராட்டு விழா நடைபெற்றது. மலேசியாவில் தமிழர்கள் இணைந்து தொடங்கிய முத்தமிழ் படிப்பகம் என்ற நூலகத்தில் தற்போது சுமார் 22,000க்கும் அதிகமான தமிழ் நூல்கள் உள்ளன. சுமார் 60 ஆண்டுகள் பழமையான இந்த நூலகத்தின் தலைவராக ராமன் இருந்து வருகிறார். இந்த நிலையில், ராமனின் தமிழ்ச் சேவையைப் பாராட்டி நந்தவனம் பவுன்டேசன், திருக்குறள் கல்வி மையம், கோவிந்தம்மாள் தமிழ் மன்றம் ஆகியன இணைந்து அண்மையில் அவருக்கு திருச்சியில் பாராட்டு விழாவை நடத்தின.



திருக்குறள் கல்விமையத் தலைவர் க. முருகானந்தம் தலைமை வகித்தார். எழுத்தாளர் மழபாடி ராசாராம் முன்னிலை வகித்தார். நந்தவனம் சந்திரசேகரன், கிருஷ்ணமூர்த்தி, சூரியக்குமார், புலவர் தியாகசாந்தன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். கோவிந்தம்மாள் தமிழ் மன்றத் தலைவர் ப.நாகராசன் வரவேற்றார். கவிஞர் ஆங்கரை பைரவி நன்றி கூறினார். எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவுஸ்திரேலியா மெல்பேண் தமிழ்ச் சங்க ஆலோசகர் முன்னாள் கல்வி இயக்குநர், மகாதேவவ ஐயர் ஜெயராமசர்மா அவர்களுடன் நந்தவனம் 20வது ஆண்டு விழா மலருக்கான சிறப்பு நேர்காணல்**

# இலக்கியம் என்பது வாழும் இடத்தையும் அதன் அங்கங்களையும் பிரதிபலித்தே!



**உங்கள் கல்விப்பயணம், கலையிலக்கியப் பயணம் இரண்டும் குறித்துச் சொல்லுங்கள்..**

எனது ஆரம்பக் கல்வி இலங்கையின் மலைநாட்டில் சிங்களப் பாடசாலையில் தொடங்கப் பட்டது. பின்னர் எனது அடுத்த நிலை கல்வி யாழ்ப்பாணத்தில் இந்துக் கல்லூரியில் தொடர்ந்தது. இந்துக் கல்லூரியில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்தெடுத்து பட்டம் பெற்றேன். பட்டம் பெற்ற பின்னர் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராகவும் நாடகத் தயாரிப்பாளராகவும், கிராமிய சமய நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினேன்.

இவ்வேளை ஆசிரியராகத் தேர்வுபெற்று ஆசிரியராகினேன். ஆசிரியராக இருக்கும் வேளை கல்வியியலில் டிப்ளோமாவும், முதுகலைப் பட்டமும் பெற்றேன். இதனால் கல்லூரி முதல்வராகி, ஆசிரியர்களுக்கு ஆலோசகராகப் பதவிகளில் மாறி மாறி இருந்தேன். பின்னர் இலங்கைக் கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்தி உதவிக் கல்வி இயக்குனராகி பின் கல்வி இயக்குனராகினேன்.

பேராதனை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களின் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் பிரிவில் விரிவுரையாளராகவும் கடமை ஆற்றினேன். நாட்டு நிலை காரணமாக புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா வந்தபின்னர் கணினித்துறையிலும், சமூகவியல் துறையிலும் டிப்ளோமா பட்டங்களைப் பெற்று பணியாற்றி தற்பொழுது பணி ஒய்வுபெற்று மெல்பேண் நகரில் வசித்து வருகின்றேன். இதுவரை 10க்கு மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறேன்.

எனது கலை இலக்கியக்கியப் பயணங்களுக்கு எனது கல்வி பின்புலமாக இருந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இலக்கியக் கருத்தரங்குகள், பட்டி மண்டபங்கள், கல்விசார் கருத்தரங்கள், விமர்சன அரங்குகள், நூல் அறிமுக விழாக்கள், கவிதையரங்கங்கள், இலக்கிய மாநாடுகள், யாவற்றிலும் நான் பங்குகொண்டு என்னை நிலைநிறுத்துவதற்கு எனது உயர்கல்வி உதவியது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை செல்லும் பொழுதெல்லாம் யாழ் பல்கலைக் கழத்தில் மாணவர்களுக்கு புலம்பெயர் இலக்கியம் சம்பந்தமாக விளக்கங்களும் விரிவுரைகளும் ஆற்றுவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இலக்கியக்கியப் பயணத்தில் இணைத்துக் கொள்ளுவேன்.

**புலம்பெயர் இலக்கியச் சூழலுக்கும், ஈழத்து இலக்கியச் சூழலுக்கும் காணப்படும் வேறுபாடுகளாக நீங்கள் உணர்பவை..**

புலம்பெயர்ந்த இலக்கியம் பலரின் சிந்தனைகளின் கூட்டமாக அமைகிறது எனக் கருதுகிறேன். உதாரணமாக நான் வசிக்கின்ற அவுஸ்த்திரேலிய நாட்டில் இலங்கை இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, இலக்கியப் படைப்பளர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களின் சிந்தனைகளுடாக வெளிவரும் படைப்புகள் ஈழத்து இலக்கியத்தில் இருந்து வித்தையாசமானதாகவே காணப் படுகின்றன.

தாங்கள் வாழும் சூழ்நிலைகளை மையமாகக் கொண்டே பலரும் தமது படைப்புக்களை வழங்கியும் வருகின்றார்கள். அதேவேளை தமது மண் சார்ந்த பண்பாடு தழுவியும் படைப்புக்களை வழங்கியும் வருகிறார்கள். ஈழத்து இலக்கியம் ஈழத்தை மையப்படுத்தியே பெரும்பாலும் வருவதைக் காண முடிகிறது எனக் கருதுகின்றேன்.

இலக்கியம் என்பது வாழும் இடத்தையும் அதன் அங்கங்களையும் பிரதிபலித்தே வந்திருக்கிறது என்பதை மனதில் இருத்தி இந்த இரு இலக்கியங்கியங்களையும் பார்த்தல் நன்று என்பது கருத்தாகும்.

**ஈழத்துப் படைப்பாளர்களின் நூல்களின் தரம், நூல்களின் ஆயுட்காலம் குறித்த உங்கள் கண்ணோட்டம் என்னவோ..**

ஈழத்துப் படைப்பாளர்களும் அவர்களது படைப்புக்களும் தரமிக்கனவாக இருக்கின்ற படியால்தான் இந்திய இலக்கிய இதழ்கள் பல அவர்களின் படைப்புகளை இன்முகத்துடன் வரவேற்று வெளியிட்டு வருகின்றன. எஸ் பொ என்னும் படைப்பாளியை இந்தியப் படைப்பாளிகள் இன்றும் மதிக்கிறார்கள். அ.முத்துலிங்கம், கணேசலிங்கம், செங்கையாளியான், இலங்கையர் கோன், இளங்கீரன், தெளிவத்தை ஜோசப், முருகபூபதி, ஞானசேகரன், மல்லிகை ஜீவா, சிரித்திரன் சிவஞானசுந்தரம், மாத்தளை சோமு, கவிஞர் மகாகவி, பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் நுகுமான், என்று ஈழத்துப் படைப்பாளர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றுப் பெரும்பதவி வகித்தவரும் ஓரளவு படித்து தமது உணர்வுகளின் உந்துதல்களால் படைக்கின்றவர்களும் ஈழத்தின் இலக்கியத்தை தரம் மிக்கதாக்கி இருக்கிறார்கள். அவர்களால் படைக்கப்பட்ட நூல்கள் பல பொக்கிஷங்களாகும் தகுதி பெற்றிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்க தென்பது எனது கருத்தாகும். தற்பொழுது எழுச்சிமிக்க இளம் பட்டாளம் ஒன்று புறப்பட்டு வந்து ஈழத்து இலக்கிய உலகில் உன்னத படைப்புக்களை உத்வேகத்துடன் தந்து பலரதும் கவனத்துக்கு ஆளாகிவருவதையும் காணமுடிகிறது. அவர்களது ஆற்றல்களால் ஈழத்துப் படைப் பிலக்கியம் வருங்காலத்தில் புதுப்பாதையிலே பயணம் செய்து வெற்றிவாகை சூடும் எனக் கருதுகின்றேன்.

**போருக்குப் பிந்திய ஈழத்தவரின் படைப்புக்கள் எவ்விதம் நகர்கின்றது? அவை சமூகத்திற்குப் போதுமானதா?**

போரானது புதிய பல படைப்புக்களுக்கு உந்து சக்தியாக அமைந்திருக்கிறது என்பதை பல படைப்புகள் பறைசாற்றி நிற்கின்றன எனக் கருதுகின்றேன். போரின் தாக்கம் அதனால் ஏற்பட்ட இழப்புகள், தவிப்புகள், வலிகள், சுமைகள், புலப்பெயர்வுகள் யாவும் போருக்குப் பிந்திய படைப்புக்களுக்கு கருவாகி அவைகள் யாவும் சிறுகதைகளாய், நாவல்களாய், கவிதைகளாய் நாடகங்களாய், ஆவணப்படுத்தும் நூல்களாய், குறும்படங்களாய், வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவைகள் இன்னும் வரவேண்டும் எனக் கருதுகின்றேன்.

சிலர் எழுத அஞ்சுகிற காரணத்தால் இவை சார்ந்த படைப்புகளும் சமூகமட்டத்தில் குறைவாகவே வந்து கொண்டிருக்கின்றன. வருங்காலத்தில் மேலும் பல படைப்புகள் வெளி வந்தால் போதாது என்னும் நிலை இருக்கிறது என்று சொல்ல மாட்டார்கள் என்றே எண்ணுகின்றேன்.

**சந்திப்பு யோ.புரட்சி, இலங்கை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழைப் படிக்கப் போராடும் தமிழினம்

மொழிதான் ஒரு இனத்தின் அடையாளம். மொழியை அழித்தால் அந்த இனமும் அழிந்து போகும், இப்படித்தான் காலந்தோறும் பல இனங்கள் அழிக்கப் பட்டுள்ளன. இன்றும் அழித்தோழிக்கும் வேலைகள் நடந்து கொண்டே இருக்கின்றன

தன் மொழிக்காக உயிரையே கொடுக்கத் துணிந்த ஒரு இனம் உண்டு என்றால் அந்தப் பெருமை தமிழினத்துக்கே சேரும். எத்தனை கலப்படகங்கள் வந்தாலும், எப்படிப்பட்ட அழித்தொழிக்கும் வேலைகள் நடந்தாலும் தன்னைத் தானே புதுப்பித்துக் கொண்டே வாழும் மொழி தமிழ்.

தமிழன் சென்ற உலகின் மூலை முடுக்கெல்லாம் தமிழும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ் வாழ்ந்த போதிலும் தன் தாய் மொழியான தமிழை கற்றுக்கொள்ள போராடிக் கொண்டிருக்கிறது மியான்மா நாட்டில் இளந் தலைமுறை .

நான் கடந்த மாதம் மியான்மா நாட்டிற்கு முதன்முறையாக தமிழ் இலக்கிய விழா நடத்துவதற்கா சென்றிருந்தேன், நீண்ட நெடுங்காலமாக இராணுவ கட்டுப்பாட்டுக்குள் கட்டுண்டு கிடந்த மியன்மா கடந்த ஒரு வருட காலமாகத்தான் ஜனநாயக காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கிறது கடந்த நூற்றாண்டில் 26 லட்சம் தமிழர்கள் இருந்திருக்கிறார்கள்,



அரசியல் நெருக்கடி காரணமாக தமிழர்கள் தாயத்துக்கு திரும்பியவர்கள் போக தற்போது 10 லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் உள்ளனர் என்று வாய்மொழித்தகவலாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர் இதில் பெரியவர்கள் சிறுவர்கள் இளைஞர்கள் பெண்கள் என எல்லோரும் உள்ளடங்குவார்கள்

மியான்மாவில் பர்மியம் தமிழ் ஹிந்தி என எட்டு மொழிகள் பேசப்படாலும் பர்மியா மொழியே தேசிய மொழியாக அங்கிகரிக்கப் பட்டுள்ளது பர்மிய மொழியிலேயே அனைத்து பள்ளிகளும் இயங்குகின்றன, உயர்கல்வியில் மட்டும் இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பிக்கப் படுகிறது .

பர்மிய தமிழ் இளைஞர்கள் தமிழில் நான்கு பேசினாலும் அவர்களுக்குள் பர்மிய மொழியிலேயே பேசிக்கொள்கிறார்கள், சிறுவர் சிறுமியருக்கு தமிழ் தெரியவில்லை. அவர்கள் பர்மிய வழிகல்வியில் படித்து வருவதாலும் வீட்டில் பர்மிய மொழியே பேசப்படுவதாலும் தமிழை அயல்மொழியாகக் கருதுகின்றனர், சென்ற நூற்றாண்டில் அங்கே தமிழ்ப் பள்ளிகள் இருந்தும் பர்மியஆட்சி மாற்றம் அரசியல் நெருக்கடிகளால் தமிழ்ப்பள்ளிகள் நீக்கப் பட்டமையால் தமிழ் கற்கவழியின்றி பர்மிய மொழியையே படித்து அதையே தாய் மொழிபோல எண்ணுகின்றனர்

எனினும் தமிழ் உணர்வாளர்கள் கடந்த சில ஆண்டுகளாக ஆலயங்கள் தோறும் தமிழ் பள்ளிகளை உருவாக்கி தமிழ்வழிகல்வியை நடத்தி இளந்தலைமுறையினருக்கு தமிழ் உணர்வை வளர்த்து வருகின்றனர். தமிழ்க்கல்வி வளர்ச்சி மையம் 75 தமிழ்ப்பள்ளிகளையும், கலைமகள் தமிழ்க்கல்வி நிறுவனம் 50 பள்ளிகளையும் நடத்தி வருகின்றன, திருக்குறள் கழகம் திருக்குறள் வகுப்பு நடத்தி வருகிறது, தமிழகக் கல்வி முறைப்படி மாணவர்கள் தமிழ் கற்றுக்கொள்ள பாட நூல்களும் தயாரிக்கப் பட்டுள்ளது

பர்மிய மொழியில் சரளமாக எழுதும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனால் தமிழைக் கற்க முடியாத நிலையில் பர்மிய மொழியில் தமிழை எப்படி உச்சரிப்பது என்ற விளக்கதோடு பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு தமிழ் கற்றுக் கொடுக்கப் படுகிறது, அதாவது முப்பது நாட்களில் எப்படி ஆங்கிலம் ஹிந்தி கற்றுக் கொள்வது என்ற நமது மொழி அறியும் நூல்களைப் போல அங்கே தமிழ் காற்றுக் கொடுக்கப்படுகிறது.

இப்படி தமிழ் கற்றுக்கொள்ளும் மாணவர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்தால் 5 ஆயிரத்துக்கும் குறைவாகத்தான் இருக்கிறார்கள், தமிழின்மீது பற்றுள்ள பெற்றோர்கள் மட்டுமே தங்கள் பிள்ளைகளை, தமிழ் பள்ளிக்கு அனுப்புகின்றனர் பர்மிய பள்ளியில் படித்த நேரம் போக மாலை நேரத்தில்தான் தமிழ் பள்ளிகள் இயங்குகின்றன. வெறுமனே மொழியை மட்டும் கற்றுக்கொள்ளாமல் பாடமாக முறைப்படுத்தப் பட்டு தேர்வுகள் வைத்து மதிப்பெண்கள் வழங்கி மாணவர்களை ஊக்குவிக்கிறார்கள்.



இவர்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்கள் யார் என்றால் தொடக்க காலத்தில் தமிழ் படித்த முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்களாக கற்றுக் கொடுத்து வருகிறார்கள், இயவர்களுக்கு தனிப்பயிற்சியும் வழங்கப்படுகிறது, பெண்களே பெரும்பாலும் ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.

தேவாரம், திருவாசகம், திருக்குறள், வள்ளலார் பாடல்கள் போன்ற பக்தி இலக்கியங்கள் வாயிலாக பெரும்பாலும் தமிழ் கற்றுக் கொடுக்கப் படுகிறது.

பள்ளிக்கூடம் என்று பார்த்தால் இந்து ஆலயங்களில் ஒரு பகுதியில் வகுப்புகள் அமைக்கப்பட்டிருக்கும் மியாண்மாவில் புகழ் பெற்ற பீலிக்கான் முனிஷ்வரர் ஆலயத்தில் நடத்தப்பட்ட வகுப்பறைக்கு நான் சென்றிருந்தேன், அங்கே வசதி குறைந்த மிகவும் பின்தங்கிய மாணவர்களே கல்வி பயின்று வந்தனர், மியான்மாவில் நகரப்பகுதியில் இருப்பவர்கள் தான் ஓரளவுக்கு வசதியாக இருக்கிறார்கள், கிராமப் பகுதியில் வாழும் தமிழர்கள் விவசாயிகளாகவும் ஆடு, மாடு மேய்ப்பவர்களாகவும் தான் இருக்கிறார்கள்.

அந்தப் பள்ளியில் பயின்ற ஒரு மாணவனிடம் என்ன படிக்கிறாய் என்று கேட்டேன். வாத்தியார் சொல்லித் தருவதை படிக்கிறேன் என்றான், அந்த மாணவனுக்கு பத்து பனிரெண்டு வயதிருக்கும், சரி பள்ளிக்கூடம் போக வேறு என்ன செய்வாய் என்றேன். ஆடு மேய்ப்பேன் என்றான், உன் அப்பா என்ன செய்கிறார் என்றேன் மாடு மேய்க்கிறார் என்றான். மொழியறிவு வளர்ச்சி பெற்ற சமுதாயத்தால்தான் பொருளாதாரத்திலும் முன்னேற முடியும்.

நாமெல்லாம் புதிய கல்வி முறை வேண்டும் என்றும் வேண்டாம் என்றும் கோசமிட்டுக் கொண்டிருக்கிறோம். அங்கே நம் தமிழினம் தாய் மொழியான தமிழை கற்றுக் கொள்ளவே போராடிக் கொண்டிருக்கிறது. தமிழ் உலகை ஆளும் மொழி என்கிறோம், நமக்கு மிக அருகில் உள்ள மியான்மாவில் நம் தமிழினம் தமிழ் படிக்கவும், தமிழ் இலக்கியங்களைப் படிக்கவும் போராடிக் கொண்டிடுகிறது.

இவர்களுக்கு என்ன செய்யப்போகிறோம், சர்வதேச அளவில் தமிழுக்காகவும் தமிழருக்காகவும் அரும்பணிகள் ஆற்றி வரும் தமிழ் அமைப்புகள் மூலம் மியான்மா தமிழருக்காகவும் ஒரு புதிய திட்டத்தை வகுத்து தாய் மொழியை கற்க போராடும் நம் மியான்மா தமிழ் உறவுகளுக்காக ஏதாகிலும் செய்ய முயற்சி செய்வோமே!

**நந்தவனம் சந்திரசேகரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





எல். மனோஜ் சித்தார்த்தன்

இனிவரும் காலம் டிஜிட்டல் கரன்சிகளின் காலம் என்றே சொல்லலாம். ஆம்! நாமறிந்த மனிதர்கள் யாவும் பணத்தை ஒரு பொருளாக பாவித்து அதை அடைய வேண்டும் என்று பெரும் விருப்பம் கொண்டவராக உள்ளனர். ஆனால், உண்மையில் உலகின் பெரு பணக்காரர்கள் என்று அறியப்படுபவர்கள் யாரும் பணத்தை நேரடி இலக்காக கொண்டவர்கள் இல்லை.

பணம் என்னும் வார்த்தைக்கு வாழ்வை வெல்லும் வல்லமை இல்லை. பணம் என்பது ஒரு வங்கியின் கணக்கிலோ, அலமாரிகளிலோ அல்லது பாதுகாப்பு பெட்டகங்களிலோ உட்காந்திருக்கும் ஒரு வாஸ்து என்பதனை பல வெற்றியாளர்கள் அறிந்திருக்கிறார்கள். இவ்வாறான நிலை இருக்க கடந்த நவம்பர் 8ம் தேதி இரவு நம் நினைவில் இனி எப்போதும் அகலாது என்றே சொல்லலாம். 500 மற்றும் 1,000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என மத்திய அரசு அதிரடியாக அறிவித்தது.

கருப்புப் பணத்தை ஒழிப்பது, கள்ளப் பணத்தை புழக்கத்தில் இருந்து ஒழிப்பது விலைவாசியை கட்டுப்படுத்துவது என்பது போன்ற பல காரணங்கள் சொல்லப் படுகின்றன. ஆனால், பொருளாதார வல்லுநர்களின் கருத்துப் படி ரொக்கமில்லாத பணப் பரிவர்த்தனையை அதிகப்படுத்த மத்திய அரசு நினைக்கிறது. இனி கருப்பு பணம் வைத்திருப்பவர்களுக்கும், பதுக்கியவர்களுக்கும் இந்த ரொக்கமில்லா பண பரிவர்த்தனை ஓர் மிகப் பெரிய பேரடியாக இருக்கும்.

அடித்தட்டு மக்கள் நிம்மதியா இருப்பதுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும், பணமில்லா பொருளாதார நடவடிக்கைகள் அதாவது மின்னனு முறையில் பண பரிமாற்றங்ளை மேற்கொள்வது கல்வியறிவு இல்லாத பின் தங்கிய வங்கிக் கணக்கு இல்லாத இன்டர்நெட் பயன்படுத்தத் தெரியாத கிராமப்புற மக்கள் இவற்றை எப்படி பயன்படுத்துவார்கள்?.



இந்தக் கேள்வி நியாயமானவைதான் ஆளால் இந்த விதி விலக்குகளில் இல்லாத எத்தனை பேர் மின்னனு பரிமாற்றங்களில் ஈடுபடுகின்றோம். கணினியையும், ஸ்மார்ட் போனையும் தீவிரமாக பயன்படுத்தும் நாம் பணப் பரிமாற்றங்களை மட்டும் மின்னனு முறையில் மேற்கொள்ள ஏன் தயக்கம் காட்ட வேண்டும்.

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தனது கணினியிலோ அல்லது ஸ்மார்ட் போனிலோ, வாட்ஸ் அப், பேஸ்புக், ட்விட்டர் போன்ற சமூக வலைதளங்களையும் சில விளையாட்டு செயல்களையும் தீவிரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிட்டல் காசு பணம் துட்டு மணிமணி



பயன்படுத்துகிறோம். இவற்றைக் கற்று கொள்ளும் நமக்கு மின்னனு பண பரிவர்த்தனையை கற்றுக் கொள்ள என்ன தயக்கம் இருக்க முடியும்?.

நகர வாழ்க்கையில் தன்னிறைவான பொருளாதார நிலையில் உள்ளவர்கள் பணமற்ற வர்த்தக வாய்ப்புகளை பயன்படுத்தலாம். உயர் மதிப்பிலான ரூபாய் நோட்டுகளை தடை செய்ததற்கு பின்னால் டிஜிட்டல் பணமற்ற பரிவர்த்தனைகளை ஊக்குவிக்க வேண்டும் என்பதனை ஒரு காரணமாக அரசு முன் வைக்கிறது.





ஏன் என்றால் இனிவரும் காலம் தொழில்நுட்பம் வாயிலாகவே சென்று கொண்டிருக்கிறது. மின் கட்டணம் அனைத்து விதமான வரிகள், வங்கி தவணைகள், வீட்டுத் தேவைகள், ரீசார்ஜ்கள் என்பது போன்ற பல செலவுகளை டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளலாம் என்கிற போது பழமையான நடவடிக்கைகளில் இருந்து மாறுங்கள் என்று அரசே சொல்கிறது.

மற்றெந்த வளர்ந்த நாடுகளிலும் இந்தியாவில் புழங்கும் அளவுக்கு கரண்சி புழக்கம் கிடையாது. இதன் காரணமாகவே டிஜிட்டல் பரிவர்த்தனைகளை அரசு ஊக்குவிக்கிறது. ஆன் லைன் மூலமான பரிவர்த்தனைகளில் ஓரளவு பாதுகாப்புத் தன்மை உறுதியானதைத் தொடர்ந்து தற்போது ஆன்லைன் மூலமான பரிவர்த்தனைகள் அதிகரித்துள்ளன.

மத்திய அரசு ரொக்கப் பரிவர்த்தனையை குறைத்துக் கொண்டு டிஜிட்டல் முறையில் மின்னனு தொழில் நுட்பத்தில் கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு வாயிலான பணப் பரிமாற்றத்தை ஊக்குவிக்க திட்டமிட்டுள்ளது. இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முன்னோட்டமாகவே காகிதமில்லா வங்கி பரிவர்த்தனைகளை அரசு ஊக்குவித்தது. *(Paper Less Fund Translation)* டிஜிட்டல் முறையில் மின்னனு தொழில் நுட்பத்தில் பரிவர்த்தனை மேற்கொள்வதால் இந்தியாவில் இணையதளம் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை இரண்டு மடங்காக உயரும் என அரசு ஆய்வு தெரிவிக்கின்றது. இந்தியாவில் இணையதள சந்தை மிக வேகமாக வளர்ந்து வருகின்றது.

புதிய பயனாளர்கள் 75% பேர் கிராமப்புற பயனாளியாக இருப்பர். மத்திய அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் படி குகூள் *(Google)* நிறுவனத்துடன் இணைந்து இந்தியாவில் அதிவேக இலவச வை-பை வசதியை வழங்கி வருகின்றது. மாநில அரசும் தன் பங்கிற்கு மக்கள் அதிகம் கூடும் இடங்களில் இந்த சேவையினை அளிக்கின்றன. இந்நிலையில் மத்திய அரசின் ரூபாய் நோட்டு வாபஸ் அறிவிப்பால் மக்களிடையே டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்கு விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது.

டிஜிட்டல் பண பரிவர்த்தனைக்கு இணையதளம் என்பது முக்கியம் என்பதால் அரசின் "இலவச வைபை" திட்டத்தினை அதிகப்படியான மக்கள் பயன்படுத்துகின்றனர். கனினியில் துவங்கிய இணைய பயன்பாடு தற்போது மொபைல் போன் வரை விரிவடைந்துள்ளது. நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங், பயிண்ட ஆப் சேல், இ-வேலட் போன்ற டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் அதிகரித்துள்ளன.

இந்தியாவில் சாதாரண செல்பேசி முதல் ஸ்மார்ட் போன் வரை உலக அளவில் அமெரிக்கா, சீனாவுக்கு அடுத்தபடியாக அதிகம் பயன்படுத்தும் நாடு நம் நாடுதான். சுமார் 20 கோடி மக்களிடம் ஸ்மார்ட் போன்கள் இந்தியாவில் புழக்கத்தில் உள்ளன. 2016 மே மாத ரிசர்வ் வங்கியின் புள்ளி விபரங்கள் படி இந்தியாவில் சுமார் 2கோடிக்கும் மேற்பட்டவர்கள் கிரெடிட் கார்டு பயன்படுத்துகிறார்கள். மேலும் 57 கோடி பேர் டெபிட் கார்டுகள் பயன்படுத்துகிறார்கள். ஆனால் மொபைல் போன் மூலமான பண பரிவர்த்தனையின் செயல்பாடு 0.3 சதவீதம் தான். பழைய ரூபாய் நோட்டு செல்லாது என மத்திய அரசு அறிவித்தது. இதன் காரணமாக பணப் புழக்கம் குறைந்து அன்றாட செலவுக்கே மக்கள் தவிக்கும் நிலை உருவாகி உள்ளது.

இந்நிலையில் நாடு முழுவதும் பணமில்லாத வர்த்தக பரிவர்த்தனைளை ஊக்குவிக்க மத்திய அரசு முனைகின்றது. "சர்காரி" என்ற பெயரில் ஒரு மொபைல் ஆப்பை மத்திய அரசு உருவாக்கி வருகின்றது. இந்த ஆப்பை பயன்படுத்த மானிய விலையில் ஏழை மக்களுக்கு 'ஸ்மார்ட் போன்' வழங்கவும் அரசு திட்டமிட்டுள்ளது. அடுத்த கட்டமாக ரொக்கமில்லாத பொருளாதாரத்தை பெருக்க அரசு விரும்புகின்றது. தற்போது தொழில் நுட்பத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக கார்டு இல்லாத தொழில்நுட்பம் வளர்ந்து விட்டது.

எப்படி? வங்கி வரைவேலை மற்றும் காசோலை *(Payin Slip, Cheque)* குறைந்து என்.இ.எப்.டி., ஆர்.ஜி.டி.எஸ் *(NEFT, RGTS)* மூலமாக இணையதளத்தில் பணம் அனுப்பும் பழக்கம் வளர்ந்துள்ளது. மேலும் மொபைல் பேங்கிங், இ-வால்ட் போன்றவை நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இ-வால்ட் என்பது பர்சில் பணம் வைத்திருப்பது போன்றது ஆகும். இதை பயன்படுத்த மொபைல் போன் போதும். வங்கிக் கணக்கில் இருந்து வாலட்டுக்கு நாம் தேவையான பணத்தை மாற்றிக் கொள்ளலாம்.

தற்போது ஒருவர் 50 ரூபாய்க்கு பொருட்கள் வாங்கிவிட்டு 2,000 ருபாய் நோட்டை கொடுத்தால் சில்லரை இருக்காது. ஆனால், இந்த வால்ட் முறையில் அந்தப் பிரச்சனை இருக்காது. மேலும் ஒருவருக்கு பணத்தை ரொக்கமாக கொடுக்கும் போது அதை வழங்கியதற்கான தடயம் இமல்லை. ரொக்க பரிவர்த்தனைகளால் கள்ள நோட்டு, கருப்புப் பணம் போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஆனால் தற்போதுள்ள டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளால் அவை தவிர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் 10 கோடிக்கும் அதிகமான சிறுவணிகர்கள் இருக்கின்றனர். இவர்களின் தினசரி விற்பனைகெல்லாம் ரொக்கம் தான் ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் இவற்றை கவனத்தில் கொண்டு சிறு வணிகர்கள் உட்பட ரொக்க வணிகத்தில் இருப்பவர்களின் பிரச்சனையை தீர்க்க அரசு வழி கண்டறிய வேண்டும்.

தொழில்கள் இயங்க தேவையான பணத்தை வங்கிகளில் எடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால் அனைத்து மட்டங்களிலும் எல்லாத் துறைகளும் பெரிதாக இயங்க முடியாத நிலை உள்ளது. பழைய ரூபாய் நோட்டுக்களை மாற்றுவது புதிய ரூபாய் நோட்டுகளை வழங்குவது, ஏ.டி.எம்.கள் இயங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வங்கிகளில் மக்கள் எடுக்கும் பணத்தின் உச்ச அளவு இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். எந்த ஒரு பெரிய திட்டத்தையும் அமல்படுத்தும் போதும் நடைமுறைச் சிக்கல்கள் இல்லாமல் இல்லை. இப்போது இருக்கும் சூழ்நிலையில் மக்களிடம் வாங்கும் சக்தி இருந்தாலும் வாங்குவதை தள்ளிப் போடும் எண்ணம் தான் இருக்கின்றது. தேவை குறையும் போதும், உற்பத்தி அதிகமாக இருக்கும் போதும், உற்பத்தியாளர்கள் விற்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படும் போது பொருட்களின் விலையை குறைக்க முற்படுவார்கள்.

லாபத்தை குறைத்து விற்க நினைப்பார்கள். இதனால் பொருட்களின் விலை குறையும். வங்கிகளில் டெபாசிட் அதிகரிப்பதால் வாரக் கடன்கள் குறைந்து கடனுக்கான வட்டிவீதம் குறைய வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இதனால் பொருட்களின் உற்பத்தி செலவு குறையும். அதோடு விலைவாசி மற்றும் பணவீக்கத்தை குறைக்கும்.

●


## நீலநிலா இதழ் குழுமம், விருதுநகர் மற்றும் கந்தகப்பூக்கள் இலக்கிய அமைப்பு, சிவகாசி இணைந்து நடத்தும்

### ஹைக்கூ நூற்றாண்டு விழா
### ஹைக்கூ கவிதை நூல்களுக்கான போட்டி (2016-2017)

**போட்டிக்கான விதிமுறைகள்**

1. ஹைக்கூ நூற்றாண்டை யொட்டி நடத்தப்படும் இப்போட்டியில், ஹைக்கூ கவிஞர்கள் தங்களின் ஹைக்கூ கவிதை நூல்களின் 2படிகளை அனுப்ப வேண்டும்.
2. எந்த ஆண்டு வெளியான ஹைக்கூ கவிதை நூல்களையும் அனுப்பலாம். நூல்களுடன் தங்களின் புகைப்படம் மற்றும் சுய விவரக் குறிப்புகளையும் இணைத்து அனுப்ப வேண்டும்.
3. ஒரே கவிஞர் ஒன்றுக்கு மேற்பட்ட ஹைக்கூ கவிதை நூல்களை எழுதி வெளியிட்டிருந்தாலும், அந்நூல்களின் 2 படிகளை அனுப்பலாம்.
4. நூல்களின் பிரதி இல்லை என்றால், அந்நூலை ஒளிநகல் (Xerox) செய்து, அந்நகலின் 2படிகளை 'ஸ்பைரல் பைண்டிங்' செய்து அனுப்பலாம்.
5. தேர்வு செய்யப்படும் மூன்று ஹைக்கூ கவிதை நூல்களுக்கு முறையே முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு வழங்கப்படும். மற்றும் 2 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.
6. பரிசு பெறும் கவிஞர்கள் ஹைக்கூ நூற்றாண்டு விழாவில் கௌரவிக்கப்படுவார்கள்.
7. நடுவர் குழுவினரின் தீர்ப்பே இறுதியானது.
8. ஹைக்கூ கவிதை நூல்களை அனுப்ப நிறைவு நாள் : 01.07.2017
9. ஹைக்கூ கவிதை நூல்களை அனுப்ப வேண்டிய முகவரி

16.10.2016 முதல்
16.10.2017 வரை

### நீலநிலா இதழ் குழுமம்
23, க.பி.ச. கிட்டங்கித் தெரு, விருதுநகர் - 626 001. செல் : 94880 01251




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வராது என்றால்...
# வராது தான்!

பணக்காரன், முதலாளி, மிராசு என்போர்
பண்பாட்டில் போதுமென்ற மனம்வ ராது
குணக்கேடன் பண்பாட்டுச் செயலில் பேச்சில்
கொண்டாகும் பக்குவங்கள் குடிவ ராது
இல்லாதற் சொத்தாக இருக்கும் அந்த
இரக்க குணம் எல்லோர்க்கும் புலம்பெய ராது
கல்லாதார் உயர்பழக்க வழக்க மெல்லாம்
கற்றவனின் கணக்குகளில் விடைத ராது!

கண்போன போக்கெல்லாம் காலைப் போக்கி
கடையழிந்தோன் இல்லறத்தை நடத்தவ ராது
எண்ணத்தில் உயர்வுள்ளோன் துன்ப மெல்லாம்
எந்நாளும் தாழ்ந்தொழியும் வாய்த ராது
அத்தியுடன், கொடிக்காலில் வேலை செய்வோன்
அடிமடியின் வெற்றிலையும் 'பூ'த்த ராது
பொத்தி பொத்தி வளர்த்தாலும் தென்னம் பிள்ளை
நெற்றன்றில் புரட்சி செயப் பழுத்த ராது!

மனமாற்றம் செய்வதனை சட்டத் தாலே
மாற்றிவிட எண்ணுவது பயன்த ராது
புனலுமில்லை, மணலுமில்லை, ஆறு காலி
புதுநாத்து, புது நெல்லு வயல்வ ராது
தினந்தோறும் வெட்டுகுத்து கொலையில் கொள்ளை
திருநாட்டின் ஆட்சிக்குப் புகழ்த ராது
மனக் கவலை சமூகத்தை மக்கள் பெற்றால்
மண்டிவிடும் துயரங்கள் விடிவுத ராது!

பிள்ளையுடன் நேரங்கள் செலவி டாமல்
பணச் செலவால் கொஞ்சுவதில் பாசமி ராது
பள்ளிகளில் மனிதராக்கும் பாடம் இன்றேல்
படிப்பதற்குப் பிள்ளைகளே பள்ளிவ ராது
ஓட்டைமிகு சட்டத்தினை வைத்துக் கொண்டு
ஒருநாளும் இந்தியாவில் நீதிவ ராது
வீட்டைசுற்றும் மாமிமரு மகளின், சண்டை
விளைந்திட்டில் 'பெண்ணுரிமை' வெற்றிவ ராது!

பெண்ணோடு சொத்து பண வீட்டைப் பார்க்கும்
பேதைமையால் 'நற்குடும்பம்' பெயர்வ ராது
எண்ணமுயர் ஏழைகளில் பெண்ணைத் தேடும்
எந்தபெருஞ் செல்வனுக்கும் குறைவ ராது
பள்ளிகளில் மனிதனாக்கும் பாடம் இன்றேல்
படிப்புக்கு பெருமைமிகு மதிப்புவ ராது
அள்ளியுண்ட கல்விக்கு வேலை இன்றேல்
அது நாட்டைச் சீர்குலைக்கும் அமைதிவ ராது

பொன்னியின் செல்வன்

# புத்தகத் திருவிழாவில் இனிய நந்தவனம்

படைப்பாளிகளையும், படிப்பாளிகளையும் இணைக்கும் மிகச் சிறந்த பாலமாக அமையும் புத்தகத்திருவிழாவில் இனிய நந்தவனமும் தொடர்ந்து பயணிக்கும் எனும் இனிய செய்தியோடு இக்கட்டுரையைத் துவங்குகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் பதிப்பக ஆசிரியர்கள் நூல்களை தலையில் சுமந்தும், மிதிவண்டியில் சுமந்தும் விற்று வந்தார்கள். பொது மக்களிடையே நூல்களைக் கொண்டு சேர்க்க பல்வேறு யுக்திகளைக் கையாண்டுள்ளனர். தெருமுனை விற்பனை, தள்ளுவண்டி விற்பனை, கடற்கரை நூல் விற்பனை, பூங்கா நூலகம், இலக்கியக் கூட்டங்கள் மற்றும் பொதுமக்கள் கூடுகின்ற இடங்கள் என பல்வேறு முறைகளை நூல்களை விற்பனைக்குக் கொண்டு சென்றார்கள்.

பதிப்பகங்கள் பெருகிவந்த வேளையில் பல்வேறு பெரிய நிறுவனங்கள் முன்வந்து இதற்கென அமைப்புகளை உருவாக்கி "புத்தகக் கண்காட்சி" என அவ்வப்போது சிறிய அளவில் நடத்தி வந்தார்கள். இது காலப்போக்கில் மிகப்பெரிய வெற்றியடைந்து "புத்தகத் திருவிழா"வாக மாறியுள்ளது. இதற்கு நூல் ஆர்வலர்கள் கொடுத்த ஆதரவே மிகப்பெரிய காரணம்.

புத்தகத் திருவிழாவில் வெறும் நூல் விற்பனை மட்டுமல்லாமல், நூல் வெளியீடு, நூல் திறனாய்வு, கருத்தரங்கம், பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் என திருவிழாவாகக் கொண்டாடி வருகிறார்கள். இது வெறும் நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர்வலர்களோடு நின்றுவிடாமல் குழந்தைகளோடு அவர்தம் குடும்பத்தினரையும் அழைத்து வரும் அளவிற்கு மிகப்பெரிய ஆர்வத்தை தூண்டியுள்ளது.

மாவட்ட தலைநகரங்களில் மட்டும் நடத்தப்பட்ட இந்த புத்தகத் திருவிழா தற்போது பல்வேறு நகரங்களிலும் தொடர்ந்து நடத்தப்படுகிறது ஆரோக்கியமான விஷயம் தானே.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற திருச்சி புத்தகத் திருவிழாவில் இனிய நந்தவனம் பதிப்பகத்தின் நூல்களும் இடம்பெற்றிருந்தது. நூல் ஆர்வலர்கள் பெரிதும் வரவேற்பு அளித்திருந்த அத்திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான புத்தகங்களை பார்த்து தேர்ந்தெடுத்து வாங்கிச் சென்றுள்ளார்கள். தினந்தோறும் மாலை நேரங்களில் பிரபல பேச்சாளர்களின் சொற்பொழிவுகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது. எழுத்தாளர்கள் தங்கள் நூலை வெளியிடுவதில் இருக்கும் மிகப்பெரிய சிரமம் அதை எப்படி சந்தைப்படுத்துவது? என்பதுதான்.

அந்தச் சிரமத்தை இதுபோன்ற புத்தகத்திருவிழாவில் தொடர்ந்து பங்கேற்கும் நமது இனிய நந்தவனம் பதிப்பகம் தீர்த்துவிடுகிறது என்று சொல்வதில் பெருமை கொள்கிறோம். நூல் விற்பனை மட்டுமல்ல நூலாசிரியர்கள் பற்றியும் நூல்களைப் பற்றியும் அரங்கில் அவ்வப்போது தெரியப்படுத்துவதால் ஆயிரக்கணக்கான நூல் ஆர்வலர்களுக்கு நூலாசிரியர்களும் எளிதில் அறிமுகமாகின்றார்கள்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் நந்தவனம் சந்திரசேகரன் அவர்கள் எழுதிய "தோல்விகளைத் தோற்கடிப்போம்" நூலினை விழா மேடையில் வெளியிட்டது மக்களிடையே பெரிய ஆர்வத்தைத் தூண்டியது எனலாம். அதன்மூலம் மிகப்பெரிய விற்பனையையும், வரவேற்பையும் அந்நூல் பெற்றதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதுபோன்ற நூல் வெளியீடு, நூல் அறிமுகம், நூல் மதிப்புரை, நூலாசிரியர் அறிமுகம் என பல்வேறு நிகழ்வுகளை சென்னையில் இயங்கும் "மேம் கிரியேஷன்ஸ்" நிறுவனத்துடன் இணைந்து இனிய நந்தவனம் பதிப்பகம் தொடர்ந்து செய்யும் என்பதை பெருமையுடனும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். எழுத்தாளர்கள் அனைவரும் பயன்படுத்தி தொடர்ந்து ஆதரவளிப்பீர்கள் என்று நம்புகிறோம்.

– மணி எழிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்திடுமா? தமிழீழம்



மருத்துவக்கலாநிதி முனைவர்
**வே.த. யோகநாதன்,**
தலைவர், அனைத்துலகத் தமிழ் மாமன்றம்,

இன்றைய ஈழத்தமிழர்கட்கு எது தேவை என எண்ணும் ஒவ்வொரு மனிதனுக்கும் முதலில் வருவது அவர்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டுமென்பதே. ஆம் சிறிலங்கா தமிழீழம் என்ற இரு நாடுகளைக் கொண்ட சிலோன் என்ற தீவு அந்நியர்களின் ஆட்சி ஆக்கிரமிப்பு ஏற்பட முன்பு தம்மைத்தாமே சுதந்திரமாக ஆட்சி செய்தனர். ஆங்கிலேயர்களால் அடிமைப்பட்ட பின் அவர்களின் நிர்வாக ஆட்சி இலகுவாக்குவதற்காக இரு நாடுகளும் இணைக்கப்பட்டு செயல்பட்டது. சிலோன் என்ற தீவு சுதந்திரம் பெற்றபோது சிலோனில் உள்ள தமிழீழம் சிறிலங்காவிற்கு அடிமையாக்கப்பட்டு சிங்கள ஆட்சிக்குட் படுத்தப்பட்டது.

சுதந்திரம் அடைந்த நாள் தொட்டு இன்றுவரை ஈழத்தமிழர்கள் ஏமாற்றப் பட்டவர்களாகவே வாழ்ந்து வரும் அவலநிலை தொடர்கிறது. அண்மையில் முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் நச்சுவாயு கொண்டு அழிக்கப்பட்ட நிகழ்வு வரை சர்வதேசம் மௌனம் கடை பிடிப்பது அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏமாற்றத்தையும் அடைய வைக்கிறது.

இன்றைய ஈழத்தமிழர்கட்கு அவர்கள் தமது தாயகத்தில் உலகத்தையும் ஈழத் தமிழர்களையும் ஏமாற்றும் பேச்சுவார்த்தை அல்ல. அவர்கள் தம்மைத்தாமே ஆள உலக அங்கீகாரம் ஒன்றே அத்தகைய அங்கீகாரம் உருவாக தமிழீழத்திலும் தமிழகம் உட்பட புலம்பெயர் நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் தமிழீழம் தேவையா? இல்லையா? என்ற ஓர் பொது சன





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கெடுப்பு தேவை. பொதுமக்கள் வாக்கெடுப்பை தமிழீழ மக்களின் விடுதலைக்குரிய பாதையாக உலகை அங்கீகரிக்கச் செய்தல் வேண்டும். பொது வாக்கெடுப்பு என்பது ஈழத்தமிழர்களினதும் உலகத்தமிழர்களினதும் சர்வதேச சனநாயகக் குரலாக ஒலிக்க வேண்டும்.

எது நடந்தால் நமக்கென்ன? யார் ஆண்டால் என்ன? எவர் அழிந்தாலும் எமக்குக் கவலை இல்லை என்று பேசிக்கொள்ளும் அவலநிலையிலிருந்த தமிழகத் தமிழர்களும் உலகத் தமிழர்களும் மாறிட முன்வர வேண்டும். அழிந்து போவது ஓர் இனம், சமூகம் என்றால், அதில் நாமும் ஒருவர் என்பதை நாம் உணர வேண்டும். நமது சமூகத்தின் அவலநிலை பற்றி நாம் சிந்தித்து முடிவெடுக்கத் தவறினால் எதிர்மறை விளைவுகளையே நாம் சந்திக்க வேண்டிய அவநிலை உருவாகும்.

ஈழத்தில் வாழும் தமிழர்கள் பற்றி அங்கு பிரச்சினைகள் ஏதும் இல்லை என்ற மாயத் தோற்றம் உருவாக நாம் காரணமாயிருந்தால், நமது சமுதாயத்திற்கு நாமே செய்யும் துரோகமாகும். இவ்வாறு எண்ணுவது எமக்கு இயல்பு என நாம் நினைத்தால், தாக்குதல்களுக்கு உட்படுபவர்கட்கு மட்டுமே அந்த வலியும் வேதனையும் கொடுமைகளால் ஏற்படும் துயரமும் அவர்கட்கு மட்டுமே புரியும் உணர்வாக அவர்கள் அனுபவிப்பதை மனிதாபிமான உணர்வோடு நமது சிந்தனைகளும் செயல்பாடுகளும் உருவாக வேண்டும்.

திணிக்கப்படும் நிகழ்வுகளை ஒப்புக் கொள்ளப் பட்டதாகக் கூறுவது தவறு. அடக்குமுறைக்கு ஆளாகும் மக்களை ஆதிக்கம் செலுத்தி அமைதி ஏற்படுத்தும் அவலநிலைதான் இன்று ஈழத்தில் நடக்கும் நிலைமை. சமூக அவலத்தின் ஓர் பகுதியாக நிலைமாற்றப்பட வேண்டும். முழுமையான உரிமை உணர்வுடன் கடமை உணர்வும் ஒன்று சேர்ந்தால் மட்டுமே நிலையான, நிம்மதியான அமைதி ஏற்படும். அவ்வாறில்லாமல் அடிமைப்பட்டு மௌனம் சாதிப்பது அவலநிலையை ஏற்றதுபோலாகி விடும். அது மனித மாண்பியல்புகளை சிதைத்து விடும்.

விட்டுக்கொடுத்தும், விலகி நடந்தும், தட்டிக்கேட்டும் ஈழத்தமிழர்கள் செய்த எந்த முயற்சியையும் சர்வதேசம் அங்கீகரிக்காமல் அடிமையாக வாழப் பிறந்தவர்கள் நீங்கள் என்று தனித்துவிடப்பட்ட நிலை மாறவேண்டும். சிங்களர்களிடையே கொடுங்கோலர்களும் இறந்த பிணத்தையே புணர்ந்து பார்க்கும் மிருகத்தனமும் ஈவிரக்கமில்லா பாலியல் வல்லுறவும் கை கால்களைக் கட்டிவைத்து சுட்டுக்கொல்லும் இயல்பைத் தவிர வேறு எதனை சிங்களவர்கள் உலகிற்குக் காட்டினார்கள்? அத்தகைய கொடூர இனத்தின் செயல்களுக்கு உந்துசக்தியாகத் திகழும் சர்வதேசம் ஓரளவு மனிதாபிமான நோக்கோடு எங்களைப் பார்க்காதா? என்று ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் ஏங்குகின்ற நிலை மாற வேண்டும்.

அன்பையும் அறத்தையும் போதித்த புத்த பகவானை வணங்கும் சிங்களவர்கள் பேய்கள் போல செயல்படுவதைக் கண்டும், சர்வதேசம் மௌனம் சாதிப்பது ஏன்? தமிழர்களைக் கொன்று குவிப்பதைத் தவிர அமைதி வழியில் தீர்வு காணவேண்டுமென்று எந்தவொரு சிங்களவரும் முன்வரவுமில்லை, வரப்போவதுமில்லை.

சிங்கள அரசியல்வாதிகளிலிருந்து ஆன்மீகவாதிகள் வரை, பத்திரிகையாளர்களிலிருந்து பாமர மக்கள் வரை அமைதிக்குக் குரல் கொடுத்தார்களா? கொடுத்ததுமில்லை, கொடுக்கப் போவதுமில்லை. அமைதி வழியில் பேசுவதற்குப் பதிலாக அடக்குமுறையால் தமிழீழத் தமிழர்களைச் சிதைக்கும் சிறிலங்கா என்னும் சிங்கள நாட்டின் செயல்பாடு மாற்றமடைய வேண்டும். தமிழீழத் தமிழர்கள் என்றுமே சிங்கள இனத்தை அழிக்க முற்படவுமில்லை, முற்படவும் மாட்டார்கள்.

எத்தனை சவால்களுக்கும் முகம் கொடுத்தாலும், எத்தகைய இடையூறுகளை எதிர்கொண்டாலும், எத்தகைய சக்திகளையும் எதிர்த்து நின்று தமிழீழத் தமிழர்கள் எதிர்நீச்சலடித்து ஏற்றம் பெறுவார்கள். தமிழீழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் எதிர்காலத்திற்கான நம்பிக்கை ஊற்றாய் விளங்குவது, அம்மக்களின் எழுச்சியைத் தளமாகக் கொண்ட தமிழ் நிலமும், ஆற்றாத அழுத கண்ணீருடன் மாற்றுவழி தேடி புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களும்தான் என்பதை எவராலும் மறக்க முடியாது.

இலங்கைத் தீவை தமிழீழ மக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான வரலாற்றையும் வளமான பண்பாட்டையும் தமது சிறப்பான குண இயல்புகளையும் கொண்ட ஒரு தேசிய இனமாக வாழ்ந்த தமிழினம் ஈவிரக்கமற்ற, இனவெறி கொண்ட சிங்கள இனத்தின் ஒடுக்கு முறையால் நசிந்து போய் உள்ளனர். இந்த மக்களின் சமாதான வாழ்விற்கும் அல்லலற்ற அமைதிக்கும் ஒரே வழி பிரிந்து போவதைத் தவிர வேறில்லை. எனவே, சனநாயக மீழ்ச்சியில் நம்பிக்கையுள்ள நாடுகளின் நட்பைப் புலம்பெயர்த் தமிழர்கள் பெற்றுத்தர வேண்டும்.

கொரியா, மங்கோலியா, பாக்கியா போன்ற தேசங்கள் முன்பு அனுபவித்தது போன்று பெரிய நாடுகளுக்கிடையே சிக்கிய தேசிய இனமாகத் தமிழீழத் தமிழினம் தத்தளிக்கின்றது. சிங்களவர்களால் சித்தரிக்கப்படுகின்ற ஓர் பொய்யான செய்தி தமிழீழத்தில் வாழும் தமிழர்கள் இந்திய தேசத்தின் தமிழ்நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்ற பொய்யினைப் பரப்பி, பூர்வீகமாக ஆண்ட தமிழினத்தை அழித்து தமிழீழத்தை அபகரிக்க வேண்டுமென்பதற்காகக் கூறப்படும் பொய்யை உலகம் உணர வேண்டும்.

மேற்கு வங்காளிகள், கிழக்கு வங்காளிகளிடையே ஏற்பட்ட இனவெறிப் போராட்டத்தில் பங்களாதேஷ் இன மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்ட இந்தியா, தமிழீழத் தமிழர்களை மட்டும் ஓர் தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளாதது வியப்பிற்குரிய விந்தையே.

தமிழகத்தில் வாழும் தமிழர்கள் மத்தியிலே இன உணர்வு, தன்மான உணர்வு ஏற்பட்டாலே தமிழீழம் சனநாயக ரீதியில் உருவாக வழிபிறக்கும். தமிழகத்து மண்ணில் பிறந்த தமிழர்களின் சொத்தான கச்சத்தீவிலே மீன் பிடித்து, இளைப்பாறி வளமாக வாழ்ந்த தமிழகத் தமிழர்கள் இன்று நூற்றுக்கணக்காக சுட்டுக் கொல்லப்பட்டும் அடி, உதை, சிறைவைப்பு, வலை அறுப்பு, தோணிகள் பறிப்பு ஏற்பட்டும்கூட வாயில்லாப் பூச்சிகளாகவும், விதண்டவாதப் பிரதிவாதம் செய்கின்றவர்களாகவும் தமிழகத் தமிழர்கள் வாழ்கின்றோம்.

முல்லைப் பெரியாறு முடங்கிக் கிடக்கிறது, மூச்சடங்கிக் கிடக்கிறோம். காவிரியாற்றுப் படுகையில் மணல் மாயமாகிறது, மௌனமாக வாழ்கிறோம். அமிழ்தினும் இனிய எம் தாய்மொழி தமிழ் ஆட்சிமொழியாக ஆகவில்லை. நாம் அதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. அந்நிய நிறுவனங்கள் தமிழகப் பூமியின் நீர்வளத்தை நிர்மூலமாக்குகின்றது. நாம் நிதானம் தவறாமல் நிம்மதியாக வாழ்கின்றோமே!

ஈழத்தமிழர்களின் இன்னல்கள் உலகெங்கும் வாழும் 12 கோடி தமிழர்களின் நெஞ்சில் உரமாகி, அவர்களின் சனநாயக விடுதலைக்கு வித்திடப்பட வேண்டும். இரத்தம் சிந்தாத யுத்தமான அரசியல் நெறிமுறைப்படி உலகெங்கும் வாழும் தமிழர்கள் ஒருங்கிணைந்து குரல் எழுப்பவேண்டிய காலம் இது தமிழர்களின் ஒற்றுமையான வாழ்வு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும். மண், மொழி, நாடு இவை மூன்றும் ஒவ்வொரு இனத்தின் குறியீடு மட்டுமல்ல, உயிரும் தான் என்பதை நாம் உணர வேண்டும். பறவைகள் எங்கு பறந்தாலும், தங்கள் சொந்தக் கூட்டில் உறங்க முடிகிறது. விலங்குகள் எங்கு அலைந்தாலும், அவை தாமிருக்கும் இடத்தில் வந்தே உறங்குகின்றன. ஆனால், தமிழீழத் தமிழர்களோ எதிரிகளாக எங்கெங்கோ பரந்த நிலையிலும் அவல நிலையிலும் வாழ்கின்றனர்.

60 ஆண்டுகளாக சிறிலங்கா சிங்களவர்களாலும், 20 ஆண்டுகள் சர்வாதிகாரமிக்க வல்லரசு நாடுகளாலும் அடக்கி ஒடுக்கப்பட்டு அல்லலுற வைத்த தமிழீழத் தமிழர்களின் வாழ்வில் இனிமேலாவது நிம்மதிப் பெருமூச்சு விட வழி பிறக்குமா? செத்தவருக்காக அழுகின்ற உலகில் அழுகின்றவர்களுக்காக செத்த தமிழீழத் தமிழர்களின் தியாகம் வீண்போகக் கூடாது.

ஏதிலிகளாய்ப் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்றபோது பிறமொழி, இன ஆட்சி செய்யும் ஐரோப்பிய நாடுகள் தமிழீழத் தமிழர்களை தமது நாட்டுப் பிரஜைகளாக்குகின்றன. ஆனால், தொப்புள்கொடி உறவு கொண்ட தமிழகத்தில் மட்டும்தான் ஓர் தலைமுறை இந்த மண்ணில் உருவாக்கப்பட்ட பின்பும் ஏதிலிகள் அகதி என்ற அடைமொழியால் அழைக்கப்பட்டு எந்தவிதமான உரிமையற்றவர்களாக அவலநிலை இன்றுவரை தொடர்கிறது. ஆட்சிகள் மாறுகின்றன, காட்சிகள் மாற்றப்படுகின்றது. மீழ்ச்சி மட்டும் எம் தமிழீழத் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊசியின் கண்ணிடைச் சிறுநூல்

பா.தென்றல்

சிற்றிதழ்கள் மலிந்து தோன்றும் நம்நாட்டில்
சில்வண்டுகளாய்ப் பறந்து திரியும்
நம்கண்ணெதிரில், நந்தவனமோ நாற்றிசையும்
இணைக்கும் சிறப்பிதழ்கள் நல்லதொரு
மாற்றம்காண மலரும் வெளியீடுகள்

என்னதான் இருக்கிறது இந்த நூலில்
என்றுதான் சிறகொன்றைப் படித்தேன்
முதலில்கடைசிப் பக்கக் கவிதை
முதலாய் நின்றதென் நினைவில்
கட்டுரைகளில் தன்னம்பிக்கை
மூலதனம் முகிழ்த்ததுமுடிவில்

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு சிறப்பு
ஒற்றை மாடாய் ஓய்வில்லா உழைப்பு
இருபது ஆண்டுகளாய் உருண்டோடும் ரதம்
இளைஞர்களுக்காய் வடம் பிடிக்கும்
நந்தவனம் ஒவ்வொரு நொடியும் பிறக்கும்
இரத்தசெல்கள் கட்டுரைகள்
ஓடிக்கொண்டே இருக்கும் ஆற்றுநீர் கவிதைகள்
ஒரு என்சைக்ளோ பீடியாத் தகவல்கள்
புத்தகம் முழுதாய் ஓயாத கடலலை
எழுத்தாளர்கள் புத்தம்புதிதாய்

நந்தவன இதழ்களுக்கு எல்லைகள்
எதுவும் கிடையாது. நாடுகள் தலைவர்கள்
வித்தியாசம் ஏதும் அறியாது
ஊசியின் கண்ணிடைச் சிறுநூல் போல்
ஊரெல்லாம் சுற்றி வெளிவருமே பெருநூலாய்

எண்ணற்ற பதிப்பகங்கள் எங்கும் உண்டு
எளியோர்க்கு அடைக்கலமாய்
நந்தவனம்தான் உண்டு. சின்னச்சின்னதாய்
எழுதநீ ஆசை கொண்டால் சிற்றாறாய்க்
கலந்துவிடு நந்தவனப் பெருங்கடலில்

அடுத்ததாக இணைந்தே வருகின்றன
நந்தவனச் சிறப்புகளும் நூலாசிரியரின்
மேலான பணிகளும்




திருச்சி மாநகரில் உலவுகின்ற வெள்ளிநிலா
தேய்பிறை எள்ளளவும் காணா அல்லிநிலா
இருபத்துநான்கு மணிநேரமும்
மிளிர்கின்ற ஒளிர்நிலா. இந்தச் சந்திரன்
செல்லுமிடமெல்லாம் இலக்கியத்திருவிழா

ராணுவ முகத்திரை விலக்கிய மியான்மாவிலும்
ராட்சதப் பணத்திரை போர்த்திய சுவிட்சர்லாந்திலும்
ரப்பர்த் தோட்டங்கள் நிறைந்த மலேசியாவிலும்
ரத்த ஆறுகள் ஓடிய இலங்கையிலும்

உன்னத அழகின் சிகரமாம் சிங்கப்பூரிலும்
உலகின் இன்னும் பலப்பல நாடுகளிலும்
இலக்கியப் பெருவிழா நடத்திய நாயகன்
இனிய நந்தவனம் வெளியிடும் வேட்கையன்

நேரமேலாண்மையில் நானறிந்த பிக்பென் இவர்
நேரத்தில் கடமைகள்; நேர்த்தியான ஆசிரியரிவர்
வெண் தாமரையாய் மலர்ந்து சிரித்திடுவார்
வெண்மேகமாய் உலகை வலம் வருவார்

இன்றைய நந்தவனத்தின் இலக்கியப் பணிகள்
என்றென்றுமிவர் பேர் சொல்லும் வரலாற்றில்
இப்பணி இனிதாய் என்றும் தொடரட்டும்
இன்னும் சிறகுகள் புதிதாய் முளைக்கட்டும்.

இலக்கிய வெளியில் பறந்து சிறக்கட்டும்
இருகைகள் தட்டி உலகம் வாழ்த்தட்டும்
வாழ்க தமிழ்மொழி வாழ்க நந்தவனம்
வாழ்த்துகள் சந்திரசேகரன் வாழிய வாழியவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கால இலக்கியச் சூழலில் எழுத்தாளராய், பேச்சாளராய், ஆளுமைத் தன்மையுடன் எல்லோரையும் கட்டிப் போட்டு வைப்பவர் கவிஞர் தங்கம் மூர்த்தி. கல்வியாளர், கவிஞர், பேச்சாளர் என மூன்று தளங்களிலும் தனித்த அடையாளத்துடன் பணியாற்றி வரும் இவரரோடு இனிய நந்தவனம் இருபதாம் ஆண்டு சிறப்பு மலருக்காக சிறப்பு நேர்காணல் செய்ய முடிவு செய்தோம்.

வழக்கமாக சிறப்பு நேர்காணல் என்றால் கேள்விகளை ஆசிரியர் குழுவில்தான் முடிவு செய்வோம். இந்த முறை வாசகர்களே கேள்வி கேட்டால் சிறப்பாக இருக்கும் என்று புதிய முயற்சியாய் நந்தவனத்தோடு தொடர்ந்து பயணிக்கும் நண்பர்களிடம் கேள்விகளை கேட்டுப் பெற்று கவிஞர் தங்கம் மூர்த்தியிடம் கொடுத்தோம். ஒவ்வொரு கேள்விக்கும் மிகச்சிறப்பான பதில்களைத் தந்துள்ளார். வாருங்கள் கருத்தும், கலகலப்பும் நிறைந்த கேள்வி பதிலை சுவைப்போம்.

# சமூகம் என்பது ஒரு வகுப்பறை

**கல்வித்துறை, பேச்சுத்துறை, எழுத்துத்துறை மூன்று குதிரைகளிலும் எப்படி தங்களால் பயணிக்க முடிகிறது?**

*கவிஞர் மு. முருகேஷ் - வந்தவாசி.*

வணக்கம் முருகேஷ்! வெளிச்ச விதைகளை உலகெங்கும் தூவி வரும் சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வலம் வருகிறார். மூன்று குதிரைகளில் பயணிப்பது எனக்கு எளிதாகவே இருக்கிறது. மூன்றும் என் கனவுக் குதிரைகள். என்னைச் சிகரம் நோக்கி அழைத்துச் செல்லும் குதிரைகள். குதிரைகளுக்குள் ஒத்த கருத்தும், உள்மன நேயமும் நிறைந்திருப்பதால் எந்தக் குதிரையும் ஒன்றையொன்று இடறிவிடாமல் ஒரு நேர்க்கோட்டில் என்னை இட்டுச் செல்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **“இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிப்பவை. சாகா வரம் பெற்றவை. எம்மொழியிலும் இல்லாத இலக்கிய வளம் நம் மொழியில் நிறைந்திருக்கிறது.”**



கல்வி - என் கடமை. பேச்சு - என் திறமை. எழுத்து - என் உரிமை. மூன்றும் என்னை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. ஒன்றை மேம்படுத்த மற்றொன்று உதவுகின்றது. என்னை மேம்படுத்த மூன்றுமே உதவுகின்றன.

**எல்லா அரசியல் வட்டத்திலும் இணைந்து இயங்குகிறீர்களே எப்படி?**

*அண்டனூர் சுரா - கந்தர்வகோட்டை.*



எல்லாம் என் நட்பு வட்டம். உங்கள் பார்வையில் அரசியல் வட்டமென அதை அனுமானிக்கிறீர்கள். எல்லா அரசியல் வட்டத்திலும் என் நட்பு மலர்ந்திருக்கும். என் நட்பு வட்டத்தில் எந்த அரசியலையும் நான் அனுமதிப்பதில்லை. மேலும் ஒரு ரகசியம் சொல்கிறேன் சுரா, எந்த எதிர்பார்ப்பையும் எவரிடத்திலும் வைக்காத பட்சத்தில் உங்கள் நட்புக்கு ஒரு குந்தகமும் ஏற்படாது.

நட்பெனப்படுவது அவரவர் கருத்துக்களுடன் அவரவர் இயல்புகளுடன் அவர்களை அப்படியே ஏற்பது. மற்றவர்களில் நல்லதை தரிசிக்கக் கற்றுக்கொண்டால் நட்பை வெல்லலாம். அன்பின் வழியது உயிர்நிலை.

**புதுக்கவிதைக்கும் மரபுக் கவிதைக்கும் உள்ள தொடர்பு என்ன? வித்தியாசம் என்ன?**

*கவிஞர் குழிபிறை கஸ்தூரி நாதன்*

குழிபிறைக்காரர் தேர்ந்த மரபுக்கவிஞர். நினைத்த மாத்திரத்தில் சந்தப் பிழையின்றி மரபில் கவிபாடும் மகத்துவம் பெற்றவர். புதுக் கவிதைக்கும், மரபுக் கவிதைக்கும் தொடர்பு என்பது ‘கவிதை’ தான். வித்தியாசம் என்னவெனில் மரபுக் கவிதையை வெகுகாலம் சொல் மாறாமல் நினைவில் நிறுத்திக் கொள்ள முடியும். புதுக்கவிதையில் அது சாத்தியமில்லை.

கருத்து மட்டும் நினைவிருக்கும். வரிகளை வரிசை மாறாமல் சொல்ல வியலாது. சொற்களுக்குச் சூடேற்றத் தெரிந்தவன் கவிஞனாகிறான். எவ்வடிவத்திலும் கவிதை தான் உயிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டிப் போட்ட புதுக்கவிதைகள் உண்டு. சொற்களின் குவியலாய்க் கிடக்கும் மரபுக்கவிதைகள் உண்டு.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீனக் கவிதை, பின்நவீனக் கவிதை, தலித் கவிதை, பெண்ணியக் கவிதை என காலத்திற்கேற்ப கவிதைகளுக்கு பெயர் சூட்டுவிழாக்கள் நடைபெற்று வருகின்றன. குழந்தை என்பது பொதுப் பெயர் போல கவிதையும் ஒரு பொதுப் பெயரன்றி வேறென்ன!

**உங்களால் எப்படி எல்லா விசயங்களையும் சிரித்துக்கொண்டே ஏற்றுக்கொள்ள முடிகிறது?**

*கவிஞர் சோலச்சி புதுக்கோட்டை.*

துன்ப நினைவுகளும் சோர்வுகளும் பயமுமெல்லாம் அன்பினில் அழியும் என்பார் பாரதி. அன்பிலும், சிரிப்பிலும் அனைத்தையும் வெல்லலாம். அதையும் மீறி பொறாமைச் சொற்களால் பொசுக்கவும், கூர் ஆயுதங்களால் குத்திக் கிழிக்கவும், அர்த்தமற்ற விமர்சனங்களால் அர்ச்சிக்கவும் பலரும் வரிசையில் நிற்பார்கள். அவர்களையும் சிரித்துக்கொண்டே கடந்து போய் விடுவது சாலச்சிறந்தது. அவர்களுக்கு அதுதான் வேலை. நமக்கு அது அல்ல, நாம் போக வேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.

**கல்வித்துறையில் அயல்நாடுகளின் தரத்திற்கு வந்துவிட்டோமா?**

*கவிஞர் ஏகலைவன், சேலம்.*

அயல்நாட்டுக் கல்வியில் தரம் இருப்பதாக என் மனம் ஏற்க மறுக்கிறது. ஒரு கல்வியாளனாக என் பார்வையில் நம் கல்வித் தரம் மிக உயர்ந்திருக்கிறது. நம் நாட்டிற்கும், நம் தமிழகத்திற்கும் அயல்நாட்டிலிருந்து கல்வி கற்க வருவோர் எண்ணிக்கை கூடியிருக்கிறது. அயல்நாட்டுக் கல்வியில் இல்லாத ஒழுக்கம் நிறைந்த கல்வி நம்முடையது.

முன்னொரு காலத்தில் அயல்நாட்டு மோகம் இருந்திருக்கலாம். இன்றைய நிலையில் நம் நாட்டுக் கல்வி மிகச் சிறந்ததாக அயல்நாடுகளில் போற்றப்படுகிறது. அயல்நாட்டுக் கல்வியில் தரப்படுகிற தொழிற்கல்விக்கான முக்கியத்துவம், நம் கல்வியில் இல்லையென்பதைத் தவிர வேறு குறைபாடுகள் நம் கல்வியில் இல்லை.

பல அயல்நாட்டுக் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றவன் என்ற அனுபவத்தில் உரைக்கிறேன், நம் வகுப்பறைகளைப் போல புனிதமான வகுப்பறைகளை நான் எங்கும் கண்டதில்லை. நம் வகுப்பறை நமக்கு கருவறை அவர்களுக்கு அது வெறும் அறை மட்டுமே.

**இலக்கியங்கள் சமூகத்தை சீர் திருத்தும் என்றால் இவ்வளவு இலக்கியங்கள் தோன்றிய பிறகும் சமூகம் குறைபாட்டுடன் இருப்பது ஏன்?**

*வடுவூர் சிவ. புலிவலம்.*

இலக்கியங்கள் காலத்தைப் பிரதிபலிப்பவை. சாகா வரம் பெற்றவை. எம்மொழியிலும் இல்லாத இலக்கிய வளம் நம் மொழியில் நிறைந்திருக்கிறது. சமூகம் என்பது ஒரு வகுப்பறையைப் போலத்தான். 40 பேர் கொண்ட வகுப்பறையில் 10 மாணவர்கள் நன்றாகக் கற்பார்கள். 10 மாணவர்கள் சுமாராகக் கற்பார்கள். 10 மாணவர்கள் கற்க முயற்சிப்பார்கள். மீதி 10 பேர் எது நடந்தாலும் கண்டு கொள்ள மாட்டார்கள். கடைசி 10 பேரைக் கொண்டு அளவிட வேண்டியதில்லை. அவர்கள் கற்கும் திறனிருந்தும் கற்காதவர்கள்.

இலக்கியங்கள் மூலிகை மரங்கள் நிறைந்த வனம் போல. அங்கு நின்று சுவாசிப்பவர்கள் மேம்படுகிறார்கள். திருக்குறளும், ஆத்திச்சூடியும், ராமாயணமும், மகாபாரதமும், பாரதியும், பாரதிதாசனும் இன்னும் உலவிக் கொண்டிருப்பதால் தான் உலகம் உயிர்ப்போடு நகர்கிறது. இலக்கியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமருந்து. அதை உட்கொண்டால் தான் நோய் குணமாகும். மருந்தைத் தவிர்ப்பவர்களுக்கு நோய் குணமாக வாய்ப்பில்லை.

**இன்றைய மாணவர்களுக்கு தமிழ் உணர்வை ஏற்படுத்த என்ன செய்யலாம்?**

*மருத்துவர் வே.தா. யோகநாதன், திருச்சி*

அறிவை பள்ளி தரும். உணர்வைக் குடும்பம் தான் ஊட்ட வேண்டும். வீட்டுக்கு வீடு திருக்குறள் இருக்க வேண்டும். தொலைக்காட்சி அளவுக்கு ஒரு அறிவிப்புப் பலகை வைத்து, அதில் ஒவ்வொரு நாளும் ஒரு திருக்குறளை எழுதி வைக்க வேண்டும். மீண்டும் மீண்டும் கண்ணில் படும் அந்தத் திருக்குறள் அந்த இல்லத்தின் உள் முகத்தை மாற்றிவிடும். மாணவர்கள் மிக மிக நல்லவர்கள். அறிவாற்றல் மிகுந்தவர்கள். நீங்கள் தர விரும்புவது தரமாக இருப்பின் தயக்கமின்றி ஏற்பார்கள். குறைபாடு குடும்பத்திலும் சமூகத்திலும் நிலவுகிறது.

ஒரு பதினோறாம் வகுப்பு மாணவி ஒருவர் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணனிடம் உரையாடிக் கொண்டிருந்தார். அந்த மாணவி உரையாடிய விதத்தையும், அவருக்கு இலக்கியத்தின் மீதுள்ள ஆர்வத்தையும் கண்டு வியந்து போனேன். எஸ்ரா நூல்கள் குறித்து அவரிடம் அந்த மாணவி பேசிய பல செய்திகள் நானே அறிந்திடாதது. பிறகு எஸ்ரா என்னிடம் கூறினார், இந்தப் பிள்ளைகள் தருகிற நம்பிக்கையில் தான் இன்னும் எழுதுகிறேன்.


## வான்புகழ் ஓங்கி வரலாற்றில் வாழ்க

மாதமொரு மகிழ்ச்சிதரும் என் இனிய நந்தவனமே - நீ
மானத் தமிழ் உறவுகளின் கைதவழும் எம்சொந்தவனமே
எழில் கொண்டு எத்திசையும் இனியுன் இறக்கைவிரிப்பே
எல்லோர் இதயத்தையும் ஊடறுத்து உட்கார்ந்துகொண்டாய் தனியிடமே !

பிறர்தனை வாழ்வில் உயர்த்தி உன் வேருக்குநீ நீர் பாச்சினாய்
பிறன்மனை நோக்கா பிராணாயாம பெரும்தவம்தனை இயற்றினாய்
அது எப்படி உன்னால் மட்டும் சனலமின்றிச் சாதிக்க முடிந்தது
அவனியெல்லாம் மணம்பரப்பி அதன் எல்லைதனை தொட்டுவிட..?

இலக்கிய தாகம் கொண்டோர்க்கு நீயொரு வரமானாய்
இலட்சிய தாகம் கொண்டோர்க்கு நீயொரு களமானாய்
இடர் படும் சமூகத்திற்குநீ காட்டுவது இன்னொரு பரிணாமம்
இதனாற் தானன்றோஉன்னைப் பற்றிக்கொண்டது பல கரம்.

பலகோடி தமிழர் கையுன் தலைவருடவேண்டும் - அது கண்டு
சில கோடி சில்லறைகள் உனைச்சேரவேண்டும் - அதனால்
தமிழுக்கும், தமிழர்க்கும் மொழிமகுடம் வேண்டும் - இது கண்டு
உலகத்தார் முதுமொழியாம் எம்மொழியில் முக்குளிக்க வேண்டும் !

ஈர்பத்து ஆண்டுகள் அகவை கடந்ததோ இனியநந்தவனம் இன்று
ஈழமணித் திருநாட்டின் சந்திரசேகரன் ஊற்றிவளர்த்த நந்தவனநாற்று
ஈராயிரம் இதழ் நீவிரித்திட வேண்டும் இது வித்தகன் கூற்று
ஈற்றதனில் இதுநிகழும், வரலாற்றில் தடம்பதிக்கும், என்பதை சாற்று!



இருபது ஆண்டுகளாக இனியநந்தவனம் இதழுக்காக
உழைத்த அத்தனை அன்பு உறவுகளுக்கும்
**சுவிஸ் சுரேஷின்** நல்வாழ்த்துக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நம்முடைய படைப்புகளை அரசுப் பள்ளி மாணவர்களிடம் எப்படிக் கொண்டு போவது?**

*கவிஞர். நிலாபாரதி, புதுக்கோட்டை.*

அரசுப் பள்ளிகளில் ஏற்கனவே நூலகங்கள் உள்ளன. அவற்றைப் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும். அதில் ஆர்வமுள்ள ஒரு ஆசிரியராவது அப்பள்ளியில் இருக்க வேண்டும். நூலக வாசனையை மாணவர்கள் நுகரவேண்டும். பாடப் புத்தகங்கள் தாண்டியும் வாசிக்கும் வழக்கமுள்ள மாணவர்கள் உயரத்தைத் தொடுவார்கள்.

புதிய புதிய புத்தகங்களை மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் அறிமுகப்படுத்தி அதை வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும். ஒரே ஒரு ஆசிரியர் நினைத்தால் இச் சாதனையை நிகழ்த்திவிட முடியும். அவர் யாரோ....?

**கடவுள் வழிபாட்டில் மட்டுமே இருக்கும் தேவார இசையை பாமரனிடமும் கொண்டு செல்ல என்ன செய்யலாம்?**

*கதிர்பாரதி, கிருஷ்ணகிரி.*

பாமரனிடம் தான் கடவுளே இருக்கிறார். இசைக்கு படித்தவன், பாமரன் என்ற பாகுபாடு இல்லை. செவியுடையோர் கேட்பர். தெம்மாங்கு ரசிக்கிற செல்வந்தரையும், தேவாரம் இசைக்கிற பாமரரையும் நான் பார்த்திருக்கிறேன். இசை அவரவர் ரசனை சார்ந்தது. யாரிடத்திலும் புகுத்திவிட இயலாதது. தனக்குத் தேவையான இசையை தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை ஒரு ரசிகனுக்கு உண்டு.

**தாங்கள் கொழும்பு வந்தும் வடகிழக்கு மக்களின் அவல நிலையைப் பார்க்காமல் போய்விட்டீர்களே ஏன்?**

*கவிஞர் ரூபன், இலங்கை.*

தங்கள் அன்புக்கு நன்றி ரூபன்! கொழும்புக்கு ஒரு கல்வி மாநாட்டில் பங்கேற்க அழைத்திருந்தார்கள். என் பயணத் திட்டம் அவர்களால் நிர்ணயிக்கப்பட்டது. மறுமுறை ஒருமுறை அவசியம் வருகிறேன். வடக்கு கிழக்கு மக்களின் அவல நிலையை தங்கள் வழி அறிந்திருக்கிறேன். என்னால் இயன்றதை தங்களோடு இணைந்து செய்கிறேன்.

**இலக்கியச் சண்டைகள் இல்லாத ஆரோக்கியமான இலக்கியச் சூழலை எப்படி உருவாக்கலாம்?**

*கவிஞர் சொர்ணபாரதி, சென்னை.*

சண்டையும், சச்சரவும் புலவர்களின் பரம்பரைச் சொத்து. இலக்கியம் தான் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இலக்கியச் சூழல் ஆரோக்கியமாக இருக்க வேண்டியதில்லை. கருத்து முரண்பாடு உள்ளவர்களால்தான் ஒரு கருத்தை நிறுவ முடியும். போர்களோ, சண்டைகளோ, சிக்கல்களோ இல்லாத பூமியில் இலக்கியத்திற்கு வேலையே இல்லை. ஒரு கவிதை கூட அம் மண்ணில் பூக்காது. இலக்கியச் சண்டைகள் இருந்து கொண்டே இருக்கும். இலக்கியங்கள் மட்டும் நிலைத்திருக்கும். என் எதிரிகள் தான் என்னை எழுத வைக்கிறார்கள்.

**படைப்புகளை விட பழக்கத்திற்குத்தான் அங்கீகாரம் இருப்பது போன்ற ஒரு சூழல் உருவாகி இருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

*முனைவர் கீரைத்தமிழன்*

பழக்கம் தற்காலிகமானது. படைப்பு நிரந்தரமானது. அகிலனுக்கு ஞானபீடம் கொடுத்ததிலிருந்து நேற்று வழங்கப்பட்ட விருதுகள் வரை நீங்கள் நினைப்பது போன்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டுக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். நீண்ட காலத்திற்கு எதையும் தூக்கிப் பிடிக்க இயலாது. படைப்பு தன் தரத்தால், தன் கனத்தால் நிலைபெறும். பாரதியை எந்த விருது காப்பாற்றிக் கொண்டிருக்கிறது?

**தாங்கள் அடிக்கடி சிங்கப்பூர் வந்து போகிறீர்கள், சிங்கப்பூர் இலக்கியம் குறித்து உங்கள் கருத்து என்ன?**

*கவிஞர் உமாபதி, சிங்கப்பூர்.*

எழுத்தாளர்களை, கவிஞர்களை, அறிஞர்களை போற்றிக் கொண்டாடும் தேசமாக நான் சிங்கப்பூரைப் பார்க்கிறேன். சிங்கப்பூரின் புகழ்மிக்க எழுத்தாளர்களின் விருதுகள், பட்டயங்கள், அவர்கள் பயன்படுத்திய காகிதம், எழுதுகோல் அனைத்தையும் சிங்கப்பூர் தேசிய நூலகத்தில் காட்சிப்பொருளாக்கி வைத்திருக்கிறார்கள்.

ஒரு எழுத்தாளரின் வாழ்க்கை பாதுகாக்கப்பட வேண்டியுள்ளது என்று எண்ணுகிறார்கள். நாம் இங்கே உ.வே.சா.வின் வீட்டை இடித்து தரை மட்டமாக்கி விட்டோம்.

சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழக 40ஆம் ஆண்டு விழாவில் பங்கேற்க, அண்ணன் ஆண்டியப்பன் அழைப்பின் பேரில் சிங்கப்பூர் சென்றிருந்தேன். என் தலைமையில் ஒரு கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கில் பங்கேற்ற அனைத்து கவிஞர்களும் மிகுந்த பொறுப்புணர்வோடு கவிதை படைத்தார்கள்.

அவர்களது எழுத்தும், கவி ஆளுமையும் என்னை பிரமிக்க வைத்தது. சிங்கப்பூர் இலக்கியத்தில் நான் பெருமிதம் கொள்வது, அனைத்தையும் ஆவணப்படுத்தும் அவர்களது வரலாற்று பிரக்ஞை. படைப்புகளில் நேர்மையும், உயிர்ப்பும் நிறைந்திருக்கிறது. மொழியை உள்ளத்தில் நிறுத்தி சேதப்படுத்தாமல் வளர்க்கிறார்கள்.

# பாடுவதும் தமிழால் தானே!

அடியேனை ஆட்கொண்ட தமிழே! நன்மை
அறியேனை அடங்கானை அறவோன் ஆக்கிக்
கொடியேனைக் குழையோனைச் செருக்கால் வந்து
கூடானைக் குதிப்பானைக் கொல்வான் தன்னைத்
தடியோனைத் தவறுபல நிகழ்த்து வோனைத்
தாய்மொழியை மதியானைத் தமிழில் கல்வி
படியேனைப் படிப்போரைப் பழிக்கின் றானைப்
பண்பறிந்தோன் ஆக்குவதும் தமிழால் தானே!

கடையேனை அரசு பணி தமிழில் தீட்டிக்
காட்டானைத் தமிழ்பேச நடுங்கு கின்ற
தொடையோனைத் தமிழுக்குத் தாழ்வு நேர்ந்தால்
துடியோனைத் துயர்கொள்ள தானை, அஞ்சும்
நடையேனைத் தக்காரை நசுக்கு வோனை
நலம்பேசா நாவனை நரியின் உள்ளம்
உடையேனை ஊரழிப்பான் செயலை மாற்ற
ஒப்பனைத் திருத்துவதும் தமிழால் தானே!

ஆள்வாரை, ஆளுகின்ற துறைகள் தோறும்
ஆட்டுவிக்கும் தலைமையரைத் தமிழைக் காக்க
நீள்வாரைக் காண்பதுவே நிலத்தின் ஆவல்!
'நீங்காதார் தமிழ் நிழலை' என்று வாழ்ந்து
மாள்வாரை மலை உச்சி கொண்டு சேர்ப்பார்!
மாட்டாரை மன்னிப்பார் இல்லை! அன்னார்
தேள்வார்க்கும் நஞ்சுடையோர் தேடும் நண்பர்
திருந்தியவர் வருவாரும் தமிழால் தானே!

நல்லாளன்! வல்லாளன்! நம்ப வல்லான்!
நட்பாளன் நன்னெறியான்! நடந்தான் என்று
சொல்லாளன் போற்றவொரு துணைவன் ஆகித்
தோற்றோனும் தூங்காத தொழிலோன் போல
எல்லாரும் தமிழ் வணங்கும் எழுச்சி ஊட்ட
ஏற்றபணி உமதென்றே இரு கைக் கூப்பிப்
பல்லாண்டு பல்லாண்டு பணிவோன் ஆகிப்
பாடுவதும் பரப்புவதும் தமிழால் தானே!

முத்தமிழ் கவிஞர் முனைவர்
**ஆலந்தூர் கோ. மோகனரங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையாட்டி பொம்மை



நந்தவனம்
**சந்திரசேகரன்**

கூச்சமாய் இருக்கிறது
நான் தலைவன்
என்பதற்கான தகுதியும்
திறமையும் இருந்தும்
ஏமாளியாய் நிற்கிறேன்

பணநாயகத்திற்கு
பல்லக்கு தூக்கியே
தொலைந்து போனது
ஜனநாயகத்தில்
என் சுயமரியாதை

மூலைச்சலவையில்
மழுங்கடிக்கப்பட்ட
என் உணர்வுகளில்
எறும்புகள் ஊர்கின்றன

கால்கள் தெரிந்த
இடங்களிலெல்லாம்
விழுந்து விழுந்து
அடிமை மனநிலையில்
அடிமாடாய் நிற்கிறேன்

நிரந்தரமற்றது
உண்மை புரிந்தும்
ஊளையிடுகிறது பதவி சுகம்
மீசையிருந்தும்
ஆண்மையற்றவனாய்
அழுது புலம்புகிறது மனம்

என் சுயத்தை
தொலைத்து
வெகுநாளாகி விட்டது

நான் இப்போது
நடைபிணமாய்
ஆட்டிவிட்டால் ஆடும்
தலையாட்டிப் பொம்மையாய்



Owned & Publisher : **T. Chandrasekaran**, No.8, Vellala Street, Woraiyur, Trichirappalli - 620 003.
Printed by : **R. Ravichandran** at New Chitra Printers No.5, Mission Hospital Road, Woraiyur, Trichirappalli - 620 003.
**Editor : T. Chandrasekaran**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமலர்
DINAMALAR
National Tamil Daily

# N.E.W.S.




## NORTH, EAST, WEST, SOUTH - TAMILNADU
## DINAMALAR HAS GROWN BY 47,500 COPIES

The latest ABC Report* shows Dinamalar on an upward trend in almost every city in Tamil Nadu. Increasing its circulation by 47,500*, Dinamalar re-establishes itself as the favourite Tamil daily. Proving once again that the pen is mightier and what people want is fearless true reporting.

* Source: ABC Jan-June 2016.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இனிய நந்தவனம்" 20 வது ஆண்டு மலருக்கு ஆதரவு வழங்கிய கனடிய வர்த்தக அன்பர்கள் சிலர்.


**Punch Sockalingam**
Broker

Century 21
Affiliate Realty Inc. Brokerage -416-290-1200

For All Your Real Estate Needs

**416-786-2463**





**A simple solution in critical situation**

Life100 Insurance & Investments Inc.

Call:
416 918 9771

- Life Insurance
- RESP
- Medical Benefits

**Sritharan Thurairajah**





கனடா வரலாற்றில் எவரும் கண்டிராத சேவை

NEW RANGANAS JEWEL HOUSE
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
6055 Steeles Ave E Unit C102,
Scarborough, ON., M1X 0A7

Tel: 647-702-2159

- தங்க நகை சேமிப்புத்திட்டம்
- கனடாவில் கைராசியான முதல்தர நகை மாளிகை
- சிங்கப்பூர், டுபாய் நகைகள் wholesale & Retailலும் பெற்றுக்கொள்ளலாம்.
- தங்கபிஸ்கட் 24KT அவுஸ்பார் கொயின்ஸ் மிகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- பதிவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் 1 தங்க நாணயம் இலவசம்.
- பழைய தங்க நகைகள் மிகவு கூடிய விலைக்கு வாங்கப்படும்.
- நம்பகரமான கைராசியான ஒரே முதல்தர தங்கநகை விற்பனையாளர்கள்.

நம்பிக்கை நாணயம் கைராசி ஒரே இடம் நியூ ரங்கனாஸ்







COMMUNITY FINANCIAL SERVICE GROUP INC.

INSURANCE - INVESTMENT - MORTGAGES





**V.S. THURAIRAJAH**
**TEL: 647 829 4044**

5310 Finch Ave.E, Suite # 10
Toronto, Ont. M1S 5E8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org